# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

சுடர் 32 கதிர் 293 ஆவணி 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை 15 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

பக்கங்கள்: 28


# இந்தியாவால் வஞ்சிக்கப்பட்டு வீரச்சாவடைந்த தியாக தீபத்தின் நினைவு நாள் இன்று ஆரம்பம்

## தாயக மண்ணில் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்க ஒழுங்குகள்



யாழ்ப்பாணம், செப். 15

அமைதிப் படையாகக் காலடி எடுத்து வைத்து ஆக்கிரமிப்புப் படையாக மாறி ஈழத் தமிழர்களை வேட்டையாடி சூறையாடி அழித்தொழித்த இந்திய இராணுவத்துக்கு எதிராக அகிம்சை வழியில் 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்த லெப். கேணல் தியாக தீபம் திலீபனின் நினைவுநாள் தாயக மண்ணிலும் புலம் பெயர் தேசத்திலும் இன்று ஆரம்பமாகின்றது.

மக்கள் மத்தியில் விடுதலைத் தீயை விதைத்த திலீபன், உணவு ஒறுப்புப் போராட்டத்தை இதேபோன்றதொரு நாளில் 30ஆண்டுகளுக்கு முன்னதாக 1987ஆம் ஆண்டு ஆரம்பித்தார். ஈழத் தமிழரின் தாயக தேசம் எங்கும் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவம் மற்றும் இலங்கை அரசுக்கு எதிராக 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து அகிம்சைத் தீயை நல்லூரில் திலீபன் பற்ற வைத்தார்.

12 நாள்கள் நீராகாரமும் இன்றி உணவு ஒறுப்பை முன்னெடுத்த தியாக தீபம் திலீபன், 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி வீரச்சாவைத் தழுவிக் >> 25

இப்படியே போனால் இலங்கை பன்னாட்டு விசாரணையை எதிர்கொள்ளவேண்டிவரும் என எச்சரித்ததற்காக

# அல் ஹுசைன் மீது விமல் கடும் சீற்றம்

## தகாத வார்த்தையைப் பயன்படுத்தித் திட்டினார்

கொழும்பு, செப்ரெம்பர் 15

இறுதிப் போரில் நடந்த போர்க் குற்ற விசாரணைகளை நடத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவதில் இலங்கை அரசு நம்பகமான நடவடிக்கைகளை எடுக்காமையால் பன்னாட்டு விசாரணையை முன்னெடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் ஜெனிவாவில் எச்சரித்திருந்தார். அவரின் இந்தக் கருத்தால் கடும் சீற்றமடைந்த மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, அல் ஹுசைனை பன்னாட்டு ஆண் விபசாரியென்றும் விமர்சித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முற்பகல் அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எச்சரிக்கைவிடுத்து மனித உரிமைகள் ஆணையாளர் ஆற்றிய உரை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே விமல்வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடுகளை அச்சுறுத்துவதற்குரிய எந்தவொரு அதிகாரமும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனுக்குக் கிடையாது. அவரைப் பன்னாட்டு விபசாரி என்றே கூறவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளராக வேண்டுமென்பதே அவரது கனவாக இருக்கின்றது. அதை அடைவதற்காகவே இலங்கையைக் களமாக, கைம்பொம்மையாகப் பயன்படுத்துவதற்கு முற்படுகின்றார்.

தான் எதைக் கூறினாலும் >> 25

## யாழ்.- மானிப்பாய் - காரைநகர் வீதியை மறுசீரமைக்க ஒப்புதல்

### வேலைகள் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி மறுசீரமைப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. விரைவில் அந்த வீதி சீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், மேற்படி வீதியை மறுசீரமைக்குமாறு கோரிக்கை முன்வைத்திருந்தார். தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கு >> 25

## நல்லூரிலுள்ள தூபியில் நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், செப். 15

தியாக தீபம் திலீபனின் நினைவு நாள், நல்லூரில் உள்ள நினைவுத் தூபியிலும், திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்திய நல்லூர் முன் வீதியிலும் நினைவு கூரப்படவுள்ளது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியால், இன்று காலை 10.10 மணிக்கு தியாக தீபம் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்திய இடத்தில அக வணக்கம் செலுத்தப்படும். அதனைத் தொடர்ந்து. >> 25

பல்கலை. மாணவர்கள் கொலை:

## பொலிஸார் ஐவரும் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 11 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 5 >> 25



அடிக்கடி போய் வந்திருப்பாரோ லெமன் பவ் தம்பி...

## தமிழரசுவின் மையக் குழு செப். 23இல் கூடுகிறது

யாழ்ப்பாணம், செப். 15

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையக் குழுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி அம்பாறையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்பதில்லை என்று அந்தக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் தீர்மானித்திருந்தனர். இந்தத் தீர்மானத்தை அங்கீகரிக்குமாறு கட்சியின் மையக் குழுக் கூட்டத்துக்கு அனுப்பியிருந்தனர். கட்சியின் மையக் குழுக் கூட்டம் கடந்த மாதம் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தபோதும் >> 25

## டில்லிக்கு ஏட்டிக்குப் போட்டியாக பீஜிங்கும் மகிந்தவுக்கு அழைப்பு

கொழும்பு, செப். 15

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை அஸ்திரமாகப் பயன்படுத்தி இலங்கை அரசை ஆட்டுவிக்க புதுடில்லி வகுத்த வியூகத்தை இராஜதந்திரமாக முறியடித்துள்ளது சீனா. இதற்காக பீஜிங் வருமாறு மகிந்த ராஜபக்சவுக்கு அவசர அழைப்பை அந்த நாடு உத்தியோகபூர்வமாக விடுத்துள்ளது.

மகிந்த ராஜபக்சவை அடுத்த மாதம் 14ஆம் திகதி டில்லிக்கு >> 25

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

### யாழ். கச்சேரியடியில் அதிகாலையில் துயரம்

யாழ்ப்பாணம், செப்.15

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று அதிகாலை நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மதிலுடன் மோதி விபத்து நடந்துள்ளது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கிறிஸ்கோ >> 25

## 11 மாதக் குழந்தை காய்ச்சலால் சாவு

யாழ்ப்பாணம், செப். 15

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 11 மாதக் குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்தது.

யாழ்ப்பாணம், பாங்சால் சாலையைச் சேர்ந்த கனிஸ்டன் எஸ்தர் என்ற 11 வயதுக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது. >> 25

## சைட்டம் மருத்துவக் கல்லூரியை கறுப்புப் பட்டியலிட்டது பிரிட்டன்

லண்டன், செப். 15

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை பிரிட்டன் மருத்துவ சபை கறுப்புப் பட்டியலில் இணைத்துள்ளது.

மேலும், பிரேசில், உக்ரைன், லைபீரியா, இந்தியா உள்ளிட்ட 11 >> 25




சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

Vardhana JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து வர்தன ஜூனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000

www.dfcc.lk

DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 20ஆவது திருத்தச் சட்டவரைவால் மாகாண சபைகளுக்குப் பாதிப்பில்லை

## வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

20ஆவது திருத்தச் சட்ட வரைவு தேர்தலை நடத்தும் காலம் தொடர்பான ஒரு விடயமே அன்றி , அதில் மாகாண சபைகளின் அதிகாரத்தில் தாக்கம் செலுத்தும் எந்தவிதமான ஏற்பாடுகளும் கிடையாது. அதனால் மாகாண சபைகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.



20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார். அதில் அவர் தெரிவித்ததாவது:

20ஆவது திருத்தச் சட்ட ஏற்பாடு தொடர்பில் பல குழப்பமான கருத்துக்கள் பரவுகின்றன. . இது ஒரு சிறிய விடயம். அதாவது எதிர்காலத்தில் சகல மாகாண சபைகளின் தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்தும் ஏற்பாடு மட்டுமே. அவ்வாறான ஏற்பாட்டில் தற்போதுள்ள சபைகளின் ஆட்சியின் கடைசி ஆயுள்காலம் உள்ள திகதிக்கு முன்பு, ஒரே திகதியை தீர்மானிக்கும் திருத்தமாகவே அமையும். அவ்வாறு ஒரு திகதி நிர்ணயம் செய்த பின்பு , ஓர் மாகாண சபையை ஆளுநர் கலைத்தால் மட்டுமே அந்த இடைப்பட்ட காலம் மட்டும் நாடாளுமன்ற ஆளுகை எனப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

20ஆவது திருத்தத்தைப் பொறுத்தமட்டில் கூறக்கூடிய ஒரேயொரு குறையாக, 13ஆம் திருத்தத்தில் உள்ள 5 வருட ஆயுள் காலத்தை சில காலம் நீடிக்கப்படுவது மட்டுமே கூற முடியும். அதுவும் ஒரு முறை மட்டுமே நிகழக்கூடிய ஒரு விடயமாகவே காணப்படும். மாகாண சபையின் எந்தவொரு அதிகார மாற்றமும் ஏற்படாது. மாறாக சிலர் உரைப்பது போன்று ஆளுநர் எடுத்து நடத்துவார் , நாடாளுமன்றின் கீழ் சென்றுவிடும் எனக் கூறப்படுவதில் எந்தவித உண்மையும் கிடையாது - என்றார். (ஐ-10, 101)

# லொத்தர் சபையின் தலைவராக சூரியப் பெரும நேற்று நியமனம்

கொழும்பு,செப்.15

அபிவிருத்தி லொத்தர் சபையின் புதிய தலைவராக எஸ்.ஏ.பி.சூரியப் பெரும நேற்று நியமிக்கப்பட் டுள்ளார்.

அரச தலைவரின் பரிந்துரைக்கு அமைய, நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக செயற்பட்ட ரொமேஷ் ஜயவர்தன உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர், கடந்த 31ஆம் திகதி நிதி அமைச்சர் மங்கள சமவீர வால் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர்.

அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் தேசிய லொத்தர் சபை என்பன, நிதி அமைச்சின் கீழ் கொண்டுவர முன்னர் அயலுறவு அமைச்சின் கீழே செயற்பட்டன.

முன்னாள் அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர், இரண்டு லொத்தர் சபைகளும் மீண்டும் நிதியமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவை அமைச்சுப் பதவியில் இருந்து நீங்கியவுடன், தேசிய லொத்தர் சபையின் தலைவராகச் செயற்பட்ட ஷர்மிலா பெரேராவும் தனது பதவி விலகல் கடிதத்தை வழங்கியிருந்தார்.

அதனையடுத்து அபிவிருத்தி லொத்தர் சபையின் புதிய தலைவராக எஸ்.ஏ.பி.சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார்.

கந்தபோல மகிந்த கல்லூரி , போரமடுல்ல மத்திய மகா வித்தியாலயம் மற்றும் மினுவாங்கொட நாலந்தா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாண வரான எஸ்.ஏ.பி. சூரியப் பெரும, வணிக நிர்வாக சிறப்புப் பட்டப்படிப்பை சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிறைவு செய்துள்ளமை குறிபிடத்தக்கது. (ஐ)

# ஜயந்த ஜயசூரியவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு, செப். 15

சட்ட மா அதிபர் ஜயந்த ஜயசூரியவை எதிர்வரும் 20 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்துள்ளது.

முன்னாள் அரச தலைவர் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பலப்பிட்ட ஆகியோர் சார்பில், அவர்களின் சட்டத்தரணிகளால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

அதன் போதே சட்ட மா அதிபருக்கு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்கவால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த அரச தலைவர் தேர்தலின் போது , இலங்கைத் தொலைத் தொடர்பாடல் ஆணைக்குழுவின் 600 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி சில் துணி விநியோகித்தமை தொடர்பான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து, கடந்த 7 ஆம் திகதி லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பலப்பிட்ட ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# வாகன சாரதிக்கு ரூ.13 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி,செப். 15

காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரம் ஆகியவையின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 13 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப் பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரணை செய்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை, காப்பு றுதி மற்றும் வாகன வரியின்றி வாகனம் செலுத்திய இரு குற்றங்களுக்காக 13 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)




# கேப்பாபிலவு போராட்டம் 200 நாள்களை எட்டியது

முல்லைத்தீவு, செப். 15

கேப்பாபிலவுக் காணிகளை விடுவிக்கக் கோரி அந்தப் பகுதி மக்களால் முன்னெடுக்கப் படும் போராட்டம் நேற்றுடன் 200 நாள்களைக் கடந்தது.

இராணுவத்தின் வசமுள்ள 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கேப்பாபிலவு இராணுவ தலைமையகத்துக்கு முன்பாக கூடாரம் அமைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"பல்வேறு சந்திப்புக்கள் நடந்தும் விரைவில் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டாலும், காணிகள் எப்போது விடுவிக்கப்படும் என்று எமக்குத் தெரியவில்லை" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர். (ஐ-10)




பருத்தித்துறைப் பகுதியில் உள்ள அபான்ஸ் காட்சியறை நேற்று அதிகாலை உடைக்கப்பட்டு, அங்கிருந்து பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி2,26)

# மாவட்டச் செயலருக்கு எதிராகத் தனிநபர் ஒருவர் போராட்டம்



நுவரெலியா, செப்.15

நுவரெலியா மாவட்டச் செயலரின் பதவித் துஷ்பிரயோகம், ஊழல் மோசடி என்பன வற்றுக்குக் கண்டனம் தெரிவித்து தனிநபர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நுவரெலியா பகுதியைச் சேர்ந்த பிரதீப் கமால் என்பவர் . நுவரெலியா மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

"நுவரெலியா மாவட்டச் செயலர் எலன் மீகஸ் முள்ளா தனது பதவியைப் பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபட்டுள்ளார். ஊழல் மோசடியிலும் அவர் ஈடுபட்டுள்ளார். அவருக்கு மதுவரித் திணைக்கள ஆணையாளர் பதவியை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஊழல் மோசடிகளைச் செய்யும் அவருக்கு உயர் பதவியை வழங்கக் கூடாது வேறு ஒருவருக்கு அந்தப் பதவியை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# இ.போ.ச., தனியார் பேருந்து பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

வடக்கு மாகாணத்தில் இ.போ.ச மற்றும் தனியார் போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும். தனது தலைமையில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் எம்மிடம் தெரிவித்தார்.

இவ்வாறு யாழ் .மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தனியார் மற்றும் இ.போ.சவினர் இடையே போக்குவரத்தில் ஏற்படும் முரண்பாடுகள் மற்றும் இடையூறுகள் தொடர்பாக தனியார் பேருந்துச் சங்கங்கள் வடக்கு மாகாண முதலமைச்சரை நேற்றுச் சந்தித்தனர். சந்திப்புத் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தனியார் பேருந்துகள் வழித்தட அனுமதி பெறுகின்ற வேளையில் பெறப்படும் கட்டணங்களின் முரண்பாடு தொடர்பாக முதலமைச்சரிடம் எடுத்துக் கூறினோம். வவுனியாவில் 2 கோடி ரூபா செலவில் பேருந்து நிலையம் கட்டியும், திறக்கப்பட முடியாத நிலைமை உள்ளது. அதேபோன்று முக்கியமாக இணைந்த நேர அட்டவணை தொடர்பில் பேசினோம். வவுனியா பேருந்து நிலையத்தை விரைவில் திறந்து வைக்குமாறு கோரிக்கை விடுத்தோம் - என்றார்.

“சந்திப்பில் தனியார் பேருந்துச் சங்கப் பிரச்சினை தொடர்பில் பேசப்பட்டது. அதே நேரம் இதில் இ.போ.ச பேருந்துச் சபை பங்கு பற்றவில்லை. அதன் பிரகாரம் விரைவில் ஓர் கூட்டம் ஏற்பாடு செய்யப்படும். அவர்களுடனும் பேசி தீர்வு எட்ட முயற்சிக்கப்படும் " என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.(ஐ10, 101)

# இரட்டைக் கொலை வழக்கில் 22 வருடங்களின் பின் நால்வருக்குத் தூக்கு

கொழும்பு,செப்.15
22 வருடங்களுக்கு முன்னர் நடந்த இரட்டைக் கொலைச் சம்பவத்தில், 4 குற்றவாளிகளுக்கு கேகாலை நீதிமன்றம் நேற்று சாவுத் தண்டனை விதித்துள்ளது.
கேகாலை மேல் நீதிமன்ற நீதிபதி தம்மிககனேபொல இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.
1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி கேகாலையில் இருவர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அந்தச் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வந்தன.
தற்போது 22 வருடங்களுக்குப் பிறகு குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள் ளது. கைது செய்யப்பட்ட 6 பேரில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு நபருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
ஏனைய நால்வருக்கு எதிராகக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதால் சாவுத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# சிறந்த அரசியல் தெரிவு மக்களின் வாக்குகளில்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 15
சிறந்த அரசியல் தெரிவு மக்களின் வாக்குகளில் தங்கியுள்ளது. எவ்வாறான ஒருவரை அரசியலில் நிறுத்தப் போகின்றோம் என்று மக்களே முடிவு செய்யவேண்டும். தேர்தல் பரப்புரைகளில் கூறப்படும் ஆசை வார்த்தைகளை நம்பி, பயனற்ற ஒருவரை அரசியலுக்குள் கொண்டு வந்து விடாதீர்கள்.
இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தின் நஸீர் அஹமட் தெரிவித்தார்.
ஏறாவூரில் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கான மூன்று மாடிக் கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
சிறுபிள்ளைத்தனமான அரசியல்வாதிகள் சிலர் மக்களிடத்தில் எதைப் பேசுவது என்று தெரியாமல் உளறுகிறார்கள். வாய்க்கு வந்ததையெல்லாம் உணர்ச்சி வசப்படும்படி பேசி மக்களை உசுப்பேற்றி விடுகிறார்கள். அதன் விளைவுகளைக் கொண்டு எதிர்காலத் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்பது அவர்களது நப்பாசை. அத்தகைய குறைமதி அறிவு கொண்டவர்கள் சிறுபான்மையினருக்கான அரசியல் விடிவு என்ன? அதனை அடைந்து கொள்வதற்கான வியூகங்களை எப்படி வகுக்கவேண்டும்? மக்களை எப்படி வழிநடத்த வேண்டும் என்ற அடிப்படை அறிவுகளே இல்லாமல் கொக்கரிப்பதால், நாமும் சிறுபான்மையினம் என்ற வகையில் வெட்கப்பட வேண்டியுள்ளது.
மக்களுக்கு சிறந்த அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி வலியுறுத்த வேண்டியுள்ளது - என்றார். (ஐ-10,46)

# பெருந்தோட்ட மாணவர்களுக்கு சிறிபாதக் கல்வியியற் கல்லூரியில் இம்முறை முன்னுரிமை

## கல்வி இராஜாங்க அமைச்சர் இராதகிருஸ்ணன் தெரிவிப்பு

பதுளை, செப். 15
பெருந்தோட்ட மாணவர்களை சிறிபாத கல்வியியல் கல்லூரிக்கு உள்வாங்கும் நடைமுறையில் எந்த வித மாற்றமும் இல்லை. இந்த முறை அவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
கல்வி இராஜாங்க அமைச்சின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
"சிறி பாத கல்வியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 25 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தக் கல்லூரி முழுமையாக ஜேர்மன் நாட்டின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அந்த அரசுக்கும் எமக்கும் இருந்த அன்றைய ஒப்பந்தத்தின் பிரகாரம் 25 வருடங்களுக்கு முழுமையாகப் பெருந்தோட்ட மாணவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இன்னும் 10 வருடங்களுக்குப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இங்கு முன்னுரிமை வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று அவர் குறிப்பிட்டார். (ஐ-10)

# திண்மக் கழிவகற்றல் வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, செப். 15
மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள திண்மகழிவகற்றல் பிரச்சினை தொடர்பான வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
கடந்த சில வாரங்களாக மட்டக்களப்பில் திண்மக்கழிவகற்றல் பிரச்சினை காணப்பட்டது. இது தொடர்பான வழக்கு நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது இந்த வழக்கு மேலும் 14 நாள்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
"குப்பைப் பிரச்சினை தொடர்பான வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வழக்கு தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குப்பைகளைச் சேகரிப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம். ஆனால் அதைக் கொட்டுவதற்கு எங்களுக்கு இடமில்லை. அவ்வாறு இடமிருக்குமாயின் எதிர்வரும் ஒரு வார காலத்துக்குள் இந்தப் பிரச்சினையை எம்மால் தீர்க்க முடியும்" என்று மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். (ஐ-10)



# அந்தோனியார் சொரூபம் விசமிகளால் உடைப்பு

மன்னார், செப். 15
கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த புனித அந்தோனியார் திருச்சொரூபம், விசமிகளால் நேற்று அதிகாலை உடைத்துச்சேதமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆட்காட்டி வெளி பங்குத் தந்தை அருட்தந்தை டெஸ்மன் அஞ்சலோ அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மன்னார் யாழ்ப்பாணம் முதன்மை வீதி நாயாத்து வழிப் பகுதியில், வீதிக்கு அருகாமையில் இருந்த சொரூபமே உடைக்கப்பட்டது. சுமார் நான்கு அடி உயரத்தில் அமைக்கப்பட்டு, கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த, புனித அந்தோனியார் திருச் சொரூபமே இவ்வாறு உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.
அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸார், சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10-56)

# முல். விநாயகபுரம் பாடசாலையின் வரலாற்றைக் கூறும் நூல் வெளியீடு

முல்லைத்தீவு, செப். 15
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள விநாயகபுரம் கிராமத்தில் இயங்கி வரும் விநாயகபுரம் அ.த.க பாடசாலையின், வரலாற்றைக் கூறும் "மருத மௌலி" நூல் வெளியீடும், பரிசளிப்பு விழாவும் நேற்று நடைபெற்றது.
இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி இ.கலைவாணி தலைமையில் நடைபெற்றது.
அதில் முதன்மை விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன், சு.பசுபதிப்பிள்ளை ஆகியோரும், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர், துணுக்காய் உதவி வலயக்கல்விப்பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-10, 101)





# கமநல சேவை உத்தியோகத்தருக்கு கிளிநொச்சியில் உரமானியப் பயிற்சி

கிளிநொச்சி, செப். 15
மாவட்ட மற்றும் பிரதேச கமநல சேவை அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான உரமானியப் பயிற்சி நெறி, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
அதில் கொழும்பு பல்கலைகழக கணினி மென்பொருள் பொறியியலாளர் திலீப் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரை நிகழ்த்தினார்.
உரமானியப் பயிற்சி நெறி கமத்தொழில் அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.
அதில் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் கடமையாற்றும் கமநல சேவை உத்தியோகத்தர்கள், தேசிய உரமானியச் செயலகத்தைச் சேர்ந்த உதவிப்பணிப்பாளர் கபில திசநாயக்க, தேசிய உரமானிய செயலகத்தின் வவுனிய மாவட்ட உதவிப்பணிப்பாளர் விஜயவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-10, 35)





# தடம்புரண்டது வான்; வர்த்தகர் படுகாயம்

கொழும்பு.செப்.15
வீதியை விட்டு விலகிய வான், பாலத்தில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.
அதில் சாரதி பாடுகாயமடைந்தார். வான் பலத்த சேதமடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்த விபத்து புத்தளம் பழைய மன்னார் வீதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் நடந்தது.
பாலத்துக்குக் கீழாக விழுந்த வான் கடும் சேதத்துக்கு உள்ளானது. விபத்தில் காயமடைந்தவர் வனாதவில்லுவ பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. காயமடைந்தவர் வீதியால் சென்றவர்களின் உதவியுடன், புத்தளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# திருத்தம் செய்யப்பட்டால் மட்டுமே 20ஐ ஏற்போம்

## ஊவா மாகாண முதலமைச்சர் உறுதி



கொழும்பு, 15
20 ஆவது திருத்தச் சட்ட விரைவில் சில தவறுகள் உள்ளன. அதில் திருத்தங்களை மேற்கொண்டு மீண்டும் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டால், அதனை ஏற்பதற்கு ஊவா மாகாண சபை தயாராக இருக்கிறது.
இவ்வாறு ஊவா மாகாண முதலமைச்சர் சாமரசம்பத் தசநாயக்க தெரிவித்தார்.
ஊவா மாகாண சபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் அதில் 20 ஆவது சட்ட வரைவு தொடர்பாக உறுப்பினர்கள் விமர்சனம் தெரிவித்தனர். அதற்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்
"எமது மாகாண சபையில் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தோல்வி அடைந்தமைக்கு, முன்னால் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக் கூறினார். 20 ஆவது சட்ட வரைவில் சில தவறுகள் இருக்கின்றன. அதனால் சபை அன்று சட்ட வரைவை ஏற்கவில்லை. இந்த விடயம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேகவிடம் தெளிவாகக் கூறியுள்ளோம்" என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை ஊவா மாகாண சபையின் ஆட்சியை, இரு வாரங்களுக்குள் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, சபையின் எதிர்க் கட்சித் தலைவர் கூறினார் என்று ஊடகங்களில் செய்தி வெளிவந்தது. அது தொடர்பாக ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சபையில் கேள்வி எழுப்பினர். எதிர்க்கட்சித் தலைவர் சபையில் மன்னிப்புக் கேட்க வேண்மென்று உறுப்பினர்கள் தெரிவித்தனர். அதனால் சபையில் சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது.
"ஊடகவியலாளர் சந்திப்பின் போது என்னால் கூறப்பட்டதாக வெளிவந்த செய்திக்கு மனம் வருந்துகிறேன். ஊடகங்களில் தற்போது வெளிவரும் செய்திகள் குறித்து அலட்டிக் கொள்ளவேண்டாம்" எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.எம். ரட்நாயக்க பதிலளித்தார். (ஐ-10- 41)

# காணாமற்போன பெண் சடலமாக மீட்பு

கொழும்பு, செப்.15
கடந்த இரண்டு வாரங்களாகக் காணாமற் போன குடும்பப் பெண் மலசல கூடக் குழி ஒன்றிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கடுவலை கொதலாவல பட்டியவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதான குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கடந்த இரண்டு வாரங்களாக அவரைக் காணவில்லை என்று, அவரது குடும்பத்தார் நவகமுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# டெங்கு பரவும் வகையில் சுற்றாடலை வைத்திருந்தால் கடும் சட்ட நடவடிக்கை

## நல்லூர் பிரதேச செயலாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்.15
டெங்கு நுளம்புப் பெருக்கத்தைத் கட்டுப்படுத்தும் வகையில் குடியிருப்புகள், காணிகள் மற்றும் பொது இடங்களை துப்புரவாக வைத்திருக்காதவர்களுக்கு எதிராக இந்த மாதம் 20ஆம் திகதிமுதல் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர்ப் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இதுதொடர்பாக மீண்டும் அறிவித்தல்களோ எச்சரிக்கைகளோ வழங்கப்படாது என்றும் அவர் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஏற்கனவே பலதடவைகள் அறிவித்தல்கள், எச்சரிக்கைகள் விடுத்தோம். குடியிருப்பாளர்கள் அக்கறை காண்பிப்பது அரிதாக உள்ளது. நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி முதல் உத்தியோகத்தர்கள் நேரடியாகக் குடியிருப்புக்களைப் பார்வையிடுவார்கள். அசுத்தமாக இருப்பின் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள்.
பொதுமக்கள் தாம் சம்பந்தப்பட்ட குடியிருப்புகள் பொது இடங்கள் காணிகளை துப்புரவாக்க வேண்டும்.
நிறுவனங்கள் தமது பகுதிகளையும் துப்புரவு செய்து கொள்ள வேண்டும்.
எதிர்வரும் 20, 21, 22, 23 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் பிரதேசசபைக்குட்பட்ட பல இடங்களில் அதி காரிகள் டெங்கு பரிசோதனைகளை மேற்கொள்வர்.
அத்துடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றார். (ய)

# இலங்கை இராணுவத்துக்கு வெளிநாடுகள் நற்சான்றிதழ்

## இப்படிக் கூறுகிறார் மைத்திரி

கொழும்பு, செப். 15
இலங்கை இராணுவம் தேசிய ரீதியாகவும், பன்னாட்டு ரீதியாகவும் ஒழுக்கமுள்ள இராணுவமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
இலங்கை இராணுவம் ஏற்பாடு செய்திருந்த நீர்க்காகப் போர்ப் பயிற்சியின் இறுதி நிகழ்வு குச்சவெளியில் நேற்று இடம்பெற்றது.
தலைமை அதிதியாகக் கலந்து கொள்ளவிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சீரற்ற வானிலை காரணமாக பங்கேற்கவில்லை. எனினும், ஸ்கைப் வழியாக அவர் நேரடியாக திரையில் உரையாற்றினார். இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பயங்கரவாதத்துக்கு எதிராக நீண்டகாலம் இடம்பெற்ற போரில் முப்படைகள், பொலிஸ், சிவில் தரப்பு வழங்கிய பங்களிப்பு மூலமே நாங்கள் வெற்றிகொண்டோம்.
புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய பாதுகாப்புத் தொடர்பான அறிவை நாளுக்குநாள் அதிகரித்துக்கொள்ள போர்ப்பயிற்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மருத்துவத்துறை, பொறியியல் துறை ஆகியன நாளுக்குநாள் மாற்றமடைந்து வருகின்றன. முக்கியமாக அனைத்து நாடுகளினதும் பாதுகாப்புத் தரப்பின் தொழில்நுட்ப அறிவு அதிகரித்துள்ளது.
இதுபோன்ற புதிய ஆயுதங்கள், அவற்றை உபயோகிக்கும் அறிவு, தொழில்நுட்ப அறிவு என்பவற்றை அதிகரித்துக்கொள்ள இவ்வாறான போர்ப்பயிற்சிகள் மிக முக்கியமாகவுள்ளன.
நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயத்திலும், வலய பாதுகாப்பிலும் பன்னாட்டுப் பாதுகாப்புப் பிரிவிகளுடனான தொடர்புகள் ஒற்றுமை போன்றன மூலம் எமது இராணுவம் தேசிய, பன்னாட்டு ரீதியில் திறமையான இராணுவமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறான போர்ப்பயிற்சிகள் மூலம் பெற்றுக்கொள்கின்ற புரிந்துணர்வு, அனுபவங்களை நாங்கள் மிக முக்கியமானதாகக் கருதுகின்றோம்.
இந்தப் பயிற்சிநெறியை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவிசெய்தவர்கள், பங்குபற்றிய நட்பு நாடுகள், பயிற்சியில் கலந்துகொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்களையும் நாங்கள் பாராட்டி வரவேற்கின்றோம் - என்றார். (வ-5)

# தொடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு.செப்.15
மட்டக்களப்பு - திராய்மடுப் பிரதேசத்தில் தொடருந்து மோதி ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நடந்தது.
கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்து கொண்டிருந்த இரவு நேரத் தொடருந்து நேற்று அதிகாலை மட்டக்களப்பை வந்தடைந்தது. அந்தத் தொடருந்து மோதி அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
மட்டக்களப்பு திராய்மடு 4 ஆம் குறுக்கைச் சேர்ந்த 48 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
சடலம் மட்டக்களப்பு மருத்துவமனையின் சடல அறையில் வைக்கப்பட்டுள்ளது.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சேவை பாராட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.15
யாழ்ப்பாணம் குருநகர் கிழக்கு முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில், றெக்கிளமேசன் கிழக்கு ஜே/168 கிராம சேவகர் பிரிவில் கிராம சேவையாளராக கடமையாற்றிய கதிர்வேல் நித்தியானந்தனுக்கு சேவை பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இன்று மாலை 4 மணிக்கு சென்றோக் ஆலயத்தில் நடைபெறும் விழாவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

## பொதுநோக்கு மண்டபத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், செப்.15
யாழ்ப்பாணம் கருகம்பானை தமிழ்மன்ற சனசமூக நிலையத்தின் பொதுநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.
பிற்பகல் 12.10 மணிக்கு நகுலேஸ்வரம் கிராம அலுவலகம் முன்பாக நிகழ்வு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

## அரசியல், அறிவியல், சமூகம் நூல் நாளை வெளியீடு

ஆசிரியர் பி.முத்துலிங்கம் எழுதிய அரசியல், அறிவியல், சமூகம் என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஹம்சியா மகால் மண்டபத்தில் நடைபெறும்.
பிற்பகல் 3 மணிக்கு விழா ஆரம்பமாகும்.
ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான நா.சத்தியநாதன் இதற்கு தலைமை தாங்குவார். நூலின் மதிப்புரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அரச அறிவியல்துறைத் தலைவர் கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் வழங்குவார். (ரி)

# நீர்வேலி வாழைக்குலைச் சங்கம் கூட்டுறவுமுறைக்குள் வரவேண்டும்

அச்சுவேலி, செப்.14

நீர்வேலி வாழைக்குலை உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளை முழுமையாகக் கூட்டுறவு முறைமைக்கு மாற்றி அமைத்து செயற்படுவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்படும் நீர்வேலி வாழைக்குலை கூட்டுறவுச் சங்கம் தனித்துவமான ஒரே ஒருசங்கமாகும். சங்கத்தின்சமகாலச் செயற்பாடுகள் கூட்டுறவு முறைமையில் இருந்து விலகி சந்தை முறைமையில் செயற்படுவதாக உறுப்பினர்களால் வலி.கிழக்குப் பிரதேசசபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

நீர்வேலி வாழைக்குலைச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான உயர்மட்டக் கலந்துரையாடல் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் கைதடியில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில்பிராந்தியஉள்ளூராட்சிஆணையாளர், யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், வலி.கிழக்குப் பிரதேசசபை செயலாளர், உள்ளூராட்சித்திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், நீர்வேலிவாழைக்குலைச்சங்கத்தின் தலைவர், செயலாளர், உபதலைவர், முகாமையாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கூட்டுறவுச் சங்கம் வாழைக்குலைச் சந்தை நடைமுறையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள்ளே முற்றுமுழுதாக நிறுத்துவதுடன் வரி அல்லது தரகுப்பணம் அறவிடுவதையும் நிறுத்த வேண்டும்.

கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகளுக்காக கூட்டுறவுச்சங்கங்க விதிகளுக்கு அமையவும், பிரதேசசபை கூட்டவிதிகளுக்கு அமையவும் சேவைக்கட்டணங்களை அறவிடலாம். பிரதேசசபைச் சட்டவிதிகளுக்கு அமையவே கொள்வனவு விற்பனைநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக சங்கத்தின் தலைவர் எம்.திருநாவுக்கரசு தெரிவித்ததாவது:

சங்கத்தின் அண்மைக்காலசெயற்பாடுகளில் சந்தை முறைமை உட்புகுந்து விட்டது. சிலதரகர்களின் தலையீடு தான் காரணம். சங்கத்திற்குப் பொருத்தமான வாகன வசதி உள்ளது. எதிர்காலத்தில் கூட்டுறவு முறைமைக்கு அமைய சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

சந்தை முறைமை மற்றும் தரகர்களின் தலையீடு முற்று முழுதாக இல்லாமல் ஒழிக்கப்படும் எனத் தெரிவித்தார். (ய-11)

## ஆரோக்கிய அன்னைக்கு இன்று கொடியேற்றம்

### 15 வருடங்களுக்குப் பின்னர்

பளை, செப்.15

கத்தோலிக்கர்களின் வரலாற்றுவழிபாட்டுத் தலங்களில்ஒன்றாகத்திகழும்முகமாலை புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தின்வருடாந்த பெருந்திருவிழா 15 வருடங்களுக்குப் பின்னர் இன்றுகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆலய வளாகத்தில் இவ்வருட முற்பகுதியில் சிறிய கட்டடம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்ட ஆலயத்திலேயே திருவிழா நடைபெறுகின்றது.

நாளைமறுதினம் காலை 6.30 மணிக்கு திருநாள் பாடல் பலிபூஜையும், அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

2000ஆம் ஆண்டுக்கு முன்னர்நவநாள்திருவிழாவுக்காக நாட்டின் பலபாகங்களிலிருந்தும் அடியார்கள் வந்துதங்கியிருந்துவழிபட்டனர். அவ்வேளையில் ஆலய வளாகத்தில் பாரிய ஆலயம், குருமடம் உள்ளிட்ட கட்டடங்கள் காணப்பட்டன. 2000ஆம்ஆண்டு போரால் மக்கள் வெளியேறினர். 2002 ஆம் ஆண்டு சமாதானகாலத்தில்சென்று பார்வையிட்டபோது ஆலயத்தின் அனைத்துக் கட்டடங்களும்தரைமட்டமாகக் காணப்பட்டன.

அவ்வேளையில் படையினர் அங்கு முகாமிட்டிருந்ததால் உள்ளே சென்று பார்வையிட முடியவில்லை. ஆலய வளாகம் படையினரின் பாதுகாப்பு அரணுக்குள் அமைந்திருந்ததால் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

படையினர் அங்கிருந்து விலகிய பின்னர் வெடிப்பொருட்கள் அகற்றும்பணிகள் நடைபெற்றன. பிரதேச பங்குத் தந்தையின் முயற்சியினால் ஆலயவளாகத்தில் இந்த வருட முற்பகுதியில்சிறியகட்டடம்அமைக்கப்பட்டு அன்னையின் திருச்சொரூபம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆலயச் சுற்றாடலில் கத்தோலிக்க மக்கள்வாழ்ந்தபகுதிகளில் இன்னமும் வெடிபொருட்கள் அகற்றப்பட்டு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ய-09)

## பரிசளிப்பு விழா இன்று

தென்மராட்சி, செப்.15

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயபரிசளிப்புவிழா இன்று பி.ப.1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் தலைமையில்நடைபெறும் நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராகதென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.ஜெயசேகரம், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் வீ.கருணைலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

## அனலைதீவு மாணவர்களுக்கு கணினிவகுப்புகள்

யாழ்ப்பாணம், செப்.15

அனலைதீவு சமூகநல மன்றத்தின் ஏற்பாட்டில் அப்பகுதி மாணவர்களுக்கான இலவச கணினி பயிற்சி வகுப்புகள் நேற்று முன்தினம் அனலைதீவு சமூகநல மன்ற மண்டபத்தில் ஆரம்பமானது.

பிரதி சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகள் நடைபெறும். அனலை சமூகநல மன்றத்தினால் வருடாந்தம் மாணவர்களுக்கு இலவச கணினிப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ய-9)



## சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாணவனுக்கு துவிச்சக்கரவண்டி

யாழ்ப்பாணம், செப்.15

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் கல்விப்பணித்திட்டத்தின் கீழ், வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி ஒன்று வழங்கப்பட்டது.

இலங்கை தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் பேராசிரியர் நா யோகராசா, மாணவனுக்கு ஆச்சிரமத்தின் சார்பில் துவிச்சக்கர வண்டியை வழங்கி வைத்தார். (ய-173)

## பரிசில்நாள் நிகழ்வு

கைதடி குருசாமி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும், மதிப்புறு விருந்தினராகபரிசில்நிதியஉறுப்பினர்சி.செல்வநாயகமும்கலந்துகொள்வர்எனஅறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

## காரைநகர் பிரதேசத்தில் கேணிகள் துப்புரவாக்கல்

காரைநகர், செப்.15

காரைநகர் பிரதேசத்தில் வறட்சியினால் வற்றி வறண்டு போயுள்ள கேணிகள் மற்றும் குளங்கள் காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தூர்வாரி இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டுவருகின்றது.

அபிவிருத்திச் சபையின் பொருளாளர்பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக காரைநகரில் உள்ள நீலிப்பந்தனைக் கேணி, சடையாளிக் கேணி, சடையாளி தண்டாயுதபாணி கேணி, ஆலடிக்கேணி, திண்ணபுரம் தாமரைக் குளம் என்பன தூர்வாரி இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து ஆலங்கன்று கேணி தூர்வாரிஇறைத்துதுப்புரவுசெய்யவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஏனைய பகுதிகளில்உள்ளநீர்நிலைகளும்துப்புரவு செய்யப்படவுள்ளன.

அவ்வாறு துப்புரவு செய்யும் பட்சத்தில் மாரிகாலத்தில் மழைநீர் நிறைந்துஏனையபிரதேசங்கள் நன்னீராக மாறும் சந்தர்ப்பம் ஏற்படும்என்பதுகுறிப்பிடத்தக்கது. (ய-250)

## சாவகச்சேரியில்முதியோர்விளையாட்டுகோலாகலம்



பன்னாட்டுமுதியோர்தினத்தையொட்டிநடத்தப்பட்ட முதியோர் விளையாட்டுப்போட்டிசாவகச்சேரிடிறிபேக்கல்லூரிமைதானத்தில்கடந்தசெவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அதில் பல பிரதேசங்களையும் சேர்ந்த முதியோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (9)



# கசிப்பை உற்பத்தி செய்ததாக திருநகர் பெண் புதனன்று கைது

கிளிநொச்சி, செப்.15
கிளிநொச்சி திருநகர் வடக்கு பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என மாவட்ட உதவி மதுவரி பொறுப்பதிகாரிநியூட்டன் அவுட்ஸ்பேன் தெரிவித்துள்ளார்.
கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய நேற்றுமுன்தினம் பிற்பகல் குறித்த பகுதியில் சுற்று வளைப்புத் தேடுதலை மேற்கொண்ட அதிகாரிகள் இவரைக் கைதுசெய்தனர். கசிப்பு உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் உபகரங்களையும் மீட்டுள்ளனர். சந்தேகநபரான குறித்த பெண் இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் கசிப்பு, கஞ்சா குற்றங்களில் ஈடுபட்ட 426 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
பலர் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ய-35)

# இயக்கச்சி கேவில் சாலையை சீரமைக்க மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, செப்.15
இயக்கச்சியில் இருந்து வடமராட்சி செல்லும் கேவில் சாலையை சீரமைத்துத் தருமாறு பிரதேச வாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.
இதுபற்றித் தெரிவிக்கப்பட்டதாவது:
யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதிக்கு இயக்கச்சி ஊடாகச் செல்லும் சாலை மிகமோசமான நிலையில் காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.
இந்தச் சாலை தொடர்பாக அனைத்து தரப்பினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. ஆனால் இதுவரை திருத்தப்படவில்லை.
குறிப்பாக எமது பிரதேசத்தில் உள்ள மருத்துவமனை 4 மணியுடன் மூடப்பட்டுவிடும்.
இரவு நேரங்களில் அவசர நோயாளர்களை மருதங்கேணி அல்லது பளை மருத்துவமனைகளுக்கே கொண்டு செல்கின்றோம். இங்கிருந்து மருதங்கேணிக்கு கொண்டு செல்வதானால் 18 கிலோ மீற்றர் செல்ல வேண்டும்.
பளைக்கு கொண்டு செல்வதானால் 20 கிலோமீற்றர் செல்லவேண்டும். ஆனால் சாலைகளோ மிகமோசமான நிலையில் காணப்படுகின்றன.
கர்ப்பிணித் தாய்மார், வயோதிபர்கள் மற்றும் சிறுவர்களை அவசரமாக கொண்டுசெல்ல முடியாதநிலை காணப்படுகின்றது.
எனவே, இதுதொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து மேற்படி சாலையை சீரமைத்துத் தரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-6)



# சுயதொழில் மேம்படுத்த ரூ.10 லட்சம் பெறுமதியான தொழில் கருவிகள் அன்பளிப்பு

கிளிநொச்சி, செப்.15
மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் 23 பயனாளிகளுக்கு 10 லட்சத்து 43 ஆயிரத்து 730 ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி இந்த ஆண்டு தொழில்துறை ரீதியாக கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
அந்தவகையில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 9 பயனாளிகளுக்கு 3 லட்சத்து 91 ஆயிரத்து 730 ரூபா. கண்டாவளையில் 5 பயனாளிகளுக்கு 2 லட்சத்து 49 ஆயிரத்து 50 ரூபா, பச்சிலைப்பள்ளியில் 4 பயனாளிகளுக்கு இரண்டு லட்சம் ரூபா, பூநகரியில் 5 பயனாளிகளுக்கு 2 லட்சத்து 2 ஆயிரத்து 950 ரூபா என்ற ரீதியில் உதவிகள் வழங்கப்பட்டன. மொத்தம் 23 பயனாளிகளுக்கும் 10 லட்சத்து 43 ஆயிரத்து 730 ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.
இதில் தையல் உபகரணங்கள், பனை சார் உபகரணங்கள், வர்ணப் பூச்சு உபகரணங்கள் என தொழில்ரீதியிலான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ய-6)

## அரசியல், அறிவியல், சமூகம் நூல் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.15
ஆசிரியர் பி.முத்துலிங்கம் எழுதிய அரசியல், அறிவியல், சமூகம் என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஹமீசியா மகால் மண்டபத்தில் நடைபெறும்.
பிற்பகல் 3 மணிக்கு விழா ஆரம்பமாகும்.
ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான நா.சத்தியநாதன் இதற்கு தலைமை தாங்குவார். நூலின் மதிப்புரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் வழங்குவார். (ரி)

## நீரியல்வள தகவல் நிலையம் மன்னாரில் நாளை திறப்பு

கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் முதலாவது தகவல் நிலையம் நாளையதினம் மன்னார் மாவட்டத்தில் திறந்து வைக்கப்படவுள்ளதாக மாவட்ட பிரதிப் பணிப்பாளர் டி.எஸ். மெரோண்டா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையிலேயே முதன் முதலாக அமையும் இந்த தகவல் மையமானது மாவட்டத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கும். குறித்த அலுவலகம் 8 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
மேற்படி தகவல் நிலையத்தின் கீழ் மீனவர்கள், மீன்பிடிக் கற்கை நெறியை தொடரும் மாணவர்கள் மற்றும் ஏனையோரும், கடற்றொழில் நீரியல்வளத் துறை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த நிலையம் திறந்து வைக்கப்படும் என்றார். (ய-101)

## முதியவர்களை ஒன்று திரட்டி கலந்துரையாடினார் மஸ்தான் எம்.பி.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முக்கூட்டு அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான காதர் மஸ்தான் ஏற்பாடு செய்திருந்த முதியவர்களுடனான சந்திப்பொன்று நேற்று அவரது காரியாலயத்தில் இடம்பெற்றது. வரவிருக்கும் முதியோர் தினத்தை முன்னிட்டு இது ஏற்பாடு செய்யப்பட்டது.
அங்கு வருகைதந்த முதியவர்களுடன் கலந்துரையாடிய அவர் முதியோர் இல்லங்களை நினைக்கும்போது பெரிதும் மனம்வருந்துவதாகக் குறிப்பிட்டார்.
இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரால் முதியவர்களுக்குசில உதவிகளும்வழங்கி வைக்கப்பட்டன. (ய-21)

# ஆக்கப்பொருள் கண்காட்சி கிளிநொச்சியில் நாளை

யாழ்ப்பாணம், செப்.15
வடக்கு மாகாண கல்வித் திணைக்கள உள சமூக வள நிலையத்தினரின் ஏற்பாட்டில், உயர்கல்வி மற்றும்தொழில் வழிகாட்டலில் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் தொழிற் சந்தையும் நாளையும், நாளை மறுதினமும் மு.ப.9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.
மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.
முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

# 26 விவசாயிகளுக்கு முல்லையில் உதவிகள்



முல்லைத்தீவு, செப்.15
வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனின் ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முல்லைத்தீவில் தெரிவுசெய்யப்பட்ட இருபத்தாறு பேருக்கு நேற்றுமுன்தினம் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.
குறித்த கருவிகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலைமையில் அவரது பணிமனையில் நடைபெற்றது. (ய)

## 20 அரசமைப்பு சீர்திருத்தம்:

# நாடாளுமன்றக் குழுக்கூட்டத்துக்கு முன்னர் அங்கத்துவக் கட்சிகளின் கருத்தை அறியுங்கள்

### சிவசக்தி ஆனந்தன் சம்பந்தனுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், செப்.15

இருபதாவது அரசமைப்பு திருத்தம் தொடர்பான நாடாளுமன்றக் குழுக்கூட்டத்துக்கு முன்னர் மாவட்ட ரீதியில் ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்தி அங்கத்துவக் கட்சிகளின் கருத்துகளை அறிவதற்கு ஏற்பாடு செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித்தலைவருமான இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் கடிதம்மூலம் இக்கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாடாளுமன்ற குழுக்கூட்டம் தொடர்பான உங்களது அறிவித்தல் கடிதம் கிடைத்தது. அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாகவும், வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாகவும் விவாதிக்க உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு புதிய அரசமைப்பு வரவிருக்கின்ற சூழல் தோன்றியுள்ளது. இந்தநிலையில் தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் 20ஆவது திருத்தம் மற்றும் வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை ஆகியவை கொள்கைமுடிவுடன் தொடர்புபட்டிருக்கின்றன.

எனவே, நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தைக் கூடுவதற்கு முன்பாக மாவட்ட ரீதியில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களைக் கூட்ட வேண்டும்.

அவ்வாறு கூட்டி அங்கத்துவக் கட்சிகளின் கருத்தறிந்து அதற்கேற்ப முடிவெடுப்பதே சிறப்பானதாக இருக்கும்.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் எட்டப்படுகின்ற முடிவுகளுக்கேற்ப நாடாளுமன்றக் குழுவைக் கூட்டி அனைவரும் ஒரு நிலைப்பாட்டிற்கு வருவதே சரியானதாகவும், சிறந்த ஜனநாயக செயல்முறையாகவும் இருக்கும்.

ஆகவே தாங்கள் விரைவாக ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு எமது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# வடக்கு, கிழக்கை இணைக்க முன்னர் தென்னைமரவாடி, கொக்குத்தொடுவாய் கிராமங்கள் சீரமைக்கப்பட வேண்டும்

### பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.15

வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிர்வாகரீதியில் இணைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கும் அரசியல்வாதிகள் இவ்விரண்டு மாகாணங்களினதும் எல்லையில் இருக்கும் தென்னமரவாடி மற்றும் கொக்குத்தொடுவாய் இடையிலான பகுதியைச் சீரமைத்து, இரு மாகாணங்களையும் இணைக்க முன்வரவேண்டும் என இரு கிராம மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதுதொடர்பில் இவ்விரு கிராமமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

2014.06.02இல் வடக்கு மாகாண முதலமைச்சர் எமது பிரதேசத்திற்கு வருகை தந்தபோதும் இக்கோரிக்கையை முன்வைத்தோம். ஆனால் இன்று சபையின் ஆட்சிக்காலத்தின் ஆயுள் நெருங்கும் தறுவாயில்கூட இதற்கான சாத்தியத்தைக் காணமுடியவில்லை. இதனால் தற்போது மீண்டும் நாம் தமிழரசுக் கட்சியிடம் இந்தக் கோரிக்கையைக் கொண்டு சென்றுள்ளோம். அதனை ஆராய்வதாகக் கூறுகின்றனர். குறிப்பாக கனடா வாழ் புலம்பெயர் உறவுகள் எமக்காக உதவுவார்கள் என தற்போது தமிழரசுக் கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

தென்னைமரவாடிக் கிராமத்தில் தற்போது வாழும் 80 குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளையும், மேலும் குடியமர விரும்பும் 270 குடும்பங்களுக்கான வீட்டுவசதிகள் உள்ளிட்டவற்றை கனடா வாழ் மக்களின் உதவியுடன் அமைக்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த நடவடிக்கைகளுடன் தென்னைமரவாடி மற்றும் கொக்குத்தொடுவாய் ஆகிய கிராமங்களுக்கு இடையில் உள்ள சுமார் 15 கிலோ மீற்றர் பாதையைச் சீரமைத்து அப்பகுதியை ஓர் சாலையாக மாற்றியமைக்க வேண்டும். இதன்மூலம் இருமாகாணமும் ஒன்றினையும்.

அதேநேரம் அப்பாதையில் 3 பாலங்களும் அமைக்கப்பட்டால் இரு கிராமங்களும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும். அத்துடன் வடக்கின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் திருகோணமலை செல்லும் வழியும் மிக இலகுவாக்கப்படும்.

உண்மையில் தென்னமரவாடி மற்றும் கொக்குத்தொடுவாய் ஆகிய இரு கிராமங்களின் அபிவிருத்தி குறித்த சாலை அமைப்பிலேயே தங்கியுள்ளது. எனவே இதனை அமைத்துத்தர அனைவரும் முன்வர வேண்டும். இதற்கான பங்களிப்பை அனைவருமே மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-101)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் இடமாற்ற விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபரை நாடுகிறது அமைச்சு

யாழ்ப்பாணம், செப்.15

வடக்கு மாகாண பொது சுகாதார பரிசோதகர்களின் இடம் மாற்றம் தொடர்பான தீர்வினைப் பெறுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெறவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நடப்பு வருடத்தில் இடம்மாற்றம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர்களின் இடம் மாற்றம் முறையற்றது என்று கூறி ஊழியர் சங்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

அவர்கள் அலுவலகத்திற்கு வருகை தருகின்ற போதிலும் பணிகளை மேற்கொள்ளாமல் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். உள்ளூராட்சி சபையின்கீழ் பணிபுரியும் தாம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் எவ்வாறு இடம்மாற்றம் செய்யப்படலாம் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மாநகரசபையின் ஊழியர்களை இடம்மாற்றம் செய்வதற்கு அமைச்சுக்கு முழு அதிகாரமும் உண்டு. இதுபற்றி அமைச்சு அவர்களுக்கு தெளிவுபடுத்தியது.

இருந்தும் தமக்கு வழங்கப்பட்ட இடம்மாற்றம் தவறு என்று கூறி, பொதுச் சுகாதார பரிசோதகர்களின் ஊழியர் சங்கம் இந்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பான வழக்கும் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது உள்ள டெங்கு சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு உடனடியான தீர்வைப் பெற்றுக் கொள்ள அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நீதிமன்றில் வழக்கு நடைபெறுவதால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெறத் தீர்மானித்துள்ளது. அதன் பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ய-ரி)

## ஆலயங்களில் இடம்பெறுகின்ற கூட்டங்களுக்கு மாகாணசபை உறுப்பினரையும் அழைக்க வேண்டும்

### சிவாஜிலிங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.15

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களின் வருடாந்த பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக நடத்தப்படும் கூட்டங்களுக்கு பிரதேசத்தை சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்களும் அழைக்கப்படவேண்டும் என வடக்கு மாகாண உறுப்பினர் எம் கே. சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்

இப்பிரதேசத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களாக தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம், துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயம் ஆகிய இருஆலயங்கள் இருந்து வருகின்றன. இரு ஆலயங்களினதும் வருடாந்த திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக இடம்பெறும்கூட்டங்களுக்கு பிரதேசத்தை சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டு வந்தார்கள். ஆனால்

இம்முறை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய திருவிழா ஏற்பாட்டுக் கூட்டத்திற்கு

தம்மை அழைக்கவில்லை என பருத்தித்துறை பிரதேச செயலரின் கவனத்திற்கு மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கொண்டு வந்திருந்தார். இக்குறைபாட்டை தாம் கவனத்தில் எடுத்துக்கொள்வதாகவும் எதிர்காலத்தில் கூட்டங்களுக்கு பிரதேசத்தைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்களை அழைப்பதாகவும் பருத்தித்துறை பிரதேச செயலர் ஸ்ரீ ஆழ்வாப்பிள்ளை தெரிவித்தார். (ய-173)

# தமிழக அகதிகளை கப்பலில் அழைத்துவர அதிகாரிகள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.15

இலங்கையில் போர் காரணமாக வடக்கு கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியா சென்று முகாம்களில் வாழும் மக்களை கப்பல் வழியாக மன்னார் அழைத்து வருவதற்கான முன்னேற்பாடாக துறைமுக வசதி தொடர்பில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்ற போர் காரணமாக வடக்கு, கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 2 லட்சம் பேர் இந்தியா சென்று முகாம்களிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் தங்கி வாழுகின்றனர்.

இவ்வாறு வாழும் மக்களை தர்யகம் அழைத்துவரும் பணிகள் விமானம் மூலம் மேற்கொள்வதனால் அதிக பணச்செவு ஏற்படும் அதேநேரம் குறைந்த எண்ணிக்கையிலான மக்களையே அழைத்துவரமுடியும்.

எனவே, இவற்றினை விரைவுபடுத்தும் நோக்கில் இவர்களை கப்பல் வழியாக மன்னார் அழைத்து வருவதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெறுகின்றன.

குறிப்பாக தற்போது விமான மூலம் அழைத்து வரும் ஈழ அகதிகள் சகபயணிகளுக்கு அனுமதிக்கப்படும் அதேயளவு பொதியே அனுமதிக்கப்படும். சுமார் 20 ஆண்டுகளாக இந்தியாவில் வாழும் உறவுகள் இதனால் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பர். மேலதிக நிறைக்கான கொடுப்பனவை வழங்கும் பெரும் செலவை ஏற்பதனால் நிதி நெருக்கடி ஏற்படுகின்றது.

இவை அனைத்தையும் கருத்தில்கொண்டே தற்போது தாயகத்திற்கு அழைத்துவரும் உறவுகளை கப்பல் வழியாக தலை மன்னாருக்கு அழைத்துவரும் முயற்சி இடம்பெறுகின்றது.

இதற்கமைய நேற்றுமுன்தினம் ஐ.ஓ.எம் பிரதிநிதிகள், நீரியல் வளத்துறை அதிகாரிகள் மற்றும் துறைமுக அதிகாரசபை அதிகாரிகள் அடங்கிய குழுவினர் தலைமன்னாருக்கு வருகை தந்து அப்பகுதியில் ஓர் தற்காலிக இறங்குதுறை வசதி மூலம் பயணிகளை அழைத்து வருவதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

குறித்த ஆய்வுகளின் அடிப்படையில் அச்செயல் வெற்றியளிக்கும் எனக் கருதினால் உடன் பணிகளை ஆரம்பித்து அடுத்த ஆண்டின் இறுதிக்குள் இந்திய முகாம்களில் வசிக்கும் சுமார் 20 ஆயிரம் பேரை தாயகத்துக்கு அழைத்து வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ய-101)

## வட மாகாண விவசாயக் கண்காட்சியில்

# 24 வகையான காட்சிப்படுத்தல்கள்

யாழ்ப்பாணம், செப்.15

24 வகையான விடையப்பரப்புக்களுடன் கூடிய காட்சிப்படுத்தல்களுடன் இம்முறை வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் எதிர்வரும் 19ஆம்திகதி தொடக்கம் 23ஆம்திகதி வரை காலை 8.00 மணிமுதல் மாலை 8மணிவரை இடம்பெறவுள்ள இக்கண்காட்சி காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய சந்தையை நோக்கிய நிலைபோறான விவசாயம் எனும் தொனிப்பொருளில் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் நெல்உற்பத்தியில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும், தானியங்கள், அவரைப் பயிர்கள், எண்ணெய்ப்பயிர்கள், உள்நாட்டுமற்றும்மேல் நாட்டு மரக்கறி வகைகள், கிழங்குப் பயிர்கள், பழப்பயிர்கள் உள்ளிட்ட பயிர்ச்செய்கைகள், உயர்தர நாற்று உற்பத்திகள், சேத விவசாயம் மற்றும் ஒருங்கிணைந்த விவசாயப் பண்ணை, நிலைபேறான சேதன மற்றும் நகர்ப்புற வீட்டுத் தோட்டம், மண்ணியற் பயிர்ச்செய்கை, வறட்சியான காலங்களில் வலை வீடுகளில் மரக்கறிச் செய்கை, நீர்முகாமைத்துவமும் நிலத்தடிநீர் சேமிப்பும், ஊடு பயிர்ச்செய்கை, வீதிமுறைப்பயிர்செய்கை, பயிர்பாதுகாப்பு செயல் முறைகள், காளான் பயிர்ச்செய்கை, தேனீவளர்ப்பு, விலங்கு வேளாண்மை, பல்கலைக் கழகத்தின் விவசாயப் புத்தாக்கங்கள், விவசாய ஆராய்ச்சிகள், அலங்கார தாவர வளர்ப்பு, மூலிகைத்தாவர விருத்தியும் அதன் பயன்பாடும், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் காலநிலையை அளவிடும் கருவிகளும் அவதானங்களும் உள்ளிட்ட விவசாயம் சம்பந்தமான 24 விடையப் பரப்புக்கள், காட்சிப்படுத்தல்கள் இடம்பெறவுள்ளன என வடக்கு மாகாணசபை அறிவித்துள்ளது. (ய-21,402)

# காணிகளை அபகரிக்க வன உயிரினங்கள் திணைக்களம் முயற்சி

## வடமராட்சி மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, செப்.15

வடமராட்சி போக்கறுப்பு (ஜே/434) கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்குச் சொந்தமான பல காணிகளை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தமது எல்லைக்கு உட்பட்டதாகத் தெரிவித்து அடையாளமிடமுற்பட்டதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி கரையோரத்தில் போக்கறுப்பு கிராமம் அமைந்துள்ளது. கேவில், வேதகுளம், வண்ணங்குளம் போன்ற கிராமங்கள் இங்கு உள்ளன. கட்டைக்காட்டின் ஒரு பகுதியான நித்திய வெட்டை போன்ற கிராமங்களில் மக்கள் குடியேறி யுள்ளனர். இவர்களுக்கு வீட்டுத்திட்டங்களும் வழங்கப்பட்டு அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது மக்களின் காணிகளை வனஜீவராசிகள் திணைக்களம் தமக்குரிய காணி எனத் தெரிவித்து பெயர்ப்பலகை போடப்பட்டுள்ளது.

குறித்த பகுதி மக்கள் கடற்தொழில், நன்னீர் மீன்பிடி, பனைத்தொழில், தோட்டம் போன்றவற்றையே பிரதான வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

எனினும் தற்போது தமது எல்லைக்குட்பட்ட காணிகளில் தொழிலில் ஈடுபட முடியாது என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளதாக மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதுதொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ. உதயச்செல்வன் தெரிவித்ததாவது:

இக்கிராமத்தில் 1920ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட காணி உறுதிகள் மக்களிடம் இருக்கின்றன. ஆனால் இப்போது குறித்த பகுதி தேசிய பூங்காவாக மாற்றப்பட்டுள்ளது எனவும், கேவில், வேதகுளம், வண்ணங்குளம், நித்திய வெட்டை, சுண்டிக்குளம் போன்றவை தமக்குரிய காணிகள் எனவும், அதில் எந்தவொரு வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டாம் எவும் வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்துக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்பட்டும் இதுவரை எந்த தீர்வும் கிடைக்க வில்லை. எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். இதுதொடர்பாக மருதங்கேணி பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டுகேட்டபோது:

சுண்டிக்குளம் சரணாலயமாக காணப்பட்டது. சுண்டிக்குளம் தேசிய பூங்காவாக 2015ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டது. ஆரம்பத்தில் 24 ஆயிரம் ஏக்கராக காணப்பட்டது. தற்போது 47 ஆயிரம் ஏக்கராக அதிகரிக்கப்பட்டு தேசிய பூங்காவாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் சில பொது இடங்கள், பாடசாலைகள், வயல் நிலங்கள், தனிப்பட்ட காணிகள் எல்லாம் விரிவாக்கம் காரணமாக உள்வாங்கப்பட்டுள்ளன.

தற்போது அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதில் பாடசாலைக் காணிகள், பொது இடங்கள், தனிப்பட்ட காணிகள், வயல் காணிகள் மற்றும் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான நிலங்களை விட்டு 1938 ஆம் ஆண்டின் அடிப்படையில் ஆரம்பத்தில் இருந்த நிலப்பரப்பை மாத்திரம் பிரகடனம் செய்யுமாறு இது தயாரிக்கப்படுகின்றது. இதனை நாங்கள் கொழும்புக்கு அனுப்பவுள்ளோம்.

இது தொடர்பான கூட்டம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெறுவதாக இருந்தது. இருப்பினும் வனஜீவராசிகள் திணைக்கள அமைச்சின் செயலாளர் கலந்து கொள்ள முடியாத காரணத்தால் அது பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ய-6)

---

**கொக்கிளாய் காணி விவகாரம்:**

# அநுர திசாநாயக்கவின் முல்லைத்தீவுப் பயணம் திடீரென பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.15

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த 164 குடும்பங்களின் 614 ஏக்கர் மேட்டு நில வயல் காணிகள், மற்றும் 800 ஏக்கர் வயல்நிலங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக வருகை தரவிருந்த மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர்நாயகம் அநுர திசாநாயக்கவின் முல்லைத்தீவுக்கான பயணம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்கிளாய்கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் தெற்கு மற்றும் கொக்குத்தொடுவாய்மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்களுக்குச்சொந்தமாக எரிஞ்சகாடு, குஞ்சுக்கால்வெளி, வெள்ளைக்கல்லடிபோன்றமானாவாரி வயல்வெளிகளும், அடையகறுத்தான், தொண்டகண்டகுளம், பூமடு கண்டல், உந்தராயன்குளம், ஆமையான்குளம், கூமாவடிகண்டல் வெளி போன்ற நீர்ப்பாசன வயல்வெளிகளும் 1952 மற்றும் 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் குறித்த மக்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வயல்காணிகளாகும். அதன் பின்பு 1984ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரணசூழ்நிலையால் அனைத்துமக்களும் அங்கிருந்து இடம்பெயர்ந்தனர்.

இந்தவேளையில் 1988. 04.15 மற்றும் 2007. 03.09 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்ததில் குறித்த பிரதேசம் மகாவலி எல்வலயம் என பிரசுரிக்கப்பட்டது. அந்தக் காணிகள் மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்டன. ஆயன்குளம், முந்திரிகைக்குளம், மறிச்சுக்கட்டுக்குளம் போன்ற குளங்களின் கீழுள்ள 225 தமிழ் மக்களுக்குச் சொந்தமான 835 ஏக்கர் நீர்ப்பாசன வயல்காணிகள் இந்தப்பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இடப்பெயர்வின் பின் மீண்டும் 2011 ஆம் ஆண்டு தமது பிரதேசங்களில் மக்கள் மீள் குடியமர்ந்தனர். எனினும் இவ்வாறான தொடர்ச்சியான இடப்பெயர்வின் காரணமாக குறித்த மக்களிடம் இருந்த அனைத்து ஆவணங்களும் தொலைக்கப்பட்டன. இதனால் காணிகளுக்காண ஆவணங்கள் அவர்களிடம் இருக்கவில்லை. எனவே 2013 .1 சுற்றறிக்கைக்கு அமைவாக உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படாத 164 குடும்பங்களின் 614 ஏக்கர் மேட்டுநில வயல்காணிகளுக்கான உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படவேண்டும். தற்போது சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள 225 குடும்பங்களின் 835 ஏக்கர் நீர்ப்பாசன வயல்காணிகள் மீளவும் முன்னர் வழங்கப்பட்ட தமிழ்மக்களுக்கு வழங்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என நாடாளுமன்றம் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்திருந்தார். இதற்கமைய சகல தரப்பின் கூட்டம் இடம்பெறுவதற்கு முன்னர் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் கடந்த 12ஆம் திகதி மேற்படி 835 ஏக்கர் நிலப் பரப்பையும் பார்வையிடுவதற்கும் அதுதொடர்பில் ஆராயவும் ஏற்பாடுசெய்யப்பட்டது. இருப்பினும் மாவட்டச்செயலர் நாடுதிரும்பாதநிலைமையிலும், மற்றும் சில காரணங்களாலும் குறித்த கலந்துரையாடலுடன் கள ஆய்வும் தற்போது பிற்போடப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டது. (ய-21-101)

---

# சின்னக்குளம் ஊடாக மாமடுவவுக்கு பேருந்துசேவையை ஏற்படுத்துங்கள்

## துவரங்குளம் மக்கள் உருக்கமாக வேண்டுகோள்

வவுனியா துவரங்குளத்துக்கு பேரூந்துசேவையை ஏற்படுத்தித்தருமாறு மக்கள் கோரிக்கைவிடுத்தனர். வவுனியா நொச்சிமோட்டை கிராம அலுவலர் பிரிவிலுள்ள துவரங்குளத்து மக்களே இவ்வாறு கோரினர்.

அவர்கள் தெரிவித்ததாவது: போர் முடிவுற்ற பிற்பாடு இப்பகுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு மீள் குடியமர்த்தப்பட்ட நாங்கள் சீரானபோக்குவரத்து இன்மை, எமது பிள்ளைகளுக்கான முன்பள்ளிதேவை என்பவற்றை வலியுறுத்திவருகின்றோம். நொச்சிமோட்டைப் பகுதியிலிருந்து 3கிலோ மீற்றர் தூரத்திலுள்ள துவரங்குளம் பகுதியில் 25தொடக்கம் 30 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றோம். எமது ஜீவனோபாயமாக கூலித் தொழிலையே மேற்கொண்டு வருகின்றோம். மருத்துவமனை, பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் போன்ற இதர தேவைகளின் நிமித்தம் வவுனியா நகருக்கே செல்லவேண்டிய தேவையும் எற்படுகின்றது. முதன்மைச் சாலையான ஏ9 சாலையிலிருந்து 3கிலோ மீற்றர் நடந்தும் ஏனைய வாகனங்களிலும் எமது பயணத்தை மேற்கொ்ண்டு வருகின்றோம். எமது நிலை தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் எமது கோரிக்கைக்கு தீர்வு பெற்றுக்கொள்ள முடியவில்லை. எம்மை அவர்கள் கைவிட்டுவிட்டனர் போல் உணர்கின்றோம். இங்குள்ள முதியவர்கள் ஏ9 சாலையில் செல்லும் பெருந்துக்காக இங்கிருந்து நடந்துசெல்வது பெரும்துயரமாக உள்ளது. வறட்சிகாலங்களின்போது நீண்டதூரம் நடப்பதால் சிலர் மயக்கமடைந்துள்ளனர். மழைகாலங்களில் செல்லும் போது எமது உடைகள் சேறுபடிந்து பேருந்தில் பயணம்செய்யமுடியாது போகின்றது. அவசரமான நேரங்களில் கூட பேருந்துவசதிகள் இல்லாது பரிதவிக்கின்றோம். இனி மழைகாலம் தொடங்கிவிட்டது. விச ஜந்துக்களின் நடமாட்டம் அதிகரிக்கும். எப்போது என்ன நடக்கும் என்று தெரியாது எனவே உடனடியாக மருத்துவமனைக்குச் செல்வதானால் நாம் பெரும் துன்பப்பட வேண்டும். இதையாவது கவனத்தில் எடுத்து எமக்கான பேருந்துசேவையை ஏற்படுத்தவேண்டும். அரசியல் தலைவர்கள், மற்றும் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுங்கள். எமது பிள்ளைகளின் எதிர்காலக் கல்விச் செயற்பாடுகளுக்கு எமது கிராமத்திலிருந்து சின்னக்குளம் ஊடாக மாமடுவ பகுதிக்கான பேருந்து சேவையை மேற்கொண்டுதாருங்கள் - என்றனர். (21)

---

# வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவுவரை நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், செப்.15

புதியநீதி வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில், சி.கா.செந்திவேல் எழுதிய வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை எனும் அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூலின் அறிமுகவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வரவேற்புரையைத் திருமதி லதா உதயதீபன், நூல் அறிமுக உரையை சட்டத்தரணி சோ.தேவராஜா, நூல் மதிப்பீட்டு உரைகளை எழுத்தாளர் க.தணிகாசலம், த.நவதாசன், நூலாசிரியர் ஆகியோர் நிகழ்த்துவர்.

பதிலுரையை தோழர் சி.கா.செந்திவேல், நன்றியுரையை கி.வாகீசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நிகழ்ச்சித் தொகுப்பை அ.இராஜசேகரம் மேற்கொள்ளவுள்ளார். (ய-106)

---

# நன்னீர் மீன் விற்பனைக்கு வடக்கில் 2 புதிய கட்டடங்கள்

யாழ்ப்பாணம், செப்.15

வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்களை விற்பனை செய்யவதற்கும் பராமரிப்பதற்கும் என இரண்டு கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டுவருவதாக வடக்கு மாகாண நன்னீர் மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியை அபிவிருத்தி செய்வதற்கு 96 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதற்காக 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 6 மில்லியன் ரூபா செலவில் நன்னீர் மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மன்னார் மாவட்டத்தில் கூறாய் பிரதேசத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் சென்னியன் குளம் பிரதேசத்திலும் இவை அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் நன்னீர் மீன்கள் விற்கப்படும் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. அத்துடன் மீன்கள் பாதுகாக்கப்படும் இடமாகவும் அமையும்.

குளங்களில் பிடிக்கப்படும் நன்னீர் மீன்களை விற்பனை செய்யும் இடமாக இது அமையும். தென்பகுதியில் உள்ள பெரிய உணவகங்கள் இந்த நன்னீர் மீன்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகின்றன.

ஆகவே இந்த மாவட்டத்தில் இரண்டு விற்பனை நிலையங்களை அமைத்து வருகின்றோம்.

கடந்த வருடம் கிளிநொச்சியில் வன்னியன் குள பிரதேசத்தில் இந்த விற்பனை நிலையத்தை அமைச்சு அமைத்திருந்தது. நடப்பு வருடத்தில் கிடைத்த நிதியின் அளவிற்கேற்ப மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் 2 விற்பனை நிலையங்களை அமைத்து வருகின்றது.

இதுதவிர 3 மில்லியன் ரூபா செலவில் இறால் குஞ்சுகளும் குளங்களில் விடப்படவுள்ளன. இதுவரை 50 வீதமான குஞ்சுகள் குளங்களில் விடப்பட்டுள்ளன. கட்டடம் அமைக்கும் பணிகள் 50 வீதம் நிறைவு பெற்றுள்ளமையால் இரண்டு செயற்பாடுகளும் நவம்பர் மாத இறுதியில் நிறைவடையும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)



## சைட்டம் அறிக்கை மைத்திரியிடம் முன்வைப்பு

கொழும்பு, செப். 15
சைட்டம் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கு அரச தலைவரால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை அவரிடம் கடந்த திங்கட்கிழமை சமர்ப்பித்திருப்பதாக அந்தக் குழுவின் தலைவரும் பிரதியமைச்சருமான கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் எங்களுக்கு வழங்கியிருந்த கால எல்லைக்குள் அறிக்கையை அவருக்கு சமர்ப்பித்து விட்டோம். இந்த அறிக்கை இன்னும் முடியவில்லை என்று இலங்கை அரச மருத்துவ சங்கம் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டில் உண்மையில்லை. நாங்கள் அறிக்கையை சமர்ப்பித்தபின் அரச தலைவரின் செயலாளருடனும் இது தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடினோம். இந்த அறிக்கையை வாசித்தபின் அரச தலைவர் மேலதிக நடவடிக்கையை எடுப்பார் -என்றார். (5)

# '40இல் 40 திருமணங்கள்' பம்பலப்பிட்டியில் இன்று

### இலவசமாக நடத்த ஏற்பாடு

கொழும்பு, செப். 15
பிரிட்டன் சைவ முன்னேற்ற சங்கத்தின் 40ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு, '40இல்40 திருமணங்கள்' எனும் நிகழ்ச்சி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படுகின்றது.
'வறிய நிலையில் உள்ள திருமண வயதை எட்டிய சோடிகளுக்கு, பம்பலப்பிட்டி சம்மங்கோடு சிறி மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை திருமணம் செய்து வைக்கப்படவுள்ளது' என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிரிட்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சங்கத்தின் 50 லட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பலரும் பலவிதமான ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர்.
திருமணம் செய்ய முடியாத நிலையில் வறுமையில் வாடும் மணமக்களுக்கு திருமணம் செய்து வைக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இந்த திருமணத்துக்காக யாழ்ப்பாணத்தை சேர்ந்த 2 சோடிகளும், முல்லைத்தீவில் 8 சோடிகளும், கிளிநொச்சியில் 2 சோடிகளும், களுத்துறையில் 17 சோடிகளும், மன்னாரில் ஒரு சோடி உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 40 சோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்படவுள்ளது.
எமது கலாசார சைவ சம்பிரதாயங்களுக்கு அமைய, ஒரே மேடையில் 40 சோடிகளுக்கு திருமணம் செய்வது இலங்கையில் இதுவே முதல் தடவையாகும். இந்தத் திருமண வைபவத்துக்காக, மணக்களுக்கான 40 தாலிகள், 80 மோதிரங்கள், 80 மெட்டிகள், பட்டுப் புடவைகள், ஆண்களுக்கான ஆடைகள் என்பன இலவசமாக வழங்கப்படுகின்றன.
திருமணத்தை முன்னிட்டு மணமக்கள் மற்றும் உறவினர்களுக்கான தங்குமிடங்கள், உணவு என்று அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன - என்றார்.
பிரிட்டன் சைவ முன்னேற்ற சங்கத்தின் அறங்காவலர் பி.ஆர்.இராமநாதன் தெரிவித்ததாவது:
பிரிட்டனில் சிறப்பாக இயங்கும் சைவ முன்னேற்ற கழகத்தின் முழுமையான நிதியுதவியில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இதற்கான நிதியுதவிகளை கேட்டதும் அங்குள்ள சைவ மக்கள் மனமுவந்து வழங்கினார்கள். எமது சங்கத்தின் சார்பில் எதிர்காலத்திலும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம். அத்துடன், திருமணத்துக்கு உதவி வேண்டும் என்று யாராவது எம்மை தொடர்பு கொண்டால் உதவுவதற்குத் தயாராகவுள்ளோம்- என்றார். (5)



## ரஞ்சனுக்கு எதிரான அவதூறு வழக்கை விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் முடிவு

### ஒக்ரோபர் 12 திகதியிடப்பட்டது

கொழும்பு, செப். 15
நீதித்துறையை விமர்சித்தன் மூலம் நீதிமன்றத்துக்கு அவதூறு விளைவித்திருக்கிறார் என்ற குற்றச் சாட்டின்கீழ் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கை விசாரணைக்கு எடுப்பதற்கு உயர் நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது.
இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதியரசர்களான ஈவா வணசுந்தர மற்றும் விஜித் கே.மலல்கொட ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபின் வழக்கை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதற்கு உத்தரவிடப்பட்டது.
இந்த வழக்கின் மனுதாரர்களான மாகல்கந்த சுதந்த தேரரும், சுனில் பெரேராவும் தங்கள் மனுவில் இந்த நாட்டின் பிரதியமைச்சர் எனும் பொறுப்பான பதவியை வகிக்கும் ரஞ்சன் ராமநர்யக்க நாட்டின் தலைமை அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் ஊடகவியலாளர்கள் மத்தியில் நீதிமன்றத்தை அவமதித்துப்பேசியது பெரும் குற்றமென சுட்டிக்காட்டியிருப்பதுடன் பிரதிவாதியான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5)

## பொன்சேகாவின் கருத்தால் நாட்டுக்கு ஆபத்து இல்லை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு



முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரிய தொடர்பில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்தால் இலங்கைக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜெனரல் ஜெகத் ஜயசூரிய விவகாரம் தொடர்பில் ஊடகங்களில் பரப்பப்பட்ட செய்திகள் பல உண்மைக்குப் புறம்பானவையாகும். ஐரோப்பிய நாடுகள் 6 ஒன்றிணைந்து அவருக்கு எதிராகப் போர்க்குற்றம் சுமத்தியுள்ளதாகக் கூறப்பட்டதும் பொய்யானதாகும்.
ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சட்டத்தரணியே ஜெனரல் ஜெகத் ஜயசூரிய மீது வழக்கு தொடுத்துள்ளார். அதனைத் தவிர ஏனைய செய்திகள் அனைத்தும் பொய்யானவையாகும். ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தொடர்பில் அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா கூறியுள்ள விடயங்கள் குறித்துப் பெரிதும் பேசப்படுகின்றது. போரின்போது தவறான செயற்பாடுகளை முன்னெடுத்தவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக சாட்சியமளிப்பேன் என்பதையே அவர் கூறியுள்ளார் -என்றார். (5)

## அடுத்த வருடம்வரை காஸ் விலை உயராது

கொழும்பு, செப். 15
சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டும் என்ற யோசனை அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டபோதிலும் அதுபற்றி அடுத்த ஆண்டே முடிவெடுக்கப்படும் என்று அரசு அறிவித்தது.
அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்ததாவது:
கூட்டு அரசு ஆட்சிக்கு வந்த காலம் முதல் சமையல் எரிவாயுவின் விலை சடுதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டு வந்தது.
அமைச்சரவைக் கூட்டத்தின்போதும் வாழ்க்கைச் செலவிற்கான குழுவினர் இந்த யோசனையை மீண்டும் வலியுறுத்தியிருந்தார்கள். ஆனால், இந்த யோசனை குறித்து அடுத்த ஆண்டு ஆராய்ந்து பார்க்கலாம் எனக் கூறி ஒத்தி வைக்கப்பட்டது - என்றார். (5)

நன்றி நவிலலும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
27 . 09 . 1961



உதிர்வு
09 . 08 . 2017

கடந்த 19.08.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் முனியாண்டி பொன்னையா
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும். நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.09.2017) சனிக்கிழமை காலை 8 மணியளவில் சாட்டி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 18.09.2017 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்
5 ஆம் வட்டாரம்,
வேலணை வடக்கு.
குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லப்பா
அரசரெத்தினம்
திதி:- 15.09.2017
ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறுமோ எம் துயரம்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எங்கள் நெஞ்சங்களில்
நிலைத்து நிற்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
மாரியம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
மலர்வு
23.11.1938
உதிர்வு
27.08.2016

# பாம்பின் நச்சை முறியடிக்கும் மருந்தை உள்நாட்டில் தயாரிக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 15

இலங்கையில் பாம்புக்கடிக்கு உள்ளாகுபவர்களுக்கான விசமுறிவு மருந்தை உள்நாட்டிலேயே தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

இலங்கையில் ஐந்து வகையான விசம் கொண்ட பாம்புகள் வாழ்கின்றன. இவற்றின் விசங்களிலிருந்தே விசமுறிவு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இதுவரை வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட மருந்துகளை, உள்நாட்டிலேயே தயாரிக்க முடியும் - என்றார். (5)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## Faculty of Arts

**University of Jaffna will entertain applications from qualified persons for the undermentioned posts:**

i. **Temporary Assistant Lecturer/Temporary Tutor/Temporary Instructor / Temporary Demonstrator**

Archeology/ Art & Design/ Christian Civilization/ Drama & Theatre Arts / Economics/ English Literature/ English Language Teaching / Fine Arts / Geography/ Hindu Civilization/ Hindu Philosophy/ History/ Home Economics/ Information and Communication Technology/ Linguistics/ Media Studies/ Planning /Philosophy / Political Science/ Psychology /Sanskrit /Sociology / Tamil / Translation Studies

Minimum Requirements/ Qualifications for the posts:

1. A Degree with specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
   **OR**
2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   **OR**
3. (a) A Degree with specialization in the relevant subject without Honoursor any other degree with at least Second Class Honours, and (b) a recognized postgraduate degree in the relevant subject

**Notes: Candidates awaiting the results of the final degree examination may also apply for Temporary Tutor /Instructor/Demonstrator**

ii. **Temporary Instructor/Visiting Instructor**
English Language Teaching

Minimum Requirements/Qualifications for the posts:

1. A Special Degree in English;
   **OR**
2. A General Degree with English Language as a subject;
   **OR**
3. A Special /General Degree with a Diploma in English of not less than 18 months duration obtained from a University or UGC recognized other Higher Educational Institution
   **OR**
4. The Postgraduate Diploma/Masters m in Teaching of English as a Second Language from the University of Colombo/Open University of Sri Lanka or an equivalent qualification of not less than one year duration obtained from a University or UGC recognized other Higher Educational Institution

iii. **Visiting Lecturer/ Visiting Instructor in Media Studies**

Minimum Requirements/Qualifications:

A special degree in the relevant field with at least five years' experience in teaching/professional experience

- Preference will be given to those who have postgraduate degree (MPhil/PhD.) in the relevant degree/subject along with the required experience

**Salary:**

| | |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 35,556/- per month fixed |
| Temporary Tutor /Instructor/Demonstrator | Rs. 29,190/- per month fixed |
| Visiting Lecturer (lecture) | Rs.1,500/- per hour |
| Visiting Lecturer (practical) | Rs. 600/- per hour |
| Visiting Instructor | Rs. 600/- per hour |
| Visiting Instructor in English | Rs. 750/- per hour |

**Closing date: 29.09.2017 (application should reach us on or before the given date)**

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self–addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

**Registrar**
University of Jaffna
Jaffna
**14.09.2017**


# அரசியலில் களமிறங்குகிறார் மைத்திரியின் மகள் சத்துரிகா

## மாகாண சபைத் தேர்தலில் போட்டி சந்திரிகா பாணியில் வியூகம் வகுப்பு

கொழும்பு, செப். 15

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மகளான சத்துரிகா சிறிசேன தனது அரசியல் பயணத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளார்.

இதற்கான ஆரம்பக்கட்ட ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் அவை முடிவடைந்த பின்னர் தான் அரசியலில் களமிறங்குவதற்கான காரணத்தை விளக்கும் வகையில் சிறப்பு அறிவிப்பொன்றை விடுக்க வுள்ளதாகவும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.



தகவல் தொழில்நுட்பத்துறையில் தேர்ச்சி பெற்ற அவர் தற்போது வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும்நிலையிலேயே, அவற்றைவிடுத்து முழுநேர அரசியலில் இறங்கவுள்ளார்.

இதற்கான பிள்ளையார் சுழியாகவே 'அரச தலைவர் தந்தை' என்ற நூலை பெருமெடுப்பில் வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளார். சத்துரிகா சிறிசேன இவ்வாறு முழுநேர அரசியலுக்குள் வந்த பிறகு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மகளிர் துறையில் அவருக்கு முக்கிய பதவியொன்று வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2018இல் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் அவர் போட்டியிடுவார் எனச் சுதந்திரக் கட்சியின் பொலனறுவை மாவட்ட தொகுதி அமைப்பாளரொருவர் தெரிவித்தார்.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையார் மாகாண சபைத் தேர்தல் ஊடாகவே தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்திருந்தார். இந்தப் பாணியில்தான் சத்துரிகாவும் தனது அரசியல் பயணத்தை ஆரம்பிப்பதற்கு வியூகம் வகுத்துள்ளார். (5)


## மரண அறிவித்தல்

### செல்வி லில்லி ஜெபமணி யேசுசகாயம்
**(மணி அக்கா)**
**(இளைப்பாறிய ஆசிரியர் - யா/ உடுவில் மகளிர் கல்லூரி)**



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி லில்லி ஜெபமணி யேசுசகாயம் நேற்று (14.09.2017) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யேசுசகாயம் - ஆசை அன்னம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான அல்பிரட் அருளானந்தம் (ஓய்வுபெற்ற தபால்மா அதிபர், வடமாகாணம்), போலஸ் எட்வின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/பரியோவான் கல்லூரி), டேவிற் (ஓய்வுபெற்ற ஆளணி முகாமையாளர் - Jaffergi brother's Pvt Ltd), லீலா சிரோன்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - குண்டசாலை), ஹெலனா கிருபைமணி தம்பிநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ நவாலி மகா வித்தியாலயம்) மற்றும் டெய்சி புஸ்பராணி மரியதாசன், டாக்டர் கிளாட்ஸ்ரன் ஜீவரட்ணம் (இளைப்பாறிய வைத்தியர்), விக்ரோறியா நவமணி (ஓய்வுபெற்ற நிகழ்ச்சித் தொகுப்பு அலுவலர் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), எலிசபெத் பத்மாமணி குணநாதன் (ஓய்வுபெற்ற மருந்தாளர்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.09.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் "பிளசரின்" நவாலி தெற்கு, மானிப்பாய் என்னும் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**A.C தவறஞ்சித்,**
**"பிளசரின்" நவாலி தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 609 9855**

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி கந்தையா
**(முன்னாள் சிமெந்துத் தொழிற்சாலை மில் சாரதி)**



யாழ்.பலாலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி கந்தையா (முன்னாள் சிமெந்துத் தொழிற்சாலை மில் சாரதி) 13.09.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - வள்ளியம்மை தம்பதிகளின் தவப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், மீனாட்சியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம், கலாராணி, விக்னேஸ்வரன், செல்வமலர், புஸ்பமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி, காலஞ்சென்ற சிவராசா மற்றும் லோகேஸ்வரன், குணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வள்ளியம்மை, வல்லிபுரம், சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், வைரமுத்து, பொன்னுத்துரை ஆகியோரின் சகலனும், சின்னத் தங்கச்சி, லீலாவதி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும், செந்தில்நாதன், பாலநிகேதன், செந்தூரன், துஷ்யந்தி, சர்மிளா,சிவரஞ்சன், சிந்துஜா, ஆதவன், ஆதர்சன், அனுஷன், சாரங்கா, வேணுகா, பிரதீப், தனுஷியா, தர்சனா, நிதர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், அபிலாஷ், சந்தோஷ், சாருஜா, வர்ணிகா, மதிநிலவன், நிலுஷன், கரிஷ், மகிஸ், நிசாளினி, சஞ்சய், சஞ்ஜித், அக் ஷரா, மிதுஷரா, டினுஷியா, லெசான், டிசானியா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.30, காளிகோயில் வீதி, சுன்னாகம் கிழக்கில் உள்ள இல்லத்தில் நாளை (16.09.2017) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 543 3449, 077 596 6101**

# கூட்டு அரசின் அமைச்சருக்கே தெரியாத அபிவிருத்தித் திட்டம்

கொழும்பு, செப். 15

நாட்டில் தற்போது பாவனையிலுள்ள மூன்று அதிவேக நெடுஞ்சாலைகளையும் தனியாருக்கு குத்தகைக்கு விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக வெளிவந்துள்ள செய்திகளின் உண்மை நிலவரத்தைத் தனக்குத் தெரியப்படுத்துமாறு நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா அவரது அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின்கீழ் வரும் மூன்று அதிவேக நெடுஞ்சாலைகளையும் சீன நிறுவனத்துக்கு நீண்டகாலக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு முயற்சி செய்து வருவதாக பத்திரிகைகளிலும் சமூக வலைத்தளங்களிலும் செய்திகள் வெளியாகியிருப்பதால் அந்தத் திட்டத்தின் உண்மை நிலவரத்தைத் தனக்குத் தெரிவிக்குமாறும் டிலான் பெரேரா கோரியுள்ளார்.

தனிப்பட்ட ரீதியிலும் தான் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியின் சார்பிலும் அரச சொத்துக்களை தனியார்மயப்படுத்தும் யோசனைக்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும், ஒருவேளை தனது அமைச்சுக்குத் தெரியாமலே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதுபற்றி தான் அரச தலைவரிடம் முறைப்பாடு செய்யவிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். (5)

# சலாவ வெடி விபத்தால் பாதித்த குடியிருப்பாளர்கள் இழப்பீடு கேட்டு போராட்டம்

கொழும்பு, செப். 15

சலாவ இராணுவ ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான இழப்பீடுகளை வழங்குமாறு கோரி நேற்று முன்தினம் சீத்தாவக்க பிரதேச செயலகத்தின் முன் போராட்டமொன்றை நடத்தினர்.

வெடிவிபத்து நடந்து கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களாகியும் பெரும்பாலானவர்களுக்கு இன்னும் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை எனவும், அரசுக்கு பலமுறை அறிவித்தும் தங்களது அவலநிலை இன்னும் தொடர்வதாகவும் அவர்கள் கோசமிட்டனர்.

இதேவேளை, வெடிவிபத்து நடந்து சில மாதங்களுக்குள்ளேயே அரசு இழப்பீடாக பல மில்லியன் ரூபாக்களை ஒதுக்கியமை குறிப்பிடத்தக்கது. (5)

# மீண்டும் வறட்சி ஏற்படலாம்

## மைத்திரி, ரணிலுக்கு அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, செப். 15

கடந்த சில தினங்களாக நாட்டின் சில பகுதிகளிலும் பெய்துவந்த மழை படிப்படியாகக் குறைந்து வருவதால் மீண்டும் வறட்சியான காலநிலையொன்று ஏற்படலாம் என்று வானிலை ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

இலங்கை வானிலை அவதானத் திணைக்களத்தின் நிபுணர்கள் இது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும், தலைமை அமைச்சர் ரணிலுக்கும் அறிக்கையை சமர்ப்பித்திருப்பதாக தலைமை அமைச்சரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. வருட இறுதியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் நாட்டின் பல பகுதிகள் குறிப்பாக வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் வறட்சி ஏற்படலாம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய வானிலை அவதானப் பணியகமும் கடந்த ஜூலை மாதம் இதே எச்சரிக்கையை இலங்கைக்கு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# துறைமுகங்களை வெளிநாட்டவர்களுக்கு தாரை வார்க்க ஒருபோதும் இடமளியேன்

## அமைச்சர் மகிந்த அமரவீர திட்டவட்டம்



கொழும்பு, செப். 15

நாட்டிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன், என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீன்பிடித் துறைமுகங்களினதும் அதனை அண்டிய பகுதிகளினதும் அபிவிருத்திப் பணிகள் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படுமே தவிர, வெளிநாட்டவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது. அவ்வாறான நிலைமையொன்று வந்தாலும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் மூலமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரவேற்கப் படுவார்களே த்விர, அரசு நேரடியாக வெளிநாட்டவர்களுடன் தொடர்புகொள்ளாது.

மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் துறைமுகக் கிராமங்களின் அபிவிருத்திப் பணிகள் பற்றிய பிரேரணைகள் தனித்தனியாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின் படிப்படியாக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும் -என்றார். (5)

**துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்**

வெள்ளவத்தை பெரனாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து செவ்வாய்கிழமை வரை (16,17,18,19) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார்.

செவ்வாய்கிழமை (19.09.2017) மண்டல அபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும் இடம்பெற்று தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.

அயலவர்கள் உறவினர்கள் அனைவரும் வருகை தந்து அருளாசி பெற்றுக்கொள்க...

பூசை நேரம்: முற்பகல் : 10.30 - 12.30 மணிவரை
மாலை : 5.30 - 6.30 மணிவரை

குறிப்பு: கலாச்சார உடையுடன் வருகை தரவும்
தொடர்பு: 021 221 9127 077 801 2226

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



வாதரவத்தை புத்தூரைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு ஞானவைரவர் வீதியை வசிப்பிட மாகவும் கொண்ட வலி.கிழக்கு பிரதேச சபையில் தரம்I தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

**திரு.கனகசிங்கம் சற்குணராசா**

அவர்களுக்கு நீதி அமைச்சினால் அதி உயர் பதவியாகிய **இலங்கை சமாதான நீதிவான் பதவி** வழங்கப்பட்டு **15.08.2017** அன்று யாழ். மாவட்ட நீதிவான் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். அதேநேரம் மேலும் பல பதவிகளைப் பெற்று சமூக சேவை செய்ய இறைவன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள்.

**தேர் விற்பனைக்குண்டு.**

தொடர்பு:-
076 992 7175

**வேலை வாய்ப்பு**

இயந்திரம் மூலம் கல் அரியும் நிறுவனத்துக்கு வேலை ஆள்கள் தேவை.
சம்பளம்: 1200.00 வழங்கப்படும்
021 222 2849/ 077 650 8376
077 220 9583

**விநியோகஸ்தர்கள் தேவை**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புடைவைகளை மொத்தமாக விநியோகம் செய்வதற்கு விநியோகஸ்தரகள் தேவை. (வாகன வசதி உண்டு)
077 470 1495

**மணமகள் தேவை**

கௌரவ கிறிஸ்தவ பிரபல கவிஞர் குடும்பத்தைச் சேர்ந்த 38+ வயதுடைய Software Developer க்கு (6 - 12) வயது வித்தியாசத்தில் மணப்பெண் தேவை.
View www.Seaaav.com/ME/then Call 077 242 0337

**வீடு விற்பனைக்கு**

யாழ்.நகரில் கொட்டடிச் சந்திக்கு அண்மையில் வீடு விற்பனைக்குண்டு. சுமார் 3 பரப்பில் நன்னீர் கிணற்றுடன் கூடியதுமாகும்.
077 227 9219

**ஏல விற்பனை**

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் பாவனைக்கு உதவாத மர உரல், உலக்கை, கதிரை பாலர் 72, Ronio Machine ஆகிய பொருள்கள் எதிர்வரும் 22.09.2017 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஏலத்தில் விடப்படவுள்ளது.

அதிபர்
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

**பதவி வெற்றிடம்**

- குடிசார் பொறியியலாளர்
  B.Sc (Eng) 03வருட அனுபவம்,
  NDT (Civil) or HNDE (Civil)
  அத்துடன் 5 வருட அனுபவம்.
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்
  NCT (Civil) சான்றிதழ், கட்டட வேலைகளில் 5 வருட அனுவம்.
  அத்துடன் 5 வருட அனுபவம்.

நிர்வாக உத்தியோகத்தர்
45,காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6239

**சேவை நலன் பாராட்டு**



**திருமதி ரஞ்சனாதேவி பேரின்பநாதன்**

Congratulations

S.L.T.S. I பயிற்றப்பட்ட ஆசிரியர்
(விஞ்ஞானம்)

| | | |
|---|---|---|
| 1988.06.04 | - 1989.12.31 | யா/ காரைநகர் இந்துக் கல்லூரி |
| 1990.01.01 | - 1991.12.31 | யா/ பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை |
| 1992.01.01 | - 1993.12.31 | யா/ காரைநகர் இந்துக் கல்லூரி |
| 1994.01.01 | - 2010.06.15 | யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியால்யம் |
| 2010.06.16 | - 2013.05.21 | யா/ சென்மேரிஸ் வித்தியாலயம் |
| 2013.05.22 | - 2017.08.31 | யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் |

எமது பாடசாலையில் ஐந்து ஆண்டுகள் விஞ்ஞான பாட ஆசிரியராக சேவையாற்றி ஓய்வுநிலை காணும் ஆசிரியரை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

**A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்



**Professional IT Courses**

- Dip.in Information Technology
- Diploma in Office Automation
- Dip. in Pre-Press Desktop Publicating
- Diploma in Pc Applications
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Video Production & Multimedia
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Dip.in Auto CAD
- JAVA, C#, C++, php

**Diploma in English**
ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான
SPOKEN ENGLISH
ஆங்கிலக் கல்வி

CERTIFICATE IN
SPOKEN SINHALA
LEVEL 01 Duration 3 Months ,LEVEL 02 Duration 3 Months

**புதிய பிரிவு ஆரம்பம்**

- பிரிவு 3 - 16/09/2017 (Sat) 9:30 a.m. OR 3:30 p.m.
- பிரிவு 4 - 18/09/2017 (Mon) 9:30 a.m. OR 3:30 p.m.

DMI COMPUTER EDUCATION

☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑இலகு தவணைக்கட்டண வசதிகள் ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கல்விக்கு

**DMI COMPUTER EDUCATION**

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, | M.M.V.வீதி | No. 174 கண்டி வீதி, | No. 130 K. K. S வீதி, | No.19,A9 வீதி, |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | HNB வங்கி அருகில் சாவகச்சேரி | NSB வங்கி அருகில் சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

# தேசிய பாடசாலைகள், வலய அலுவலகங்களை அதிகரிக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 15



நாட்டில் தேசிய பாடசாலைகளினதும் வலயக் கல்வி அலுவலகங்களினதும் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வி நிர்வாக சேவைக்குப் புதிதாக இணைக்கப்பட்டவர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். 2017ஆம் ஆண்டு அரச நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து ஒருவருடகால சேவைப் பயிற்சியும் முடித்துக்கொண்ட 196 பேர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இவர்களது அதிஉயர்ந்த சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களை தேசிய பாடசாலைகளின் அதிபர்களாகவோ அல்லது கல்வியமைச்சின் அதிகாரிகளாகவோ நியமிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டுமென அமைச்சர் தனது அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

கடந்த காலங்களில் கல்வி நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சைகள் ஒழுங்காக நடைபெறாததால் கல்வி அமைச்சில் அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததாகவும் இனிமேல் இந்தப் பரீட்சைகள் ஒழுங்காக நடத்தப்பட்டு அத்தகைய குறைபாடுகள் நீக்கப்படுமெனவும் அமைச்சர் இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்தார். (5)

# பிக்குகள் நிந்திக்கப்படுகிறார்கள்; அரசு வேடிக்கை பார்க்கின்றது

## அஸ்கிரிய பீடம் கடும் கண்டனம்

கொழும்பு, செப். 15

அரசில் உள்ள பல்வேறு அமைச்சர்கள் பிக்குகளைக் கடுமையாக விமர்சித்து நிந்தனை செய்வதாக அஸ்கிரிய பீடத்தின் தலைமைச் செயலர் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்தார். இதனைக் கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக் காலமாக அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிக்குகளையும், மதத் தலைவர்களையும் மதிப்பிறக்கம் செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிட்டும், விமர்சனங்களை முன்வைத்தும் வருகின்றனர். இது கண்டனத்திற்குரிய செயற்பாடாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறக்கூடாது என்று நாம் வலியுறுத்துகின்றோம்.

அரசியலுக்குள் பிரவேசித்து மக்களின் பண்பாடு, கலாசாரம், மத நம்பிக்கை போன்றவற்றை அறிந்து கொள்ளாதவர்களே இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இறுதியில் இவர்கள் மக்களால் நிராகரிக்கப்படும் நிலைமையே உருவாகும் - என்றார். (5.31)

# தமிழீழத்தை அங்கீகரிக்க தயாராகிவிட்டது கூட்டரசு

## பதறுகிறார் விமல் வீரவன்ச

கொழும்பு, செப். 15

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்கும் சட்டவரைவு எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களுக்கமையத் தனித் தமிழ் ஈழத்தைப் பெற்றுக்கொடுப்பதும் இதன் நோக்கமாக இருக்கின்றது. இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கூட்டாட்சிக் கட்டமைப்பை உருவாக்குதல், வடக்கு - கிழக்கை மீள இணைத்தல், பௌத்த மதத்துக்குரிய முன்னுரிமையை நீக்கி மதச்சார்பற்ற நாடாக இலங்கையை மாற்றுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை அரசு ஏற்றால் மாத்திரமே அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு ஆதரவளிக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம் என்ன என்பதை சுமந்திரன் தெளிவாக அறிவித்துவிட்டார். அரசு இனியும் மூடி மறைப்பு விளையாட்டை ஆடக்கூடாது. இதனைத் தவிர மேலும் இரண்டு பயங்கரமான விடயங்களைச் செய்வதற்கு இந்த அரசு திட்டமிட்டுள்ளது.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்கும் சட்டவரைவு எதிர்வரும் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

அதற்கான நிகழ்ச்சி நிரல் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் அரசமைப்பு உபகுழுவுக்கு வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கையும் 21ஆம் திகதியன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர் என்று கூறப்படுவதால் இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெற்றதை உறுதிப்படுத்துவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படுவதாகவே நாம் அறிகின்றோம். அதனால் போர்க்குற்ற விசாரணைகள் வெளிநாடுகளில் இடம்பெற்றாலும் அவர்கள் கேட்கின்ற சந்தேகநபரை நாம் இலங்கையிலிருந்து அனுப்பிவைக்க வேண்டும்.

இதுவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சட்டவரைவினால் எமது நாடு எதிர்கொள்ளப்போகும் அச்சுறுத்தல் என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் மேற்படி சட்டவரைவு நடைமுறைக்குவரும் பட்சத்தில் எதிர்காலத்தில் வரப்போகும் அரசுகளும் கூட இதனால் நெருக்கடிக்கு முகம்கொடுக்க நேரிடும் - என்றார். (5)



> “இதுவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சட்டவரைவினால் எமது நாடு எதிர்கொள்ளப்போகும் அச்சுறுத்தல் என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் மேற்படி சட்டவரைவு நடைமுறைக்குவரும் பட்சத்தில் எதிர்காலத்தில் வரப்போகும் அரசுகளும் கூட இதனால் நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிடும்.

# பிக்குகள் யாரென்று காட்டவேண்டிவரும்

## ரஞ்சனுக்கு எச்சரிக்கை விடுக்கிறது சிங்கள ராவய

கொழும்பு, செப். 15

தேவையற்ற முறையில் மூக்கை நுழைத்து நாட்டிலுள்ள பௌத்த பிக்குகளை நிந்தனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நாம் எச்சரிக்கின்றோம். இவ்வாறு சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, தொடர்ந்தும் பிக்குகளை நிந்திக்கும் வகையில் கருத்து வெளியிட்டு வருகின்றார். பிக்குகள் விடயத்தில் தேவையற்று மூக்கை நுழைக்க வேண்டாம். அதையும் மீறிச் செயற்பட்டால் பிக்குகள் யார் என்பதைக் காட்ட வேண்டி வரும் - என்றார்.

இதேவேளை முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்ததாவது:

எமது நாட்டிலுள்ள சிங்களவர்களுக்கும், பௌத்தர்களுக்கும் எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கையின் ஆரம்ப கட்டமாகவே மகா சங்கத்தினரின் மதிப்பைக் குறைக்கும் செயல்களை நான் கருதுகின்றேன். தற்பொழுதுள்ள சில அரசியல்வாதிகள் சமயத்தை அறியாதவர்களாகவும், நாட்டு வரலாற்றைப் புரியாதவர்களாகவும் இருக்கின்றனர். பௌத்த மத குருக்களுக்கு எதிராக மிக மோசமான முறையில் பேசுவதை நாம் ஊடகங்கள் ஊடாகப் பார்க்கின்றோம் - என்றார். (5)

# ரஞ்சன் மீது நாமலும் பாய்ச்சல்

கொழும்பு, செப். 15

நாட்டிலுள்ள பௌத்த பிக்குகளையும், நீதித் துறையையும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கண்மூடித்தனமாக விமர்சனம் செய்துவிட்டு, தன்னை முடியுமானால் சிறையில் தள்ளுமாறு சவால் விடுத்துள்ளதானது அரசின் போக்கைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

தற்பொழுதுள்ள அமைச்சர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டுசெயற்படுகின்றார்கள் என்பதற்கு இதுவே வெளிப்படையான ஆதாரமாகும்.

பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து நீதித்துறையை நிந்தனை செய்யும் போது நீதித்துறைக்குள்ள மதிப்பும், மகிமையும் இல்லாமல் போகின்றது. அதனையே அரசு செய்து கொண்டிருக்கின்றது - என்றார். (5)

# கல்வி ஆணைக்குழுவுக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்வதில் தடுமாற்றம்

கொழும்பு, செப். 15

இலங்கையின் கல்விக் கொள்கையை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கை வகிக்கும் தேசிய கல்வி ஆணைக்குழுவுக்குப் பொருத்தமான தகுதி வாய்ந்த உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு அரசு தடுமாறிக் கொண்டிருப்பதாக கல்வியமைச்சின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் லக் ஷமன் ஜயதிலகவினதும் பணிப்பாளர் சபையினதும் பதவிக்காலம் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி முடிவடைந்தது. கடந்த ஐந்துமாத காலமாக புதிய தலைவரும் பணிப்பாளர் சபையும் நியமிக்கப்படாததால் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முற்றாகத் தேக்கமடைந்துள்ளன.

ஆணைக்குழுவின் சட்ட ஏற்பாடுகளின்படி தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவரையும் பணிப்பாளர்களையும் நியமிக்க வேண்டியது அரச தலைவரின் பொறுப்பாகும். மிக முக்கிய ஆணைக்குழு கடந்த ஐந்து மாத காலமாக செயலிழந்து இருப்பது இலங்கையின் கல்வித்துறைக்குப் பெரும் பாதிப்பு என்று கல்வியியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (5)

# மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரை ஆணைக்குழுவில் முற்படுமாறு அழைப்பு

கொழும்பு, செப். 15

பிணைமுறி தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் அரச தலைவர் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி முன்னிலையாகுமாறு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரச சட்டத்தரணி டப்புல டி.லிவேரா தெரிவித்தார்.

மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி விசாரணைகளில் இறுதி விசாரணையாக இது அமையவுள்ளது.

அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணைக்கான கால அவகாசம் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதியுடன் நிறைவடைகின்ற நிலையில் பல முக்கியமான தகவல்கள் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் விசாரணையின்போது வெளிவருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 5 மாதங்களுக்கு மேலாக விசாரணைகளைப் பார்வையிட்டு வந்த முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூருக்குச் சென்றுள்ள நிலையில் விசாரணைகளில் பங்கெடுப்பாரா என்பது தற்போது கேள்விக்குறியாகியுள்ளது. (5)

# நான் மன்னிப்புக் கேட்கமாட்டேன்

## லலித் வீரதுங்க திட்டவட்டம்

எனக்கு விதிக்கப்பட்டிருக்கும் சிறைத்தண்டனையை அரச தலைவரின் பொது மன்னிப்பின் கீழ் நீக்குமாறு ஒருபோதும் கேட்கப் போவதில்லை என்று முன்னாள் அரச தலைவரின் செயலாளர் லலித் வீரதுங்க திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

கடந்த அரச தலைவர் தேர்தல் காலத்தில், வாக்காளர்களின் ஆதரவை மகிந்த ராஜபக்சவுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக அவர்களுக்கு இலவசமாக வெள்ளைத்துணியை விநியோகித்த விவகாரத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட லலித் வீரதுங்கவை, மகிந்த அணி உறுப்பினர்கள் சந்தித்தனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க, நாட்டின் தலைசிறந்த அரச சேவையாளராகக் கருதப்படும் லலித் வீரதுங்கவைச் சிறையில் அடைத்ததற்கு முன்னாள் அரச தலைவர் மீதுள்ள வன்மமே காரணம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் தான் ஒருபோதும் பொதுமன்னிப்புக் கோரப் போவதில்லை என்பதையும் அவர் தெரிவித்தார். அவ்வாறு விடுதலையாவதையும் அவர் விரும்பவில்லை என்று எம்மிடம் தெரிவித்தார் - என்றார். (5)

# இருண்டது இலங்கை!

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகப் பல பிரதேசங்களின் மின் விநியோகத்தில் நேற்றுப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அம்பாறை, பொலனறுவை, காலி, மாத்தறை, கொழும்பு மற்றும் களுத்துறை உள்ளிட்ட பகுதிகளில் மின் விநியோகம் சீராக இடம்பெறவில்லை. மின்சார சபையின் ஊழியர்கள் இரண்டு நாள்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை காரணமாக, மின்விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கி வழமை நிலைக்குக் கொண்டு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வேலைநிறுத்தத்தில் பங்கேற்காத ஏனைய ஊழியர்களைக் கொண்டு மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின்போது, வேலைநிறுத்தத்தில் தொடர்ந்து ஈடுபடத் தமது சங்கம் முழுமனதாகத் தீர்மானித்ததாக இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் சங்கத்தின் செயலர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார். இன்று நண்பகல் 12மணிவரை அரசுக்கு கால அவகாசம் வழங்குவதாகவும், அதற்குள் தமது கோரிக்கைகளுக்குப் பதில் வழங்காவிட்டால், நாள் குறிப்பிடப்படாத தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் குதிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (5)

காணாமற்போனோர் அலுவலகத்துக்கு

# நம்பகத்தன்மையான ஆணையாளர்களை நியமிக்கவேண்டும்

## கொழும்பிடம் மேற்குலக நாடுகள் வலியுறுத்தல்

கொழும்பு, செப். 15

காணாமற்போனோர் அலுவலகத்தை (ஓ.எம்.பி) உருவாக்கும் வர்த்தமானி அறிவித்தல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள மேற்குலக நாடுகள், இந்தப் பணியகத்துக்கு நம்பகமான ஆணையாளர்களை நியமிக்க வேண்டும் என்று அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளன.

காணாமற்போனோர் அலுவலகத்தை இன்று தொடக்கம் செயற்படுத்தும், வர்த்தமானி அறிவிப்பை மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாய்க் கிழமை வெளியிட்டார். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா உள்ளிட்ட நாடுகள் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டுள்ளார். 'நல்லிணக்கத்துக்கான முன்நோக்கிய முக்கியமான நகர்வு. நிதியளிக்கப்பட்ட, வலுவான, சுதந்திரமான, நன்கு தகுதியான ஆணையாளர்களுடன் செயற்படும் காணாமற்போனோர் அலுவலகம், பதில்களைத் தேடும் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த குடும்பங்களுக்கும் நம்பிக்கையை அளிக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, காணாமற்போனோர் அலுவலகம் செயற்படத் தொடங்குவது, வரவேற்கத்தக்க, முக்கியமான ஒரு நடவடிக்கை. நம்பகமான ஆணையாளர்களை விரைவாகச் சேர்த்துக் கொள்ள முடியும், என்று ஐரோப்பிய ஒன்றியம் நம்புகிறது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு முக்கியமான, சாதகமான நகர்வு. அடுத்த கட்டம், ஆணையாளர்கள் மற்றும் அலுவலகத்தைச் செயற்படுத்தல் என்று கனடா தெரிவித்துள்ளது. (5)

மூலதன சுட்டெண்

# இலங்கைக்கு 70ஆவது இடம்

கொழும்பு, செப். 15

உலகப் பொருளாதார மன்றத்தின், பூகோள மனித மூலதன சுட்டெண் அடிப்படையிலான பட்டியலில் இலங்கைக்கு 70ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. 130 நாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாடு எவ்வாறு தமது மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்கிறது என்பதைக் கணக்கிட்டு இந்தச் சுட்டெண் தயாரிக்கப்படுகிறது. இதில் தொழிலாளர் உரிமைகள், தொழிற்படை, கல்வித் தகமை, தொழிற்துறையினரின் தொழிற்சார் அறிவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

இந்தப் பட்டியலில் நோர்வே முதலாம் இடத்தில் உள்ளது. இந்தியா 103ஆம் இடத்தில் இருக்கிறது. (5)

# பொலிஸாரின் விசாரணை மீது எனக்கு நம்பிக்கையில்லை

## வெலிக்கடைக் கொலையின் சாட்சி தெரிவிப்பு

எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று, வெலிக்கடைச் சிறைக்கைதிகளின் கொலை தொடர்பான சம்பவத்தின் பிரதான சாட்சியாளரான சுதேஷ் நந்திமால் டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் தங்கியிருந்த வீட்டின் மீது சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதுகுறித்துப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளேன். நம்பிக்கை வாய்ந்த விசாரணையை பொலிஸார் நடத்தவில்லை. உயிர் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்துள்ள எனக்குப் போதிய பாதுகாப்பை வழங்க அரசு தவறியுள்ளது.

வெலிக்கடைச் சிறைக் கைதிகளின் கொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் அதன் சாட்சிகளை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அரசு இதனைக் கவனத்துக்கு எடுத்துச் சாட்சியாளர்களைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (5)

# ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள்

கொழும்பு, செப். 15

2015ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இலக்குகளை நிறைவேற்றுமாறு இலங்கைக்கு ஐ.நா மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் உடனடியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை விடயத்தில், பல்வேறு நல்லிணக்கப் பணியகங்களை அமைப்பதும், முன்னேற்றங்கள் பற்றிப் பேசுவதும், 2015ஆம் ஆண்டு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இணையானது அல்ல, என்ற விடயத்தில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உள்ள அரசுகள் தெளிவாக இருக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்தார். 'நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள், தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணவேண்டிய தேவை உள்ளது. நீதி கிடைப்பதற்கான ஆதாரங்களை அவர்கள் காண வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஒருமனதான நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை பெருமளவில் தோல்வி அடைந்துள்ளது. மனித உரிமைகள் தொடர்பாக மொழியால் பேசுவதை விட, அதிகமாகச் செய்ய முடியும் என்பதை இலங்கை அதிகாரிகள் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (5)

# சைகை மொழிக்கு இலங்கை அனுமதி



கொழும்பு, செப். 15

இலங்கையில் சைகை மொழிக்கும் தொடர்பாடல் மொழி அங்கீகாரம் கிடைக்கவுள்ளது. சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரிகள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா இது தொடர்பாக அமைச்சரவையில் முன்வைத்த பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அங்கவீனம் தொடர்பான தேசியக் கொள்கையின் கீழ், சைகை மொழி சிறப்புத் தேவையுடைய நபர்களின் தொடர்பாடல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் சைகை மொழிக்குத் தொடர்பாடல் மொழி அங்கீகாரம் வழங்கும் வகையில் சட்ட வரைவு தயாரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா பிரேரணையை முன்வைத்திருந்தார். அதனை ஏற்றுக் கொண்ட அமைச்சரவை அதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையில் 3 லட்சத்து 90 ஆயிரம் பேர் செவிப்புலனற்று இருப்பதாகச் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரிகள் அமைச்சின் தகவல்களின் மூலம் தெரிய வருகின்றது.

சைகை மொழிக்குத் தொடர்பாடல் மொழி அங்கீகாரம் கிடைப்பது அவர்களின் தொடர்பாடலுக்கு மட்டுமல்ல கல்வி மற்றும் அரச துறைகளில் தொழில் வாய்ப்புகளுக்கும் பயனுள்ளதாக அமையும் என்று அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்தார். (5)



# அமெ. அழகியாக கல்லூரி மாணவி

வொஷிங்டன், செப். 15
2018ஆம் ஆண்டுக்கான அமெரிக்க அழகியாக கல்லூரி மாணவியான காரா மண்ட் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அமெரிக்காவின் 97ஆவது அழகிப் போட்டி அட்லாண்டிக் நகரில் அண்மையில் இடம்பெற்றது. அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்களில் இருந்தும் தலா ஒருவர் வீதம் 50 பேர் போட்டியிட்டனர்.
நீச்சல் உடை அணிவகுப்பு, பகுத்தறிவுசார்ந்த கேள்வி பதில், இசை மற்றும் நடனத்தில் திறமையை வெளிப்படுத்துதல் ஆகிய சுற்றுகளின் பெறுபேற்றை வைத்து இறுதிச்சுற்றுக்கு மொத்தம் 15 பேர் தெரிவாகி இருந்தனர்.
தலா 20 வினாடிகள் நடைபெற்ற நேர்முக கேள்வி பதில் சுற்றில் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகவேண்டும் எனத் தீர்மானித்துள்ள அதிபர் ட்ரம்பின் முடிவு தவறானது என்று சாதுர்யமாகப் பதிலளித்த கல்லூரி மாணவி காரா மண்ட் (வயது23) அடுத்த வருடத்துக்கான அமெரிக்க அழகியாகத் தெரிவானார். (ம)






# ஐ.நா. சபையின் பொதுக்கூட்டம்; புறக்கணிக்கிறார் ஆங் சாங் சூகி

வொஷிங்டன், செப். 15
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தை மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகி புறக்கணிக்கவுள்ளார் என்று தகவல் வந்துள்ளது.
பௌத்த நாடான மியன்மார், சிறுபான்மையினரான ரொஹிங்யர்களை இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. இதனால் மியன்மாருக்கு எதிராக உலகளவில் கடும் விமர்சனங்கள் வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் எதிர்வரும் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை கூட்டம் தொடங்குகிறது. இந்த கூட்டத்தில் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் என்ற முறையில் இந்த கூட்டத்தில் ஆங் சாங் சூகி கலந்து கொள்வார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.
ஆனால், மியன்மாரில் ரொஹிங்ய முஸ்லிம்கள் மீது ராணுவம் நடத்தி வரும் அடக்குமுறைகள் தொடர்பாக கேள்விகள் எழும் என்பதால் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தை தவிர்க்க ஆங் சாங் சூகி தற்போது தீர்மானித்துள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் என்ற முறையில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை கூட்டத்தில் ஆங் சாங் சூகி சிறப்புரையாற்றியபோது உலக நாடுகளின் தலைவர்கள் அனைவரும் பலத்த கரவொலி எழுப்பி, வரவேற்று, பாராட்டுத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சிங்கப்பூரின் முதல் பெண் அதிபரானார் ஹலிமா



சிங்கப்பூர், செப். 15
சிங்கப்பூரின் அதிபராக ஹலிமா யாக்கோப் போட்டியின்றித் தெரிவாகியுள்ளார். இவர் சிங்கப்பூரின் முதல் பெண் அதிபர் என்ற சிறப்பையும் பெறு கிறார்.
சிங்கப்பூரில் ஆறாண்டுகளுக்கு ஒருமுறை புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறும். முன்னைய அதிபர் டோனி டானின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளதால் எதிர்வரும் 23ஆம் திகதி புதிய அதிபருக்கான தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. வேட்புமனுத் தாக்கல் நேற்றுமுன்தினத்துடன் முடிவுக்கு வந்தது. ஐந்து பேர் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்தனர். ஹலிமாவைத் தவிர ஏனைய நால்வரினதும் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதனால் ஹலிமா போட்டியின்றி சிங்கப்பூர் அதிபராகத் தெரிவானார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (ம)



# வடகொரியாவுக்கு பதிலடி கொடுக்க தென்கொரியா தயார்

சியோல், செப். 15
வடகொரியாவின் எல்லை மீறிய ஏவுகணைச் சோதனைகளுக்கு தக்க பதிலடி கொடுக்க தென்கொரியா தயாராகி வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
வடகொரியா பன்னாட்டுச் சட்டங்களை மீறி தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. அண்மையில் அந்த நாடு ஐதரசன் குண்டுச் சோதனையையும் வெற்றிகரமாக நடத்தியது. இந்த விவகாரத்தில் முறுகல் நிலை உச்சம் தொட்டுள்ள நிலையில் வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்க தென்கொரியா தயாராகி வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)






# அரபு நாடுகளுக்கு மணலை ஏற்றுமதி செய்கிறது ஆஸி.

பாலைவனங்கள் நிறைந்த அரபு நாடுகளில் மணலுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையால் அவை ஆஸ்திரேலியாவில் இருந்து பல கோடி டொலர்கள் செலவில் மணலை இறக்குமதி செய்து வருகின்றன.
மிகப்பரவலான பாலைவனப் பகுதிகள் நிறைந்த அரபு நாடுகள் மணலை ஏன் விலை கொடுத்து இறக்குமதி செய்ய வேண்டும் என சிலருக்கு எழும் சந்தேகம் நியாமானதுதான். ஆனால், அந்த பாலைவனங்களில் உள்ள மணல் அனைத்தும் மிருதுவாக உள்ளதால் கட்டுமானப் பணிகளுக்கு அது ஏற்புடையதாக இருப்பதில்லை. எனவே, ஆஸ்திரேலியாவில் இருந்து மட்டும் சுமார் 456 பில்லியன் டொலர்கள் அளவிலான மணல், கற்கள் மற்றும் சரளைக்கற்களை தங்கள் நாட்டில் நடைபெறும் கட்டுமானப் பணிகளுக்காக அரபு நாடுகள் கடந்த வருடம் இறக்குமதி செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆண்டுதோறும் 40 பில்லியன் தொன்கள் அளவுக்கு மணல் தோண்டப்படுவதாகவும், உலகளாவிய அளவில் மணல் குவாரிகளின் வர்த்தக நிதி பரிமாற்றம் 70 பில்லியன் டொலர்கள் அளவுக்கு உள்ளதாகவும் ஓர் அறிக்கை குறிப்பிட்டுகிறது. அதாவது, சராசரியாக உலகம் முழுவதும் தண்ணீருக்கு அடுத்தபடியாக அதிகமாக பயன்படுத்தப்படும் இரண்டாவது பொருளாக மணல் இடம் பிடித்துள்ளது. (ம)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நடத்தும்

# உயர்கல்வி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு-2017

## க.பொ.த சாதாரண / உயர்தரத்தின் பின்னர்....

- அரச, தனியார் துறையில் உயர்கல்வி வாய்ப்புக்களை எவ்வாறு தெரிவு செய்வதெனவும்.
- எதிர்காலத்தில் உயர் வருவாய் தரும் தொழில் வாய்ப்புக்களை இன்றே இனங்காணவும்
- உங்கள் விருப்பு, வெறுப்பு, இயலுமை மற்றும் பொருளாதார அடிப்படைப் பாடநெறிகளை இலகுவாக கண்டறிவதற்கும்
- இலங்கையில் உயர்கல்வி திட்டங்கள், கொள்கைகள், சவால்களை எதிர்கொண்டு வெற்றியடைவதற்கான வழிவகைகளும்.
- சர்வதேச கற்கைநெறிகளும் அதனை இலகுவாக அடைவதற்கான வழி வகைகளும்

மேற்கூறப்பட்ட அனைத்தும் அனுபவமிக்க வளவாளர்களால் ......



## எதிர்காலத்தில்

கௌரவமான தொழில்வாய்ப்பொன்றை கண்டறிவதற்கான நேரடி வாய்ப்பு

நேரம் : முற்பகல் 10 மணி
திகதி : 16.09.2017 (சனிக்கிழமை)
இடம் : 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

SMS

பதிவுகளுக்கு உங்கள் முழுப்பெயர், விலாசத்தை
076 753 1111 இற்கு SMS செய்யவும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பன்னாட்டு அழுத்தம்

அண்மையில்தன்னைச்சந்தித்திருந்தவெளிநாடுகளின் பிரதிநிதிகளிடம் ஒரு விடயத்தை எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியிருந்தார். இலங்கையின் இரு முக்கிய பெரிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமது சுய நலத்துக்காக புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் அசட்டையுடன்செயற்படுகின்றன, பன்னாட்டுச்சமூகம் அழுத்தம் கொடுப்பதன்மூலமே இந்தநிலையை மாற்ற முடியும் என்று சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையில் உரையாற்றிய அதன் ஆணையாளர், சயிட் அல் ஹுசைன் இலங்கையின் போக்கு இப்படியே தொடர்ந்தால் அது பன்னாட்டு நீதி விசாரணையின் அவசியத்தை மேலும் அதிகரிக்கும் என்று எச்சரித்திருந்தார். இப்போது ஐரோப்பிய ஒன்றியமும் இந்த விடயத்தில் கொழும்புக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீண்டும்வழங்கமுடியுமாஎன்பது தொடர்பில் ஆராய்வதற்காக வந்திருந்த ஐரோப்பிய ஒன்றியக் குழுவே இந்தக் அழுத்தத்தைக் கொடுத்துள்ளது. வடக்கு கிழக்கு உட்படப் பல இடங்களுக்கும் நேரில் சென்று நிலமைகளை அவதானித்தும், மக்களுடன் நேரில் பேசியும் விவரங்களை அறிந்த பின்னர் , மக்களின் உணர்வுகளை நாடிபிடித்துப் பார்த்த பின்னரே ஒன்றியம் தனது கருத்தைத் தெரிவித்துள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போது இந்த விடயம் குறித்தும் அவர்கள் எடுத்துக்கூறியுள்ளனர். இலங்கைக்கு இந்த வரிச்சலுகை மீண்டும் கிடைப்பதற்கானவாய்ப்புகளே அதிகம் இருக்கின்றன. ஏனெனில் ஒதுங்கிப் போவதைவிட, தண்டிப்பதைவிட கொழும்புடன் தொடர்ந்தும் உறவுகளைப் பேணிக் கொண்டே அழுத்தத்தைக்கொடுப்பதைத்தான் ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகின்றது எனத் தெரிகிறது. எனவே வரிச் சலுகையை நிறுத்துவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவே.

தமிழர்களின் தரப்பில் இருந்து என்னதான் எதிர்ப்புகள், கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டாலும், ஒன்றியம் வரிச் சலுகையை நிறுத்தாது. பதிலாக, வரிச் சலுகையைப் பகடைக்காயாகப்பயன்படுத்தி புதிய அரசமைப்பு உள்ளிட்ட விடயங்களைக் கொழும்பைக்கொண்டு நிறைவேற்றுவதற்கு முற்படும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. அதே போன்றே பொறுப்புக்கூறல் விவகாரத்தையும் இந்தநாடுகள் பயன்படுத்துகின்றன.

இலங்கை தங்களது பிடியிலிருந்து நழுவிச் செல்வதாகத் தோன்றும்போதெல்லாம் பொறுப்புக்கூறல் விவகாரத்தை மேற்குலகம் தூக்கிப்பிடிப்பது வழமையே. மைத்திரி ரணில் அரசு சீனாவுடன் தொடர்ந்தும் நெருங்கிச் செயற்பட்டுவரும் நிலையில், இப்போது பொறுப்புக்கூறல் தொடர்பில் எழுப்பப்படும் கரிசனைகள் உண்மையானவையா என்பதும் கேள்விக்குரியதே.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைச்சந்தித்தபிரிட்டிஷ்தூதுவர் ஜேம்ஸ் டொரஸ்ரிஸும் கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்பதைச் சொல்லியிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த பன்னாட்டுச் சமூகத்தின்அழுத்தத்துக்கான கோரிக்கையினைத் தொடர்ந்து இந்த அழுத்தங்கள் வழங்கப்படுகின்றனவா அல்லது சீனாவுடன் மேலும் நெருங்கப் பார்க்கும் கொழும்பை வழிக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியா என்கிற கேள்வி தமிழ் மக்களுக்கு உண்டு.

பன்னாட்டு அழுத்தம் என்பது இங்கு சாத்தியமான ஒன்றல்ல என்று அண்மையில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன் பொது நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பன்னாட்டுச் சமூகம் இலங்கைக்குக் கைகொடுக்கும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தி வைத்துள்ளது. இந்த நிலையில் பொறுப்புக்கூறல் விவகாரத்தை பன்னாட்டுச் சமூகம் குறிப்பாக மேற்கு நாடுகள் கையில் எடுத்திருப்பது புதிய அரசமைப்பை விரைவில் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது என்று நம்புவோமாக!

# தமிழ் மக்களுக்கு உரிமை வேண்டி தன்னுயிரை ஆகுதி ஆக்கிய திலீபன்



ஈழத்தமிழ் மக்களது நலனுக்காக இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்து உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டு தமதுயிரையே ஆகுதியாக்கிய தியாகி திலீபன் தமது அறப்போராட்டத்தை ஆரம்பித்த 1987 செப்ரெம்பர் 15ஆம் நாளின் முப்பது ஆண்டுகள் நிறைவு இன்றாகும்.

■ மு. ஈழத்தமிழ்மணி

தியாகம் என்றால் திலீபன்; திலீபன் என்றால் தியாகம் என்று கூறும் அளவுக்குத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிறைந்து நிற்கும் திலீபனது 'தியாக தீபம்' என்ற காரணப்பெயர் பெருமதிப்புக்குரியது மட்டுமன்றி, போற்றுதற்குரியதொன்றுமாகும். அதனால்தான்தியாகி திலீபனின் தியாகத்தை யும் ஈகத்தையும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் வருடாவருடம் பன்னிரு நாள்கள்வரை தொடர்ச்சியாக நினைவுகூருகின்றனர். 1987 ஆம் ஆண்டுசெப்ரெம்பர் மாதம் 15 ஆம் நாள் தொடங்கி, பன்னிரண்டு நாள்கள் வரை. ஒரு துளி நீர் கூட அருந்தாது உணவு ஒறுப்புப் போராட்டம் மேற்கொண்டு செப்ரெம்பர் 26 ஆம்திகதிவீரசுவர்க்கமடைந்த அந்த தியாகச் செம்மலின் நினைவு நாள்களை தமிழினம் வழமை போன்று இன்று செப்ரெம்பர் 15 ஆம் நாள்முதல் கடைக் கொள்கிறது.

ஈழத்தமிழர் அடங்கலாக புலம்பெயர் தமிழ் உறவுகளும் திலீபனது 30ஆம் ஆண்டு நினைவு நாள்களாக அமையும் இந்த ஆண்டின் செப்ரெம்பர் 15ஆம் நாள் முதல் 26ஆம் நாள்வரையான பன்னிருநாள்களையும் தியாகி திலீபனின் உயிர்த்தியாகத்தை நினைவு கூர்ந்து அஞ்சலிக்கின்றனர். இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துத் தனது சாகும் வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தை நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வீதியிலே காலைவேளையில் தியாகச்சுடர் திலீபன் ஆரம்பித்தான்.

தமிழீழ விடுதலையை உயிர்மூச்சாகக் கொண்டிருந்த திலீபன், தமிழீழத்தை அங்கீகரிக்கக்கோரி இந்திய அரசிடம் மடிப்பிச்சை கேட்கவுமில்லை. கையேந்தி நின்று இரந்து கேட்கவுமில்லை. திலீபனின் உணவு ஒறுப்புப் போராட்டம் இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகவே அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரான பிரபாகரன் 04.08.1987 அன்று சுதுமலையில் நடைபெற்ற கூட்டத்தில் "எமது போராட்ட வடிவம் மாறலாம். ஆனால் எங்கள் குறிக்கோள் என்றுமே மாறாது'' என்று சூளுரைத்திருந்தார். போராட்டத்தின் மற்றொரு வடிவமாக அகிம்சைப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் தேர்ந்தெடுத்திருந்தனர். அதற்கமையவே திலீபனின் அகிம்சைப்போராட்டம் நீர்கூட அருந்தாத உணவு ஒறுப்புப் போராட்டமாக அமைந்தது.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி ஈழத் தமிழினத்தின் நலன்களைப் பாதுகாப்பதாகக் காட்டிக் கொண்டு இந்திய அரசு. அப்போதைய இலங்கை அரச தலைவரான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் தமிழினத்தலைவர்களையும் விடுதலைப்புலிகளை யும் புறமொதுக்கி வைத்துவிட்டுத் தனது விருப்பப்படி இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மேற்கொண்டது. தமிழர்களின் நலன் கருதி இருநாட்டுத்தலைவர்களாலும் கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் தமிழர்களுக்குச் சாதகமான அம்சங்கள் எதுவும் இருக்கவில்லை.

### வடக்கு, கிழக்கில் இந்திய அமைதிப்படை

அந்த ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதிப்படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைதல் என்பதே முக்கியமானதாகவும், மாகாணசபை உருவாக்கப்பட்டு அதன் மூலம் தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது என்ற விடயமும் அடங்கியிருந்தது.

இந்திய அரசு ஒப்பந்தம் கைச்சாத்தாகி குறுகிய கால இடைவெளிக்குள் தமிழினத்திற்கெதிரான போக்கைப் படிப்படியாகக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. அப்போதைய இந்தியத் தலைமை அமைச்சரான ராஜீவ்காந்தி சில உறுதிமொழிகளை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருந்தார். அந்த உறுதிமொழிகள் எதனையும் ராஜீவ் காந்தி நிறைவேற்றாத காரணத்தினால் விடுதலைப் புலிகள் அவற்றை நிறைவேற்றும்படி கேட்டுக் கொண்டபோது. அதனை தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி நிராகரித்துவிட்டார்.

அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் என்று வேண்டியேதியாகிதிலீபன்சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடங்க வேண்டிய நிலையேற்பட்டது.

விடுதலைப் புலிகள், ஈழத் தமிழ்மக்கள் சார்பிலான கோரிக்கைகளை13.09.1987 அன்று இந்திய உயர்ஸ்தானிகரான யோகேந்திரநாத் டிக்ஸிற்றின் கைகளில் கிடைக்கக் கூடியவாறு கடிதமூலம் அனுப்பி வைத்து அதற்குப் பதிலளிக்க 24மணித்தியால அவகாசமும் கொடுத்திருந்தனர். ஆனால் 15.09.1987 வரை எதுவிதமான பதில்களும் விடுதலைப் புலிகளுக்கு இந்தியத்தூதுவரிடமிருந்து கிடைக்கவில்லை.


உணவுஒறுப்புப்போராட்டமும் மறியல் போராட்டமும் நடத்துவதென தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பா

ளர்களின் கூட்டத்தில் 13.09.1987 அன்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைவாகவே அகிம்சைப் போராட்டமும் ஆரம்பமாகியது. தானே சாகும்வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில் குதிப்பதாக திலீபன், தலைவரான பிரபாகரனிடம் வேண்டிக் கொண்டார். அதன்படி திலீபனின் தியாகப் பயணம் ஆரம்பமானது.

**திலீபன் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகள்**

இந்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்தே திலீபனது அகிம்சைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்; வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றுப் புதிய நிர்வாகம் பொறுப்பேற்கும்வரை வடக்குகிழக்கு நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக வாக்குறுதி அளித்தவாறு இடைக்கால நிர்வாக சபையை நிறுவ வேண்டும்; மீள்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்; அவசரகாலச் சட்டமும் முழுமையாக நீக்கப்பட வேண்டும்; வடக்குக் கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் இராணுவ முகாம்கள் புதிதாகத் திறக்கப்படக் கூடாது என்பவையே அந்த ஐந்து முக்கிய கோரிக்கைகளாகும். இந்திய ஆதிக்க அரசு, பசுத்தோலாகப் போர்த்தியிருந்த அமைதிப்படை என்ற போலியான முகத்திரையை கிழித்தெறிந்து, அது அக்கிரம ஆக்கிரமிப்புப் படையாக மாறிவிட்டது என்பதைத் தியாகி திலீபன் தன்னுடைய அகிம்சைப் போரின் மூலம் இந்திய வல்லரசுக்கு போதித்துக் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஊரெழு என்ற கிராமத்தில் 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று ஆசிரியரான இராசையா தம்பதியினருக்கு கடைசிப்பிள்ளையாகப் பிறந்த திலீபனது இயற்பெயர் பார்த்தீபன் என்பதாகும். தாயை இழந்த திலீபன் தந்தையின் அரவணைப்பிலே வளர்ந்து ஊர்ப்பள்ளியில் கல்வி கற்ற பின்னர் உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரியில் தொடருகின்றான்.



*உண்ணாவிரதம் இருக்கும்வேளை மக்களுக்கு உரையாற்றும் திலீபன்*

சிறுவயது முதற்கொண்டே படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரனாகத் திகழ்ந்தான் திலீபன். எல்லோரிடமும் அன்பும், பாசமும்மாகப் பழகும் குணம் அவனிடம் சிறுவயதிலிருந்தே ஊறியிருந்தது. உயர்தரப்பரீட்சையை முடித்துப் பல் கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்தான்.

1979 ஆம் ஆண்டு அப்போதைய அரச தலைவரான ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அரசு, தமிழர் பிரதேசத்தில் தமிழ் இளைஞர்களை வேட்டையாட ஆரம்பித்தது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் விசேடமாக இயற்றி அந்தச் சட்டத்தின் பலத்துடன் தமிழ் இளைஞர்களைத் தேடி அழிக்கின்ற நடவடிக்கைகளில் இராணுவத்தினர் அந்தக் காலப்பகுதியில் மூர்க்கத்தனமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். குடாநாட்டுக்குள் பல இளைஞர்கள் வீடுகளிலிருந்து பலவந்தமாக இழுத்துவரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுச் சடலங்களாக வீதியோரங்களில் வீசப்பட்டனர்.

**இலங்கைப் படையினரின் அட்டூழியங்களால் மனவைராக்கியமுற்ற திலீபன்**

மாணவனாக இருந்த போது படையினரின் இத்தகைய கொடூரங்கள் திலீபனின் மனதில் ஆழப்பதிந்திருந்தன. தமிழ் மாணவர்கள் மீது சிறிமாவோ அரசு கொண்டு வந்த தரப்படுத்தல் திட்டமும் திலீபனை வாட்டியிருந்தது. அதற்கும்மேலாக, 1983 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையும் இனக்கலவரமும் அவனது 20 ஆவது வயதில் அவனது இதயத்தில் சிங்களப்படைகள் மீதான வைராக்கியத்தை ஏற்படுத்தி வைத்திருந்தது மட்டுமல்லாமல் கடும் பகை உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது.

திலீபன் மருத்துவபீடத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றான். எதிர்காலத்தில் மருத்துவராகி வசதியான வாழ்க்கைக்குள் சென்றுவிட வேண்டும் என்ற கனலைத் தூக்கியெறிந்துவிட்டு தமிழினத்தின் விடுதலைக்காக புலிகள் அமைப்பில் இணைந்து கொள்கின்றான். ஆயுதப் போராளியாக மாறிய திலீபன் தன்னுடைய திறமையாலும் பேச்சாற்றலாலும் படிப்படியாக உயருகின்றான்.

இடைக்காடுப்பகுதியில் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதலொன்றின்போது திலீபன் படுகாயமடைந்து ஒரு சில மாதங்கள் வரையில் சிகிச்சைபெற்ற பின்னர் அரசியல் பணியைப் பொறுப்பேற்று யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளராகின்றான். பேச்சுவன்மை கொண்ட திலீபன் மக்களின் மனங்களைக் கவர்ந்த போராளியாகின்றான்.

நான் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுகிறேன் என்று தலைவரிடம் கேட்டுக் கொண்டு அனுமதிபெற்ற பின்னர், செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி திலீபன் காலை ஒன்பது மணியளவில் நல்லூர் வீதியில் திரண்டிருந்த மாணவ மாணவியர்கள், பொதுமக்கள் மத்தியில் புன்சிரிப்பை உதிர்த்துக் கொண்டு அவர்களிடமிருந்து கையசைத்து விடைபெற்று உண்ணாவிரத மேடையை நோக்கி நடந்துசென்று மேடையில் அமருகின்றான். அமருவதற்கு முன் எதிர்பாராத விதமாக வயதான தாயொருவர் கண்களில் நீர்மல்க திலீபனை மறித்துத் தன்கையில் வைத்திருந்த விபூதியைத் தனது கைகளால் எடுத்து திலீபனது நெற்றியில் பூசுகின்றார். அந்தத் தாயின் செய்கையால் நெகிழ்ந்து போன திலீபன் 9.45 மணியளவில் தனது அறப் போராட்டத்தை ஆரம்பிக்கின்றான்.

கவிஞர் காசி ஆனந்தன், பா.நடேசன் ராஜன், அன்ரன் மாஸ்ரர், சொர்ணம் உட்பட்ட பல முக்கிய போராளிகள் அமர்ந்திருக்க கவிஞர் காசி ஆனந்தன் திலீபனின் உண்ணாவிரதம் ஏன் ஆரம்பிக்கப்டுகின்றது என்பதைப் பற்றி விளக்கமளிக்கின்றார்.

ஆரம்பித்த நாளிலிருந்து இறுதிநாள் வரை நல்லூர் வீதியில் குடாநாடு களிலிருந்து மாணவ மாணவியர்கள் பொதுமக்கள் திரள்திரளாக வந்து கலந்து கொண்டார்கள். திலீபனின் தியாகப் பயணத்தை, அறப் போராட்டத்தை எடுத்துரைத்தார்கள்; கவிதை மழை பொழிந்தார்கள்.

**திலீபனது அகிம்சைப் போராட்டத்தை எள்ளி நகையாடியது காந்தி தேசம்**

அகிம்சைப் போராட்டத்திற்கே ஆணிவேராகத் திகழ்ந்த அண்ணல் காந்தியடிகள் தன்னுடைய உணவு ஒறுப்புப் போராட்டங்களை நீராகாரம் அருந்தியே நடத்தியிருந்தார். ஐரிஸ் போராட்ட வீரர் பொபி சான்ட்ஷ் சிறைக்குள் நீராகாரம் அருந்தித்தான் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்து உயிர்த்துறந்தார்.

உணவு ஒறுப்பு அறவழிப் போராட்டத்தை தாங்களே உலகுக்கு அளித்ததாகப் பீற்றிக் கொள்ளும் இந்திய தேசம், திலீபனது அறப்போராட்டத்தைக் கடைசிவரை கண்டுகொள்ளவேயில்லை. காந்திதேசத்தின் புகழையும் பெருமையையும் தினமும் பேசி வருகின்றவர்கள், திலீபனின் போராட்டம் தவறானது என்று நிறுவ முயன்றனர். தொடர்ந்து பன்னிருநாள்கள் வரையில் அறப்போர் நிகழும் இடமாக நல்லூர் வீதி மாறியது. தன் தேகத்தை ஆகுதியாக்கி எரிந்து கொண்டிருந்தான் திலீபன். அறப்போர் மேடையில் புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிப்பதற்கு திலீபன் தவறவில்லை.

அவ்வேளைய இந்திய தலைமை அமைச்சரான ராஜீவ்காந்தி, திலீபனின் அறப்போராட்டத்துக்கு முக்கியத்துவம் வழங்க முன்வரவில்லை. திலீபனோ தன்னை உருக்கி மற்றவர்கட்கு ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தியாக ஒவ்வொரு கணத்திலும் உருகிக்கொண்டிருந்தான்.

ஊரெழு மைந்தனின் நிலையை நினைத்துக் கண்ணீர் விட்டனர் கூடியிருந்த மக்கள். திலீபா, எங்களை விட்டுப் போகாதே; இந்திய தேசமே, எங்களுக்காக உயிர்க்கொடை செய்ய முன்நிற்கும் எங்கள் பிள்ளையைக் காப்பாற்று; என்றெல்லாம் கூறிக் கண்ணீர் உகுத்தனர். கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் வேண்டுகோள்களை இந்திய அரசு தூக்கியெறிந்தது.

"யாழ். கோட்டையில் என்று புலிக்கொடி பறக்கின்றதோ, அன்றுதான் சுதந்திர தமிழீழத்தின் ஆரம்பம். மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திரத் தமிழீழம் மலரட்டும்; இந்த வெற்றி நான் என் உயிருக்கு மேலாக நேசிக்கும் என்மக்களுக்குக்கிடைக்கட்டும். எமது சந்ததி வாழ ஒரு நாடு தேவை. இல்லாவிட்டால் நாளை எங்களைப் போன்றுதான் எமது எதிர்காலச் சந்ததியும் துன்பப்படும்," எனத் தனது இறுதி உரையில் தியாகி திலீபன் கூறுகிறான்.

"என்னால் பேசமுடியவில்லை. எனது மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது" என்று பெருமிதப்படுகிறான் அந்தத் தியாகச் செம்மல். 265 மணி நேரமா கதான் தமிழ் மக்களுக்காக இயற்றிய தனது உணவு ஒறுப்புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து 26.9.1987 அன்று காலை 10.58 மணிக்கு வீரசுவர்க்கம் எய்துகிறான் தியாகச்சுடர் திலீபன்." ஓ மரணித்த வீரனே, உன் ஆயுதங்களை எனக்குத்தா..." உன் சீருடைகளை எனக்குத்தா என்ற பாடலோடு திலீபன் வரலாறாகினான்.

தியாகி திலீபனால் அன்று ஆரம்பிக்கப்பட்ட அகிம்சைப் போராட்டம் பல ஆழமான விடயங்களை இன்றைய காலகட்டத்தில் தமிழினத்துக்கு நினைவுறுத்தி நிற்கிறது. ஒப்பற்ற வீரனின் கனவுகளைச் சுமந்து நிற்கின்ற ஒவ்வொரு தமிழர்களும் அந்தத் தியாகச் செம்மல் திலீபனை பன்னிருநாள் வரையிலும் நினைவு கூர்ந்து அஞ்சலித்து நிற்போம். அது ஒவ்வொருவரினதும் வரலாற்றுக்கடமையாகும்.




## வாசிப்பின் பெறுமதி அளப்பரியது?

தகவல் தொழில்நுட்பத்துறையின் அதீத வளர்ச்சி, இலத்திரனியல் கணினித் தொழில்நுட்பத்துறை வளர்ச்சி என்பவை காரணமாக இன்று உலகளாவிய ரீதியில் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்துவருவது நிதர்சனமான உண்மை. ஐந்து தசாப்தகாலத்துக்கு முற்பட்ட கால வேளையில், நாட்டில் பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் பரவலாகக் காணப்பட்டதுண்டு. சாதாரண பொதுமக்கள் குறிப்பாக, உயர்வகுப்புகளில் கற்ற மாணவர்கள் மத்தியில் புழக்கத்தில் இருந்து வந்த வாசிப்புப் பழக்கம் காரணமாக, அச்சு ஊடகங்களது செய்திகளை வாசிப்பதன் மூலம் பல்வகைசார் தகவல்களை மட்டுமன்றி, உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் நிலவரம் குறித்த செய்திகளை மனங்களில் ஆழமாகப் பதிவு செய்ய முடிந்தது.

இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்புக் காரணமாக நாட்டுமக்களது வாசிப்புப் பழக்கம் படிப்படியாக குறைவடைந்து வருவதைக் கருத்தில் எடுத்து தேசிய நூலக ஆவணவாக்கல் சபை கடந்த சில ஆண்டுகளாக பொதுமக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்விப்பதற்கான பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை முன்னின்று செயற்படுத்தி வருகிறது.

அந்த வகையில் குறித்த விடயத்தில் உள்ளூராட்சிச் சபைகளது வகிபாகம் முக்கியத்துவம் வகிப்பதால், குறித்த சபைவருடாவருடம் ஒக்டோபர் மாதத்தை வாசிப்பு மாதமாக அறிவித்து வாசிப்பின் பெறுமதி குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் விதத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தியும், மாணவர்கள் வாசகர்கள் மத்தியில் பலதரப்பட்ட போட்டிகளை நடத்தியும், கண்காட்சிகளை ஒழுங்குசெய்து நடத்தியும் வாசிப்பு மாதமான ஒக்ரோபர் மாதத்தைக் கடைப்பிடிக்குமாறு தேசிய நூலக ஆவணவாக்கல் சபை சகல உள்ளூராட்சிச் சபைகளையும் கேட்டுக்கொண்டுள்ளது. எனவே எமது பகுதி உள்ளூராட்சிச் சபைகள் தத்தமது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நூலகங்களை இது விடயத்தில் அக்கறை எடுத்துச் செயற்பட்டு எம்மவர்கள் மத்தியில் வாசிப்பின் பெறுமதியை உணரவைத்துத் தமது சமூக நலன் சார் பணியை செவ்வனே முன்னெடுக்கத் தூண்டுதல் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்றொரு முதுமொழிவழக்கில் உண்டு என்பதை மனதிருத்துவோம்.

பொ.கதிரமலைநாதன்
கோப்பாய்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கைத்தொழில் உற்பத்திகளின் மாதாந்த பெறுமான மாற்ற மாதிரி

| உற்பத்தி வரிசை | விவரம் | கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் | | மாத மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| | | 2016 ஜூலை | 2017 ஜூலை | ஜூலை 2017/ ஜூலை 2016 |
| 10 | உணவு உற்பத்திப் பொருள்கள் | 101.8 | 104.2 | 2.3 |
| 11 | குடிபான வகைகள் | 102.8 | 91.8 | -10.7 |
| 12 | புகையிலை உற்பத்திகள் | 114.8 | 111.3 | -3.0 |
| 13 | புடவை உற்பத்திகள் | 108.8 | 110.7 | 1.8 |
| 14 | ஆடை அணிகலன் தயாரிப்பு | 106.1 | 109.4 | 3.1 |
| 15 | தோல் உற்பத்தியும் அதுசார்ந்தவையும் | 103.6 | 113.1 | 9.2 |
| 16 | மரத்தளபாட உற்பத்திகள் | 98.5 | 108.3 | 9.9 |
| 17 | கடதாசியும் கடதாசி சார்ந்த உற்பத்திப் பொருள்களும் | 103.4 | 108.5 | 4.9 |
| 18 | அச்சு மற்றும் பதிவு ஊடகங்களின் மீள் உருவாக்கம் | 101.2 | 108.6 | 7.4 |
| 19 | 'கோக்' மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி | 106.7 | 83.2 | -22.0 |
| 20 | இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும் | 105.3 | 97.4 | -7.5 |
| 21 | அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி | 120.4 | 132.5 | 10.0 |
| 22 | இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்தி | 105.2 | 108.0 | 2.6 |
| 23 | ஏனைய தாதுப் பொருள்கள் மற்றும் கனிமங்கள் | 102.5 | 109.2 | 6.6 |
| 24 | அடிப்படை உலோக உற்பத்திப் பொருள்கள் | 102.7 | 123.2 | 20.0 |
| 25 | வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருள்கள் | 106.8 | 123.7 | 15.8 |
| 26-27 | இலத்திரனியல் உற்பத்தி சாதனங்கள் | 95.6 | 104.2 | 9.0 |
| 28 | இயந்திர உற்பத்தி சாதனங்கள் | 113.7 | 117.8 | 3.6 |
| 31 | தளபாட உற்பத்தி | 120.9 | 113.1 | -6.4 |
| 29-30-32-33 | ஏனைய தயாரிப்புப் பொருள்கள் | 96.0 | 103.7 | 8.0 |
| அனைத்து உற்பத்திம் துறைகளுக்குமான விலைச்சுட்டெடன் பெறுமானம் | | 104.1 | 104.9 | 0.8 |

P-தற்காலிக மதிப்பீடு R-திருத்திய மதிப்பீடு

கைத்தொழில் உற்பத்திப் பிரிவுகள் சார்ந்து கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மற்றும் நடப்பாண்டின் ஜூலை மாத காலப்பகுதியில் மாத அடிப்படையிலான பதிவாகவும் ஆண்டு ரீதியான மாற்ற விகிதமாகவும் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்களின் பெறுமான அசைவுகள் பின்வருமாறு அமைந்துள்ளன. இந்தத் தகவல்களை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது.
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் மிகப் பிரதானமான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளது. இவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திகளின் அளவில் காணப்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. (ஔ)

## பாடசாலை மாணவர்களுக்கு 'சுறக்ஸா' காப்புறுதித் திட்டம் அறிமுகம்

### கல்வி அமைச்சர் கருத்து



இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு 'சுறக்ஸா' காப்புறுதித் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ள தகவலை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் வெளிப்படுத்தியுள்ளார்.
இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,
"மாணவர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு அரசு பலவித செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளது. அந்தவகையிலே இந்த புதிய காப்புறுதித் திட்டம் மூலம் 45 இலட்சம் பாடசாலை மாணவர்கள் பயன்பெறவுள்ளனர். நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய இன்றைய காலத்தின் போக்கில் நாம் கல்வி தொடர்பில் பல உன்னதமான செயற்பாடுகளை மேற்கொள்ள முடிந்துள்ளது" - என்றார்.
காலி சவுத் லாண்ட் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஔ)

## மருந்து உற்பத்தியை உள்நாட்டில் மேற்கொள்ளத் தீர்மானம்

### ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனங்களுக்கான மருந்துகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
23 நிறுவனங்களுடனான 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இது தொடர்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளன.
மருந்தகத் தொழிற்சாலைகளை ஹொரண, களுத்துறை, கேகாலை, கண்டி ஆகிய இடங்களில் அமைக்க திட்டமிட்டுள்ளதுடன் சில தொழிற்சாலைகளுக்கான கட்டுமானத் திட்ட நடிவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதுகுறித்துக் கருத்துரைத்துள்ள சுகாதார ஊட்டச்சத்து மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் வைத்தியர் ராஜித சேனாரத்ன,
"உள்நாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் மருந்துகள் அரச மருத்துவமனைகளில் மட்டுமே பயன்படுத்தப்படும். ஒரு வருடத்துக்கு 45 பில்லியன் தொகையை அரசு மருந்து இறக்குமதிக்காக செலவிடுகின்ற நிலையில் இது சிறந்த திட்டமாக அமையவுள்ளது.
அத்துடன் ஆரம்பத்தில் 2 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவுள்ளது. 2018 ஆம் ஆண்டு நாடு முழுமைக்குமாக 75 சதவீத மருந்துத் தேவைப்பாடு உள்ளது" - என்றார். (ஔ)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளது

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக, மே மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையானது 2.5 வீதத்தால் குறைவடைந்துள்ளது.
கடந்த மே மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான புள்ளி விபரங்கள் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளன.
இலங்கையில் நிலவி வரும் சீரற்ற காலநிலை மாற்றங்கள் காரணமாகவே வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகளவில் வீழ்ச்சியடைந்துள்ளமையும் குறித்து நோக்கத்தக்கது. (ஔ)




அபிவிருத்தி லொத்தர் சபையின் புதிய தலைவராக எஸ். ஏ.பி.சூரியப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார். அரச தலைவரின் பரிந்துரைக்கு அமைவாக நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இந்த நியமனத்தை வழங்கினார். (ஔ)

COLOMBO STOCK EXCHANGE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455
14/9/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| [illegible] | | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| ASPI | 8.76 | 6,381.46 | 6,372.70 |
| S&P SL20 | 8.65 | 3,663.81 | 3,655.16 |
| வியாபாரப்புரள்வு | | 346,547,552 | 627,274,820 |
| உள்நாடு: கொள்வனவு | | 228,132,752 | 380,181,888 |
| விற்பனை | | 297,898,304 | 344,408,768 |
| வெளிநாடு: கொள்வனவு | | 118,414,784 | 247,092,944 |
| விற்பனை | | 48,649,240 | 247,092,944 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சிலோன் டுபாக்கோ | CTC.N | 1,000.00 | 62,800 | 61,283,228 |
| நேஷனல் ட்ரஸ்ட் வங்கி | NTB.N | 79 | 340,100 | 26,867,900 |
| டயலொக் | DIAL.N | 11.5 | 2,196,211 | 25,255,375 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 162 | 127,183 | 20,527,508 |
| சிங்கர் ஸ்ரீ லங்கா | SINS.N | 45.9 | 332,016 | 15,294,874 |
| ஹேய்லீஸ் | HAYL.N | 280 | 44,867 | 12,261,575 |
| மஸ்கெலியா பிளான்டேசன் | MASK.N | 18.4 | 565,995 | 10,335,468 |
| பலாங்கொட பிளான்டேசன் | BALA.N | 28.5 | 269,761 | 7,755,023 |
| எல்பிட்டிய பெருந்தோட்டம் | ELPL.N | 30 | 238,222 | 7,145,996 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 25.5 | 279,857 | 7,136,623 |

அறிவித்தல்கள்
பங்குலாபம்
கார்கில்ஸ் (CARG) - Rs. 1.90
சீ டி ஹோல்டிங்ஸ் (CTHR) - Rs. 1.80
ஹன்டர்ஸ் அண்ட் கம்பெனி (HUNT) - Rs. 3.75

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 225 |
| விலை உழைப்பு | 10.6 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 3 |

மதுரகவி அருளானந்தன்



# துளசி

## துன்பம் போக்கும் பிருந்தாவனி

துளசியின் ஒவ்வொரு இலையிலும் சிறீ ஹரியின் அருட்கடாட்சம் பொலிவுறுகிறது. மகிமை பொருந்தியதாக தெளிவுறுகிறது. திருமகள் மணாளன் திருமாலின் அருளைப் பெற்றுத் தரும் தெய்வத் தலம் (இலை) துளசி. ஆதலால், அனைத்துப் பிணிகளையும் போக்கி மங்களம் தந்து நற் சுவாத்தியம் தரும் துளசிச் செடியை பக்குவமாக பதியம் செய்து வீடுகளில் வழிபாடு இயற்றச் சொல்கின்றன சாஸ்திரங்கள்.
அனுதினமும் துளசி மாடத்தை வணங்குவதோடு, கார்த்திகை மாதம் துளசிக் கல்யாண நிகழ்வுதனை நடத்தி தெய்வத்துளசியை வழிபட்டு மகிழ்வர் ஆன்மீக ஆன்றோர். ஆக, துளசிச் செடியை தெய்வார்த்த ஆத்மமாகப் பேணி மதித்தும், மகத்துவமாய் வணங்கிப் பணிந்தும் வரக் காரணங்களை நோக்கின், புராணங்கள் பல்வேறு கதையாடல்களைச் சொல்லி நிற்கின்றன. நாமும் துளசி பற்றிய திருக்கதைகளை யும், துளசி வழிபாட்டின் மகிமைகளையும் தெரிந்து கொள்ளுதல் நன்று.

**பாற்கடலில் துளசி**
தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்த பொழுது தோன்றிய மங்கலப் பொருள்களில் அமுத கலசத்துடன் துளசியும் தோன்றியதாக புராணக் குறிப்புகள் உள்ளன.

**பிரம்மவரம் பெற்ற துளசி**
தர்மவசன் எனும் மனுவம்ச அரசனின் மனைவி தவமிருந்து ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தையானவள் ஒப்பில்லா அழகின் திருவுருவைக் கொண்டிருந்தாள். இந்தக்காரணம் கொண்டே அவளுக்கு துளசி (துள - ஒப்பு, சி - இல்லாதது) எனப் பெயரிட்டனர். காலங்கள் ஓடின. துளசி திருமண வயதடைந்தாள். நாராயணனைக் கணவனாக அடைய வேண்டும் என்ற விருப்பின் மேலீடு கொண்டு தவம் செய்தாள். இந்தத் தவத்தினை ஏற்றுக் கொண்ட பிரம்மன் நேரில் வந்து அவள் முன்பாகக் காட்சியளித்தார். என்ன வரம் வேண்டும் எனக் கேட்டார். அதற்குப் பதிலுரைத்த துளசி " நாராயணனைக் கணவனாக அடைய வரம் அருள வேண்டும்" எனக் கேட்டாள். அதற்கு பிரம்மா, "கிருஷ்ணனின் அருளால் பிறந்த சுதர்மன் என்பவன் முன்னொரு காலத்தில் உன்மீது ஆசை கொண்டான். அந்த விருப்பம் நிறைவேறாததால் ராதை அவனைப் பூமியில் பிறக்கும்படி சபித்தாள். அவன் பூமியில் சங்க சூடனாய் பிறந்துள்ளான். நீ அவனை மணந்து கொள். கண்ணனின் அருட் கடாட்சத்தைப் பெற்றுக் கொள்வாய். விருட்ச ரூபமாகி பிருந்தாவனத்தில் 'பிருந்தாவனி' எனும் பெயருடன் திகழ்ந்து கிருஷ்ணனுடன் இருப்பாய்" எனக்கூறி மறைந்தார்.



**விஷ்ணு பக்தை துளசி**
ஜலந்திரன் என்னும் அரசன் மும்மூர்த்திகளையும் போருக்கு அழைத்தான்.



ஆனாலும் ஜலந்திரன் மனைவியின் கற்பு அவனுக்குப் பாதுகாப்புக் கவசமாக விளங்கியது. ஜலந்திரன் மனைவியின் கற்புக்கு களங்கம் செய்வதன் ஊடே தான் அவனை அழிக்க முடியும் என்பதை கண்ணபிரான் ஊகம் செய்துகொண்டார். அதன் வழியே கண்ணபிரான் ஜலந்திரன் உருவமாக மாறி அவளை அடைந்து கொள்கிறார்.
இந்த சந்தர்ப்பத்திலே தன்னுடைய கற்புக்கு களங்கம் ஏற்பட்டுவிட்டதை அறிந்து கொண்ட ஜலந்திரனின் மனைவி தீக்குளித்து உயிரிழந்து விடுகிறாள். அவளுக்கு மகா விஷ்ணு மோட்சம் அளித்தார். மறு பிறவியில் துளசியாகப் பிறக்கும் அருட்காடாட்சம் கிடைக்கும் போது தன்னை வழிபாடு இயற்றும் பண்புடையவளாக, பூஜைக்கு உரியவளாக துளசியை மனமகிழ்வுடன் ஏற்றுக் கொள்கிறார்.

**வழிபாடு**
பெண்கள், குடும்ப நலன் பேணவும் சுமங்கலியாகத் திகழவும் தினமும் துளசி மாடத்திற்கு முன்பாகவோ அல்லது துளசிச் செடி இருக்கும் இடத்தின் முன்பாகவோ கோலமிடுவர். திருவிளக்கு ஏற்றி சுத்தமான நீரை வேரில் ஊற்றி மஞ்சள், குங்குமம், சந்தனம் என்பன இட்டு நறுமணம் உடைய மலர்களால் அர்ச்சித்து வழிபாடு இயற்றுவர். மும்முறை துளசியை வலம் வந்து வழிபடுவர்.

**மகிமை**
வீட்டில் துளசிச் செடியை வளர்த்தால் பாவங்கள் நீங்கும். உடல் நலம் வளம் பெறும். தீயவர்களின் கண் பார்வை அகலும். ஏவல், பில்லி, சூன்யம் என தீய சக்திகள் எம்மை அணுகாது. துர் தேவதைகள் தூர விலகிப் போய்விடும்.
துளசிச் செடியினை ஒவ்வொரு வீட்டிலும் பதியம் செய்தல் சிறப்பான கைங்கரியமாக அமையும். துளசி வேரை கையில் கட்டிக் கொண்டால் இடி பயம் ஏற்படாது.
துளசியைப் பூஜைக்காக கொய்யும் போது துளசிச் செடியின் கிளையோடு பறிக்கக் கூடாது. ஒவ்வொரு தளமாக (கிளையாக) பறிக்க வேண்டும். அதிகாலையில் நீராடிச் சுத்தமாக இருக்கும் போது பறிக்க வேண்டும். ஞாயிறு செவ்வாய், வெள்ளி, அமாவாசை பௌர்ணமி, மாலை வேளை, இரவு வேளை, மாதப் பிறப்பு, வருடப்பிறப்பு போன்ற சிரார்த்த தினங்களில் துளசியைப் பறித்தல் கூடாது.




> துளசியைப் பூஜைக் காக கொய்யும் போது துளசிச் செடியின் கிளை யோடு பறிக்கக் கூடாது. ஒவ்வொரு தளமாகப் பறிக்க வேண்டும். அதிகாலையில் நீராடிச் சுத்தமாக இருக்கும் போது பறிக்க வேண்டும். ஞாயிறு செவ்வாய், வெள்ளி, அமாவாசை பௌர்ணமி, மாலை வேளை, இரவு வேளை, மாதப் பிறப்பு, வருடப்பிறப்பு போன்ற சிரார்த்த தினங்களில் துளசி யைப் பறித்தல் கூடாது.

**துளசியின் வகை**
கிருஷ்ணதுளசி, சாதாரணதுளசி, கருந்துளசி என இவை வகையுறுகின்றன. இவற்றுள் கருந்துளசி வீட்டு பூஜைக்கு ஆகாதது. ஆனால் கோவில்களில் இவற்றைப் பயன்படுத்தலாம்.
துளசிச் செடியின் அடிப்பகுதியில் உள்ள ஜலம் (தண்ணீர்) கங்கா தீர்த்தத்திற்கு சமமானதாகும். தலையில் தெளித்துக் கொண்டால் பாவங்கள் நீங்கும். அதிகாலையில் நீராடும் போது தண்ணீரில் துளசியைக் கலந்து சிறிது நேரங்கழித்து நீராடுதல் சிறப்பு. எல்லாத் தீர்த்தங்களி லும் நீராடிய புண்ணியம் கிடைக்கும் என்பது ஐதீகம். அதே போன்று மரண காலத்தில் துளசித் தீர்த்தத்தைப் பருகுபவர்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் நீங்கப்பெறு வதாக புராணங்கள் கூறுகின்றன.
எனவே, துளசிச் செடியின் மகத்துவம் தனை உணர்ந்து கொள்வோம். அனுதினமும் வழிபாடு இயற்றி மகாலட்சுமி அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமாவோம்.



# தேங்காய், வாழைப்பழம் கொண்டு ஏன் அர்ச்சனை செய்கிறோம் தெரியுமா?



தெய்வங்களுக்குஅர்ச்சனைசெய்யும்போதோஅல்லதுபூஜை செய்யும்போதோதேங்காய், வாழைப்பழம்மட்டும்பூஜையில் முக்கிய இடம் பெறுகிறது. இதற்குக் காரணம் என்ன என்று கேட்டால், வாழைப்பழம் எல்லா பருவ காலத்திலும் எல்லா ஊர்களிலும், குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது. தேங்காய், முக்கண்களைக் கொண்டிருப்பதால் ஆணவம், கன்மம்,மாயைதனைஉடைப்பதுஎன்பதால்தான்தேங்காய், வாழைப்பழத்தைப் படைக்கிறோம் என்று சொல்வார்கள். ஆனால், அவை மட்டும் காரணமில்லை.


நாம் உண்டு முடித்தவுடன் எந்தக் காய், கனிகளின் கொட்டைகளைக்கீழேபோட்டாலும், அதுமீண்டும்முளைத்து விடும் ஆற்றல் கொண்டது.

ஆனால், வாழைப்பழத்தைத் தின்று தோலை வீசினாலோ, தேங்காயை தின்றுவிட்டு அதன் சிரட்டையைக் கீழே போட்டாலோ, அதுமீண்டும்முளைப்பதும்இல்லை. வேர்விடுவதும்இல்லை. அதைப்போலவே, நாமும்நமதுபாவங்களை எண்ணி மனம் வருந்தி வேண்டிக்கொள்ள வேண்டும்.

இதனால்எமதுஆன்மாதூய்மையாகித்துன்பங்கள்ஒழிந்து, மீண்டும் பிறக்காத நிலையை அடையலாம் என்பதே தேங்காய், வாழைப்பழம் எமக்கு உணர்த்தும் ரகசியம். எனவே, முன்னோர்கள் காரணம் இல்லாமல் ஒன்றும் தேங்காய்பழத்தைகடவுளுக்குப்படைக்கவில்லைஎன்பதை உணர்வோம்.

## பூஜைக்குரிய மலர்களும் அவற்றின் பயன்களும்

**அல்லிப்பூ:**
செல்வம் பெருகும்.
**நாகலிங்கம் பூ:**
செல்வம் பெருகும்
**செவ்வரத்தை:**
குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்.
**தாமரை:**
குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்
**பவளமல்லிகைப்பூ:**
விரும்பிய வாழ்வு அமையும்
**ரோஜாப்பூ :**
தியானம் கைகூடும்
**மல்லிகைப்பூ -**
செல்வம் பெருகும்.



# பத்தி எழுத்து

## விக்கிக்கு வந்த தலையிடியும் காய்ச்சலும்

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த வாரம் திடீரென மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அந்தச்சந்திப்புக்களில்அவர் வடக்கு மாகாண முதலமைச்சராகக் கலந்து கொண்டார் என்று சொல்வதிலும் பார்க்க, தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில்ஒருவராகக்கலந்து கொண்டார்என்பது சாலப் பொருத்தமாக இருக்கும்.

இரண்டு சந்திப்புக்களிலும் நடந்தேறிய விடயங்கள்மெல்லமெல்லஇப்போதுதான்வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. அதுவும் விக்னேஸ்வரனே பெரும்பாலான விடயங்களை வெளிக் கக்கி வருகின்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சருடன் தமிழ் மக்கள்பேரவையைச்சேர்ந்தசிலரும்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள்தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு தீர்வு யோசனையை மகாநாயக்க தேரர்களிடம் கையளித்திருந்தனர். அதற்கு விக்னேஸ்வரன் அனுமதித்திருந்தார். வடக்கு மாகாணசபையினால்தயாரிக்கப்பட்டதீர்வுத் திட்டத்தை, மகாநாயக்கதேரர்களிடம்கையாளிக்காமல்தவிர்த்தமைதொடர்பில்விக்னேஸ்வரன் இதுவரை வெளிப்படையாக எதையும் தெரிவிக்கவில்லை. பேரவையின் சார்பில் சந்திப்புக்குச்சென்றமையினால், வடக்குமாகாண அரசின்தீர்வுத்திட்ட யோசனையைக் கொடுப்பதிலிருந்து அவர் பின்வாங்கி யிருக்கலாம்.

இந்தச் சர்ச்சைகள் ஒருபுறம் இருக்க, மல்வத்து பீடத்துடனான சந்திப்பு சுமுகமாக நடந்ததாகவும், அஸ்கிரிய பீடத்துடனான சந்திப்பு கசப்பாக அமைந்து விட்டதாகவும் முதலமைச்சர் விக்னேஸ்வரனே தெரிவித்திருக்கின்றார்.

சந்திப்புக்கள் நடைபெற்று சில நாள்களின் பின்னர் கொழும்பு வானொலிக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் வழங்கிய செவ்வி கூர்ந்து நோக்கப்பட வேண்டியது. அவரது சொல்லும் செயலும் ஒன்றுக்கு ஒன்று எதிராக இருக்கின்றன. தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்று புடைக்குமாம். இதுபோன்று அவரது செயற்பாடு அமைந்திருந்தது.

“இதுமுதல்சந்திப்பு. உண்மையைச்சொன்னால் அவர்கள் கோவப்படுவார்கள் என்பதால் சிலவற்றைச் சொல்லவில்லை’’ என்று அந்த செவ்வியில்விக்னேஸ்வரன்குறிப்பிட்டுள்ளார். முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கு மக்கள் முன்னிலையில் உரையாற்றும்போது, உணர்ச்சி ததும்பப் பேசும்போது, “சிங்களவர்கள் கோவித்துக் கொள்வார்கள் என்பதால் நாம் எமது உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது” என்று அடிக்கடி குறிப்பிடுவார். மக்களிடம் கைதட்டுப் பெறுவதற்கும், அவர்களை உசுப்பேத்துவதற்கும் பேசிய வார்த்தைகளுக்கு இன்று அவராலேயே செயல் வடிவம் கொடுக்க முடியாமல் போய்விட்டது. உண்மைகளைப் பேசினால் கோவித்துக்கொள்வார்கள் என்பதால் சிலவற்றைச் சொல்ல முடியவில்லை என்று அவரே ஒப்புவிக்கின்றார்.

கல் கிடைக்கும் வரையில் நாயுடன் பேசுவது தான் இராஜதந்திரம்என்று சமூகவலைத்தளங்களில் தற்போது பலர் குறிப்பிடுகின்றார்கள். எல்லோருக்கும்புரியக்கூடிய மிக இலகுவான உதாரணம் இதுதான். அதைப்போன்றுதான் அரசியலிலும், சில விடயங்களைச் செயற்படுத்தவதற்குகாலம், தருணம்தேவை. சரியான நேரத்தில் எடுக்கும் பிழையான முடிவும். பிழையான நேரத்தில் எடுக்கும் சரியான முடிவும் வெற்றியைத் தராது. தருணம் பார்த்து அடிப்பதே, பேசுவதேஎமக்குச்சாதகமாக அமையும்.

இனியாவது முதலமைச்சர் விக்னேஸ்வரன், கைதட்டலுக்காகவும் உருவேற்றுவதற்காகவும் வார்த்தைகளை அள்ளிக் கொட்டாமல், செயலில் எதைச் செய்ய முடியுமோ அதைச் சொல்வதுதான் நல்லது.

## வரலாற்றில் இன்றைய தினம் 15.09.2017



1978 - லியோன் ஸ்பிங்ஸ்ஸை தோற்கடித்ததன் மூலம் ‘வேள்ட் ஹெவி வெய்ட்’ குத்துச் சண்டையில் மூன்று தடவை பட்டம் வென்ற முதலாவது வீரரானார் முகமட் அலி.

1812 - நெப்போலியனின் கீழான பிரெஞ்சுப் படை, மொஸ்கோவின் கிரம்லினை அடைந்தது.
1821- ஸ்பெய்னிடமிருந்து விடுதலை பெறுவதாககவுதமாலா, எல்சல்வடோர், ஹொண்டுராஸ் நிகாரகுவா மற்றும் கொஸ்ரறிக்கா ஆகிய நாடுகள் கூட்டாக அறிவித்தன.
1851 - பிலதெல்பியாவில் செயின்ட் யோசப்பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
1935 - நியூஹம்பேர்க்சட்டங்கள் ஜேர்மனி யூதர்களின் குடியுரிமையை மறுதலித்தன.
1944 - பிராங்ளின் டிரூஸ்வெல்ற்றும் வின்சன்ற் சேர்ச்சிலும் ஒக்ரகன் மாநாட்டில் ஒரு பகுதியாக கியூபெக்கில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.
1947 - ஜப்பானில்கத்லீன்சூறாவளியினால்ஆயிரத்து 77 பேர் உயிரிழந்தனர்.
1974 - கடத்தப்பட்ட வியட்நாம் வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி-706, தரையிறங்க முற்பட்ட வேளை 75 பேருடன் விபத்துக்குள்ளானது.
2002- சமாதானப் பேச்சுக்கள் குறித்து பொ.ஐ. முன்னணிக்குள் பிளவு
2006 - வடக்கு - கிழக்கைப் பிரிக்கக் கோரும் மனுக்கள் மீது ஒரே நாளில் விசாரணை பூர்த்தி. தீர்ப்பு ஒத்தி வைப்பு.

## நாளை 16.09.2017

சனிக்கிழமை

**ஆவணி - 31**

திதி: ஏகாதசி பி.ப. 04.56 வரை
நட்சத்திரம்: பூசம் பி.இ 02.13 வரை
சுபநேரம்: 03.03—04.33 வரை
ராகுகாலம்: 09.03—10.33 வரை

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**இடபம்:** பேச்சு, செயலில் புதிய உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பண வரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். லாபம் உயரும். பணியாளர்கள் சுதந்திர மனப்பான்மையுடன் பணிபுரிவர்.

**கடகம்:** உறவினர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**சிங்கம்:** அன்றாடப்பணி கூட சுமையாக தோன்றலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான அளவில் லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**கன்னி:** மதிநுட்பத்துடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். இலாபம் படிப்படியாக உயரும்.

**துலாம்:** உங்களின் பேச்சு சிலரை அதிருப்திக்கு ஆளாக்கலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

**விருச்சிகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சிறப்பாக இருக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**தனுசு:** குடும்ப விஷயத்தை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மகரம்:** நண்பரின் உதவி கிடைக்கும். முக்கிய விஷயத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம்:** வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தாராள வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மீனம்:** முக்கிய பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் எதிர்ப்பை சந்திப்பர்.



# இந்தமாத இறுதியில் 'கருப்பன்'

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர் விஜய் சேதுபதியின் நடிப்பில் தயாராகியுள்ள 'கருப்பன்' படம் இந்த மாதம் 29ஆம் திகதி திரைக்கு வரவுள்ளது என்று படக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.
இந்தப் படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக தன்யா நடித்துள்ளார். பாபி சிம்ஹா வில்லனாக நடித்துள்ளார். பன்னீர்செல்வம் இயக்கியுள்ள இந்தப் படம் ரசிகர்களிடையே அதிக எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதே நாளில் ஜி.வி.பிரகாஷின் 'செம்ம', நயன்தாராவின் 'அறம்', கௌதம் கார்த்திக்கின் 'ஹர ஹர மகாதேவகி', சந்தானத்தின் 'சர்வர் சுந்தரம்' உள்ளிட்ட படங்கள் வெளியாக இருக்கின்றன.
சிவகார்த்திகேயனின் வேலைக்காரன் படமும் எதிர்வரும் 29ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்தப் படம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

யானைகள் வாழும்
பூமியில்தான்
எறும்புகளும்
வாழ்கின்றன.

பூனைகள் வாழும்
வீடுகளில்தான்
எலிகளும் வாழ்கின்றன.

சிறுத்தைகள் வாழும்
காடுகளில்தான்
மான்களும்
வாழ்கின்றன.

சுறாக்கள் வாழும்
கடலில்தான் சிறு
மீன்களும் வாழ்கின்றன.

பாம்புகள் வாழும்
வயல்களில்தான்
தவளைகளும்
வாழ்கின்றன.

வாழ்க்கை என்பது
ஏய்த்துப் பிழைப்பதல்ல
போராடி வெல்வது...



பாதுகாப்பு

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | 3 | | 1 | |
| | | | | 7 | | 3 | | 5 |
| | | 8 | | | 6 | 2 | | |
| 6 | 8 | | | | | | 9 | |
| | | | | 5 | | | | |
| | 7 | | | | | | 2 | 3 |
| | | 6 | 2 | | | 1 | | |
| 5 | | 7 | | 4 | | | | |
| | 9 | | 7 | | | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 2 | 3 | 4 | 8 | 7 | 9 | 1 |
| 3 | 4 | 9 | 1 | 5 | 7 | 2 | 6 | 8 |
| 1 | 7 | 8 | 9 | 6 | 2 | 4 | 3 | 5 |
| 4 | 9 | 5 | 7 | 2 | 1 | 3 | 8 | 6 |
| 6 | 1 | 3 | 5 | 8 | 4 | 9 | 2 | 7 |
| 2 | 8 | 7 | 6 | 3 | 9 | 1 | 5 | 4 |
| 8 | 3 | 1 | 4 | 9 | 5 | 6 | 7 | 2 |
| 9 | 2 | 4 | 8 | 7 | 6 | 5 | 1 | 3 |
| 7 | 5 | 6 | 2 | 1 | 3 | 8 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.






இலத்திரனியல் திருமணம்

கோழியின் கிறுக்கல்!! Retweeted
Sairam @SairSairam · 15h
"ஆசையே துன்பத்துக்குக் காரணம்" என்று கூறிய புத்தருக்கும் ஆசை இருந்திருக்கிறது.... ஆசைப்படக் கூடாது என்று...

ஒரு கருவுற்ற தாய் தன் மகளிடம் கேட்கிறாள்."உனக்குத் தம்பி வேண்டுமா இல்லை தங்கை வேண்டுமா?"
**மகள்** : தம்பி
**தாய்** : யாரைப் போல?.
**மகள்** : ராவணனைப் போல.
**தாய்** : ஏன் இப்படி முட்டாள்தனமாகப் பேசுறாய்? உனக்குப் புத்தி இல்லையா?.
**மகள்** : அம்மா! இராவணன் தனது ராஜபோக வாழ்வையும், ராஜ்யத்தையும் தனது சகோதரி அவமதிக்கப்பட்டாள் என்ற ஒரே காரணத்துக்காக இழந்தவர்.
அவர் தனது எதிரியின் மனைவியை சிறை வைத்த போதும், சீதையை அவளது விருப்பத்திற்கு மாறாக தீண்டவில்லை. எனக்கு ஏன் அப்படி ஒரு சகோதரன் இருக்க கூடாது?
ஒரு சலைவைத் தொழிலாளி கூறினான் என்பதற்காக, தன்னுடன் நிழலைப் போல வாழ்ந்து வந்த கர்ப்பவதியான தன் மனைவியைப் பிரிந்த ராமரைப் போன்றதொரு சகோதரன் எனக்கு எதற்கு?
பதினான்கு ஆண்டு வனவாசமும், அக்கினி பரீட்சையும் செய்து தன கற்பை நிரூபிக்க போராட வைத்த ஒருவரை எப்படி சிறந்தவராக நினைக்க முடியும்?
அம்மா, நீ ஒருவருக்கு மனைவியாகவும், வேறொருவருக்கு சகோதரியாகவும் இருந்து கொண்டு, நீ ஏன் உன் மகன் ராமரைப் போல இருக்க வேண்டும் என்று விரும்பப்படுகிறாய்???





# நடப்பதெல்லாம் நன்மைக்கே

நடப்பது யாவருக்கும் நல்லது. வயதானவர்கள் மட்டும்தான் நடக்க வேண்டும் என்பதல்ல. பெண்கள், குழந்தைகள் அனைவருக்கும் இது நல்லது. ஓய்வு பெற்ற பின்னர் மிகவும் ஆராக்கியமாக இருக்கும் பல பேரைச் சந்தித்து ஒரு கணக்கெடுப்பை அமெரிக்காவில் நடத்தினார்கள். அப்போது பல பேரிடம் இருந்து கிடைத்த பதில் "நாம் தினமும் நான்கு கிலோ மீற்றருக்கு குறையாமல் நடக்கிறோம். வாரத்துக்கு 6 நாள்கள் தொடர்ந்து நடக்கிறோம்" என்றார்கள். அத்தோடு பலர் அதிக ஆயுளுடன் வாழ்வதாகவும் அறியப்பட்டதாம். நடக்கும் போது தோல், தசை இவற்றுக்கு ஒட்சிசன் கிடைக்கிறது. அதனால் சக்தியை வெளியிடும் திறமை எமது உடம்புக்கு அதிகமாகக் கிடைக்கும். சுவாசப்பை, இதயம் இவற்றுக்கெல்லாம் சுலபமான நிதானமான பயிற்சி கிடைக்கிறது. வேகமாக நடக்கும் போது குருதிக் குழாய்கள் விரிவடைகின்றன. குருதி ஓட்டம் சுறுசுறுப்பாகிறது. முதலில் நடக்க ஆரம்பிக்கும் போது இரண்டு கிலோ மீற்றர் என ஆரம்பித்து, பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக தூரத்தைக் கூட்டி ஐந்து கிலோ மீற்றர் வரையும் நடக்கலாம். இதைத் தினசரி ஒரு பயிற்சியாக செய்ய வேண்டும். முதலில் 15 நிமிடங்களும் பின்னர் படிப்படியாக ஒரு மணி நேரம் வரையும் நடக்கும் நேரத்தைக் கூட்டலாம். மணிக்கு 3இல் இருந்து 5 கிலோ மீற்றர் வேகத்தில் நடக்கலாம். நடக்கும் போது அணிந்துள்ள ஆடை, காலணி தளர்ச்சியானதாக இருக்க வேண்டும். நடக்க ஆரம்பித்த காலத்தில் கொஞ்சம் அசதியாக இருப்பின் நின்று ஓய்வெடுத்து நடக்கலாம். தனியாக நடக்காது கூடவே நண்பர் அல்லது கணவன் அல்லது மனைவி சேர்ந்து நடக்கலாம். குளிர் காற்று வீசும்போதும், நல்ல வெயில் அடிக்கும் போதும் நடப்பதைத் தவிர்க்கலாம்.

இருதயக் கோளாறு மூச்சுக் கோளாறு உள்ளவர்கள் மருத்துவ ஆலோசனையுடன் ஈடுபடுதல் நன்று. அறுபது வயது ஆன பின்னர் இதயம் வேலை செய்யும் திறன்1/5 பங்கு குறைந்துவிடுகிறது. அதேவேளை குருதி அழுத்தம் 1/5பங்கு கூடிவிடுகிறது. அதனால் இரண்டு விதத்தில் ஏற்படும் இதயப் பாதிப்பைச் சரியாக்கச் சிறந்த வழி நடப்பதுதான்.

# நுனிப்புல்

சில வெள்ளாடுகளும், செம்மறி ஆடுகளும் தமது குட்டிகளுடன் புல்வெளி ஒன்றில் மேய்ந்து கொண்டிருந்தன. அங்கே நின்ற செம்மறி ஆட்டுக் குட்டிகள் புற்களின் நுனிக்கொழுந்துகளைத் தேடித் தேடி மேய்ந்து கொண்டிருந்தன. இதனைக் கவனித்த வெள்ளாடு "என் அருமை செம்மறிக்குட்டிகளே! இப்படி நுனிக்கொழுந்துகளைப் பார்த்துக் கடிக்காதீர்கள். இன்று ஒருவருக்கு மட்டுமே உணவாகும். அவை, நாளைக்கு தழைத்து வளர்ந்தால் நம் அனைவருக்கும் உணவாகும் அல்லவா" என்றது.

அதைக் கேட்ட செம்மறி ஆடு "நீ உன் வேலையைப் பார் என் குட்டிகளுக்கு எவை விருப்பமோ அவற்றை அவை உண்ணட்டும். நீ அதைச் சாப்பிடு, இதைச் சாப்பிடாதே என்று கட்டளையிட வேண்டாம்" என்றது கோபமாக.

"இந்தக் காலத்தில் நல்லதைச் சொன்னால் யார்தான் கேட்கிறார்கள்" என மனம் நொந்தபடியே தன் குட்டிகளை நுனிக் கொழுந்துகளைக் கடிக்க விடாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டது அந்த வெள்ளாடு.



சில நாள்கள் சென்றன. செம்மறி ஆடுகள் மேய்ந்த இடத்தில் ஒரு இலை, தழைகள் கூட காணப்படவில்லை. நுனிக்கொழுந்துகள் கடிபட்ட செடிகள் தழைக்க நாளாகும். ஆனால் வெள்ளாடுகள் மேய்ந்த இடங்களில் பசுமை தெரிந்தது. நுனிக்கொழுந்துகள் கடிக்கப்படாது காக்கப்பட்டதால் இப்பொழுது அவைகள் சாப்பிடும் பக்குவத்தில் தழைத்து வளர்ந்திருந்தன.

வெள்ளாடுகள் வழக்கம் போல எந்தத் தடைகளுமின்றி புற்களை மேயத் தொடங்கின. ஆனால் செம்மறி ஆடுகளோ செய்வது அறியாது திகைத்து நின்றன.

அடுத்தவர் பேச்சைக் கேட்பதா என நினைத்த அவை தங்களுடைய அடங்காத குணத்தால் இப்பொழுது திண்டாடிக்கொண்டிருப்பதை உணர்ந்தன. அருகில் கிடைத்த உணவைப் பாதுகாக்கத் தெரியாதமையால் அவை வேறு இடம்தேடிச் செல்ல வேண்டியதாயிற்று.

இன்றைக்கு நிறைய உணவு கிடைக்கிறது என்பதற்காக அவற்றை வீணாக்கக் கூடாது. அது எம்முடைய நாளைய உணவாகக் கூட இருக்கலாம் என்பதைச் செம்மறி ஆடுகள் உணர்ந்தபடி வேறு இடம் தேடி அலைந்து திரிந்தன.

# தென்னை மரத்தில் தேள் கொட்டினால்...



தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டும் என்பது பழமொழி. எங்கோ ஒரு செயல் நடந்தால் அதன் விளைவு வேறு எங்கோ தெரியும் என்றுதான் இந்தப் பழமொழிக்கு பொருள் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இதன் உள்ளர்த்தம் வேறு.

தென்னை மரத்தில் ஏறுபவர்கள் பூச்சிக்கடிகளால் பாதிப்பு வராமலிருக்க ஒரு விதமான எண்ணெய்யை அல்லது சாந்தை உடலில் பூசிக்கொண்டு மரமேறுவார்கள். அப்படி ஏறும்போது மரத்தில் இருக்கும் தேள்கொட்டினால் அவர்கள் பூசிக்கொண்ட எண்ணெயின் மருத்துவ குணத்தினால் உடனே வலி தெரியாது. ஆனால் தேளின் விஷம் தோலினுள் ஊடுருவி இருந்தால் சிறிது நேரத்தின் பின்னர் தேள் கொட்டிய இடத்தில் நெறி கட்டிக்கொள்ளும். அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல். மற்றொரு மரத்தில் அவர் ஏறும்போது தான் அதன் உண்மையான வலிதெரியும். அதன் பின்பே மருத்துவ சிகிச்சை எடுப்பர். 'தென்னை மரத்தில் ஏறும்போது தேள் கொட்டினால் பனைமரத்தில் ஏறும்போது நெறி கட்டும்' என்ற உண்மையான பழமொழியே இப்போது தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டும் என்று திரிபுபட்டு வழக்கத்தில் உள்ளது.



# வெற்றிடங்களை நிரப்புங்கள்

1. பச்சைப் படகில் எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

..............................................

2. சிவப்புப் படகில் எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

..............................................

3. இரு படகுகளிலும் எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

..............................................

4. ஆண் பிள்ளைகள் கூடுதலாக உள்ள படகு எது?

..............................................

5. பெண் பிள்ளைகள் கூடுதலாக உள்ள படகு எது?

..............................................

6. இரு படகுகளிலும் எத்தனை பெண் பிள்ளைகள் உள்ளனர்?

..............................................

7. இரு படகுகளிலும் எத்தனை ஆண் பிள்ளைகள் உள்ளனர்?

..............................................




# ஒன்று, இரண்டு

ஒன்று இரண்டு
உறுதி நீ கொண்டு
மூன்று நான்கு
முயன்று மேல் ஓங்கு
ஐந்து ஆறு
அன்பு சொல் கூறு
ஏழு எட்டு
இனிமைத் தேன் சொட்டு
ஒன்பது பத்து
உண்மை உன் சொத்து

# பொன்மொழிகள்

உலகில் நாம் எங்கே சென்றாலும் கேட்கக் கூடிய விடயங்கள் இரண்டு. ஒன்று உயர்ந்து கொண்டே வருகிறது. வாழ்க்கைச் செலவு; இரண்டு குறைந்து வருவது கல்வித் தரம்.

அமரர் லால்பகதூர்

பிறருக்கு நல்லது செய்ய வேண்டுமென்று எவன் விரும்புகிறானோ அவனுக்கு அந்தக் கணமே நல்லது கிட்டுகிறது.

கன்பூஷியஸ்

இலக்கியம் என்பது இறந்த காலத்தை விளக்க வேண்டும். நிகழ் காலத்தைப் பிரதிபலிக்க வேண்டும்; எதிர் காலத்தை உருவாக்க வேண்டும்


மருத்துவர் ராதா கிருஷ்ணன்

பிறரை வெல்பவன் பலசாலி, தன்னைத் தானே வெற்றி கொள்பவன் மகா வல்லமை பொருந்தியவன்.

புத்தர்

சொன்ன சொல்லும், எய்த அம்பும், கடந்த கால வாழ்வும், அசட்டையாய்க் கைவிட்ட வாய்ப்பும் திரும்பிவர மாட்டா.

அரேபியப் பழமொழி



# மூளையின் கற்றல் திறன்

## பகுத்தறிவின் பயன்

தமிழ்கோ

மூளை என்பது நரம்பு கலங்களால் (Neurons) பிணையப்பட்ட வலை (Neural Network). நாம் கற்கும்போது புதிய நரம்புக் கல இணைப்புகளை உருவாக்கியோ அல்லது இணைப்புகளின் பலத்தை கூட்டிக் குறைத்தோ எமது மூளை கற்றுக் கொள்கின்றது. இவ்வாறு புலன்கள் மூலமாக சொல்லப்படுகின்ற, உணரப்படுகின்ற உலக நடப்புக்களை. விடயங்களை கண்டு கொண்டு மூளை மாதிரிகளை (Models) உருவாக்குகின்றது. இதில் ஒரு மாதிரியின் பலம் அல்லது நம்பிக்கை என்பது அதன் நிகழ்தகவை பொறுத்ததாக அமைந்துள்ளது. அமைந்துவிடுகிறது. நாம் கற்றுக் கொள்ளும்போது அந்த மாதிரியின் நம்பிக்கை நிகழ்தகவு என்பது அதிகரிக்கவோ அல்லது குறையவோ செய்யும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**புலன் மாதிரிகள்**

இந்த மாதிரிகளைக் கொண்டே நாம் வாழ்க்கையை, உலகைப் புரிந்து கொள்ள, கணித்துக் கொள்ள முடிகிறது. அதன்படி வாழ்கின்றோம். புலன்கள் மூலமாக மூளைக்கு செல்லும் எந்த விடயங்களும் உலகைப் பற்றியதான முழுமை அல்ல. அந்த முழுமையற்ற விடயங்களிலிருந்து மூளை ஒரு மாதிரியை உருவாக்கிக் கொண்டு உலகை, வாழ்க்கையைப் புரிந்து கணிப்பதையே அறிவுஎன்கின்றோம். அனைத்துமே முழுமையற்று இருப்பதால் அனைத்துமே நம்பிக்கையின் அடிப்படைதான் என்கின்றனர் விஞ்ஞானிகள். நம்பிக்கையின் நிகழ்தகவு வேறாக இருக்கலாம். 100 விகிதம் நிச்சயம் என்று ஒன்றும் இல்லை. இருந்துவிட முடியாது. ஒவ்வொருவரினதும் மூடநம்பிக்கையும் அவரின் மூளையின் செயல்நிலைப்படியேயான நம்பிக்கையே.

ஆக, நம் நம்பிக்கை என்பது தற்சார்புடையது (Subjective) எனப்படுகிறது. எனவே தான் பாரபட்சமற்ற வெளிசார்புடைய (Objective) ஆராய்ச்சியை (அறிவியல்) நாடி நிற்கின்றது. தேடி நிற்கின்றது. இந்த விடயங்களைத் தான் கலிலியோ உள்ளடங்கலான பல அறிஞர்கள் எமக்கு வழிகாட்டியாக சுட்டியுள்ளனர். எந்த ஒன்றும் பரிணாம வளர்ச்சி அடைய சில முக்கிய அம்சங்கள் உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**சேமிப்பு இடம்**


ஒன்று சேமிப்பு இடம் (Storage). இரண்டு மரபணு (Genes) இருக்கும் அல்லது சேமித்த இடம். மரபணு அதன் நகல் எடுத்தலை இனப்பெருக்கம் என்றும் அதன் பிழைகளை மரபு பிழைகள் என்றும் குறிப்பிடுகிறோம். பரிணாம வளர்ச்சிக்கு நல்லது கெட்டது என்பதெல்லாம் தெரியாது. சூழலுக்கு ஏற்ப தக்கவைகள் பிழைத்து வளர்ச்சி அடைகிறது. பரிணாம வளர்ச்சிக்கு மற்றொரு உதாரணமாக 'மெம்கள்' (Memes) சொல்லப்படுகிறது. 'மெம்' என்பது ஒரு யோசனையைக் (Idea) குறிக்கும். கடவுள், மதம், அறிவியல், ஜாதகம், கலாச்சாரம், ஜாதி எல்லாமும் மெம்கள் தான். இவை இருக்கும் அல்லது சேமித்த இடம் மூளை தான். இவை எப்போதும் ஒரு மூளையிலிருந்து மற்றொன்றிக்கு காலம் காலமாக மொழி, கலாசாரம் மூலமாகப் பரவுகின்றது. பரப்பப்படுகின்றது அல்லது நகல் எடுக்கப்படுகின்றது.

ஜீன்களைப் போலவே சாவடைந்துபோன மெம்கள் கோடான கோடி உள்ளதாகக் கூறப்படுகிறது. இவை அனைத்தும் ஏதாவது ஒரு வகையிலே சூழலுக்கு ஏற்ப வளர்ச்சி அடைந்தவைகளாகக் காணப்படுகிறது. அந்தச் சூழலில் பல மூடநம்பிக்கைகளுக்கு எம் உணர்ச்சிகள் முக்கிய காரணிகளாக அமைந்துவிடுகின்றன. மனிதனின் ஆரம்ப கால கட்டங்களில் அறியாமையும் பய உணர்ச்சியும் பல மூட நம்பிக்கைகளுக்கு முக்கிய காரணிகளாக இருந்திருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. மெம்கள் வளர்ச்சி அடைய தேர்ந்த மொழி மற்றும் கலாசாரம் தேவை என்பதால் அதைக் கொண்ட மனிதனிடத்தில் மூட நம்பிக்கைகளும், அறிவியல் வளர்ச்சிகளும் தொற்றிக்கொண்டது. அவற்றை வளர்ச்சிப் போக்கில் காணமுடிகின்றது. ஏனைய விலங்குகளில் இவற்றை காண முடிவதில்லை.

**பகுத்தறிவு**

பகுத்தறிவு என்பது (Critical Thinking) ஒவ்வொரு விடயத்தையும் சீர்தூக்கி வெளிச்சார்புடன் (Objective) கற்று அதற்கு ஏற்பதாய் நம்பிக்கை நிகழ்தகவுகளை அமைப்பதே. ஆனாலும் இவை அறிவையும் நாம் வளர்ந்த அல்லது வாழும் சூழல்களையும் பொறுத்து அமைந்துள்ளது. முறையான பகுத்தறிவு என்பது இல்லாது போகும் போது மூளை எளிதாக ஏமாந்து போகிறது. நம்பிக்கை நிகழ்தகவுகளை வெளிச்சார்பு அறிவுக்கு (ObjectiveKnowledge) எதிராக அமைத்துவிடுகிறது. இதனை மூடநம்பிக்கை எனலாம்.

ஆக, இறந்தவருக்கு அஞ்சலி செலுத்துவதும், நினைவு சின்னங்கள் எழுப்புவதும், பாடுவதும், கொண்டாடுவதும் பகுத்தறிவு தான். பகுத்தறிவு என்பது நாம் எதை செய்தாலும் அதை புரிந்து கொண்டு செய்யும் தன்மையிலும் அல்லது நம்பிக்னகை மிகுதியான செயல்நிலைகளின் கீழ் படிநிலைகள் என்பதில் தான் தங்கியுள்ளது. பகுத்தறிவு என்பது மூளையின் அறிவுப் பகுதியை மட்டுமே ஏற்பதல்ல எம் உணர்ச்சிப் பகுதியையும் ஏற்று நடப்பது தான்.




# கடல் உயிர்ப்பாகும் நீர் உலவிகள்




இந்த உலகில் மனிதன், விலங்குகள், பூச்சிகள், புழுக்கள், நுண்ணுயிரிகள் என ஆயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. அவை பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றுவருகின்றன. உலகில் வாழும் உயிரினங்களுள் தரையில் வாழும் உயிரினங்களின் வீதம் ஒன்றாக காணப்படுகிறது. மீதமுள்ள 99 வீதமான உயிரினங்களும் கடலில்தான் வாழ்கின்றன.

உலக மேற்பரப்பில் முதலில் தோன்றிய உயிரினமாக கடற்பாசி குறிப்பிடப்படுகிறது. அண்ணளவாக 25 மில்லியன் உயிரினங்கள் கடலில் வாழ்வதாகக் கணிக்கிறார்கள். அவை அனைத்திற்கும் பெயர் கொடுத்து முடிப்பதற்கு இன்னமும் பல நூறு ஆண்டுகள் தேவை. தமிழில் பல கடல் வாழ் உயிரினங்களின் பெயர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. கடலில் 4 கிலோ மீற்றர் ஆழம் வரையிலும் உயிரினங்கள் வாழ்கின்றன. அங்கே ஒளிரும் மீன்கள் உள்ளன.

**திமிங்கல வேடிக்கை**

தற்போது உலகில் உள்ள மிகப்பெரிய உயிரினம் 'நீலத் திமிங்கலம்' என்று சொல்லப்படுகிறது. அவை கடலில் நீந்துவதைப் பார்ப்பது மேற்கு நாட்டவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு. அதற்காகவே நேரத்தை ஒதுக்கித் கொள்கின்றனர். படகுகளில் சென்று பார்க்கிறார்கள்.



இதற்கெனவே பல சுற்றுலா நிறுவனங் கள் இயங்குகின்றன. ஜப்பான், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் திமிங்கல வேடிக்கை மிகப்பெரிய வருமானம் ஈட்டும் சுற்றுலாத்துறை அம்சமாகக் காணப்படுகிறது.

சுறாக்களில் 350 வகைப்பாடுகள் உள்ளன. அவற்றுள் 36 வகையான சுறாக்கள் மனிதர்களைத் தாக்குகின்றன. சுறா மீன்களிடம் சிக்குண்டு ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 30 முதல் 75 பேர் வரை உயிரிழந்து போவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

(24ஆம் பக்கம் பார்க்க)

அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு



கடந்த 18.08.2017 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
ஐயம்பிள்ளை
மகேந்திரலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (15.09.2017) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 17.09.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராச வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

மகேந்திரலிங்கம் குடும்பத்தினர்
021 223 1739

## மரண அறிவித்தல்கள்

### விஜயலட்சுமி மாணிக்கவாசகம்



நாச்சிமார் கோயிலடியை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட காலமேகத்தின் மகள் விஜயலட்சுமி மாணிக்கவாசகம் நேற்று (14.09.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1010/28, தாளையடி லேன்,
நாச்சிமார்கோயிலடி.

தகவல்:
குடும்பத்தினர்.

திருமதி

### நமலேஸ்வரி கத்தறீன் சூசைப்பிள்ளை



ஏழாலை தெற்கு, சூராவத்தை சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமலேஸ்வரி கத்தறீன் சூசைப்பிள்ளை (13.09.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அதிபர் பேனாட் சூசைப்பிள்ளை அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்பாதுரை - தங்கம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான பேனாட் - கிறிஸ்ரினா தம்பதியரின் மருமகளும் ஜோசவ் தயாநிதி, ஜோசவ்தவராஜா காலஞ்சென்ற ஜோசப் செல்வராஜா மற்றும் கத்தாரின் ஜெயவதி, ஜோசப் சாந்தகுமார், அஞ்சலா திலகவதி, எறின் வளர்மதி ஆகியோரின் பாசமிகு தாயும் சாந்தி, டெய்சி, எழில், நேசன், பொன்ராஜ், தயாபரன் ஆகியோரின் மாமியாரும் தஸ்மின், யாழினி, அமல்ராஜ், அமலதாஸ், பேனாட் ஆகியோரின் அம்மம்மாவும் தஸ்மின், யாழினி, உசாந்தினி, தயாளன், தயாபரன், கரன், றூபினி, மரினா, மீனுஜா, செல்வராஜ், கயுபா ஆகியோரின் அப்பம்மாவும் யூலியாவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.09.2017) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு சூராவத்தை தூய திரேசம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சூ. ஜோ. தவராஜா (தவா - மகன்)
077 4424 335



பிறப்பு : 30.03.1935 இறப்பு : 08.09.2017

### லயனல் இராசையா தங்கராஜா

யாழ். மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கு, கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட லயனல் இராசையா தங்கராஜா அவர்கள் கடந்த (08.09.2017) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார், மட்டுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசையா, தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும்,தங்கராணி அவர்களின் அன்புக் கணவரும், கிறிஸ்டி(கனடா), ஏஞ்சலின்(கனடா), றோய் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நேசராணி பீடில், காலஞ்சென்ற ஜெயநாதன், செல்வரட்டினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காமனி(கனடா), இயூஜின்(கனடா), சுமித்திரா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், நேசராஜா பீடில் (கனடா), காலஞ்சென்ற பிரீமி ஜெயநாதன், நகுலேஸ்வரி செல்வரட்டினம், காலஞ்சென்ற தவமலர் சாரங்கபாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேனுகா, சிந்துகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 16.09.2017 சனிக்கிழமை அன்று மு.ப. 10.30 மணியளவில் Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada எனும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 332 2428

தகவல்:
குடும்பத்தினர்.

# கடல் உயிர்ப்பாகும் நீர் உலவிகள்

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஆழ்கடல் மூழ்கு வீரர்**

ஆழ்கடலில் மூழ்கி ஆய்வுகளை மேற்கொள்ளும் வீரர்கள் மூழ்கும் ஆழத்துக்கு ஏற்றவாறும், அவர்களது அனுபவத்தைப் பொறுத்தும் சம்பளம் பெறுகின்றனர். குறைந்தது எட்டு இலட்சம் முதல் ஒரு கோடி ரூபாய் வரையிலும் சம்பளம் கிடைக்கிறது.

ஆழ்கடலுக்கு உள்ளே எண்ணெய், எரிவாயுக் குழாய்களைப் பதிக்கவும், கண்டங்களுக்கு இடையே கேபிள்களைப் பதிக்கவும், அவற்றைப் பராமரிக்கவும், கடலுக்கு மேலே பாலம் அமைக்கவும் ஆழ்கடல் மூழ்கு வீரர்களின் உதவி தேவைப்படுகிறது. கடல் உயிரினச் சூழல் பற்றிய ஆய்வுகளுக்கும் விஞ்ஞானிகள் இவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

ஆழ்கடல் வீரர்கள் அதிக தண்ணீர் சூழ்ந்த நிலையில் வெளிச்சமே இல்லாத இடத்தில் வேலை பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இவர்களுக்காக சிறப்பு ஆடை வடிவமைக்கப்பட்டு உள்ளது. அது 'டைவிங் பெல்' என்ற அமைப்புடன் இணைக்கப்பட்டு இருக்கும். டைவிங் பெல்லில் இருந்து ஆழ்கடல் மூழ்கு வீரரின் சிறப்பு ஆடைக்கு உள்ளே இணைக்கப்பட்ட குழாய்கள் மூலம் அவருக்குத் தொடர்ந்து வெதுவெதுப்பான நீரும், காற்றும் அளிக்கப்படும். கப்பலின் 'சாச்சுரேசன் சேம்பர்' என்ற பகுதியில் இருந்து கடலுக்கு உள்ளே இவர்கள் இறக்கப்படுவார்கள்.

ஆழ்கடல் மூழ்கு வீரர்கள் மூச்சு விடும் முறையும் மாறுபட்டு இருக்கிறது. அவர்கள் உள்ளே இழுக்கும் மூச்சுக் காற்றில் ஒட்சிசனும், ஹீலியமும் கலந்து இருக்கும். ஹீலியம் குருதியில் கரையாது என்பதே இதற்குக் காரணம். சாதாரணமாக நாம் காற்றில் சேர்த்துச் சுவாசிக்கும் நைதரசன் ஆழ்கடல் மூழ்கு வீரர்கள் கடலின் அடிப்பகுதிக்கு உள்ளே செல்லும்போது அங்கே உள்ள கடுமையான அழுத்தத்தால் குருதியில் இருந்து வெளியேறத் தொடங்கும். மிகுந்த வேதனையை ஏற்படுத்தும். சில வேளைகளில் மரணம்கூட ஏற்படும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். நகரில் பிரபல்யமிக்க புடைவையகத்திற்கு பணியாளர்கள் தேவை.

☆ **விற்பனை பிரதிநிதி** (ஆண், பெண்)
முன் அனுபவம் அவசியமில்லை

☆ **அலுவலக பணியாளர்** (பெண்)
அனுபவம் உள்ளவர், O/L சித்தி, (வயது 18 - 30 வரை)
திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு - 077 018 5471**

சீட்டிழுப்பு வாரம்: 15
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2017.09.14
அத கோடிபதி
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,023,545/-
வெற்றி இலக்கங்கள்
10 47 50 65 Q
06 13 34 54
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1398
சீட்டிழுப்பு திகதி 2017.09.14
வெற்றி இலக்கங்கள்
10 13 35 54 H
01 09 40 64
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,188,172/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 702
சீட்டிழுப்பு திகதி 14.09.2017 வியாழக்கிழமை
F 30 48 50 65
சுப்பர் ஜக்பொட்
ரூ. 59, 369, 256/=
37 45 58 72
நீல நிற டிக்கட்டுகள் 2017.09.16 ஆம் திகதி சனிக்கிழமை கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB

உத்தியோகபூர்வ முடிவுகள்
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 074
சீட்டிழுப்பு திகதி 14.09.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 20 61 65
சுப்பர் இலக்கம் 06
அதிர்ஷ்ட மாதம் ஏப்ரல்
ரூ. 16, 720, 802/= | ரூ. 33, 96, 389/= | ரூ. 28, 43, 678/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
06 13 51 58
2017.09.16 ஆம் திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## கார், வான் வாடகைக்கு தேவை

நிறுவனத்திற்கு கார்கள், வான்கள் மாத வாடகைக்கு தேவை. 076 448 1101

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ 1979 ஆம் ஆண்டு புனர்பூசநட்சத்திரம் சொந்தமாக தொழில் புரியும் அழகிய மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை

077 905 8615

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



10.30 / 1.30 / 4.30 / 7.30 / 10.00 PM

JAFFNA INTERNATIONAL CINEMA FESTIVAL

10.30 / 1.30 / 4.30 / 7.30 / 10.00 PM




3D 10.30 AM / 4.30 PM 1.30 PM / 7.30 PM / 10.00 PM

விசாரணை 021- 2227712
facebook MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## மந்துவில் படுகொலை நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், செப்.15

புதுக்குடி யிருப்பு மந்துவில் சந்தியில் 1999ஆம் ஆண்டு அரச வான் படையின் தாக்குதலில்கொல்லப்பட்டவர்களின் நினைவேந்தல் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு மந்துவில் சந்தியில் இடம்பெறுகின்றது.

இந்த நிகழ்வை வன்னிக்குரோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர். நினைவேந்தலின் போது கொல்லப்பட்டவர்களின் நினைவுத் தூபிக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெறும்.

1999ஆம் ஆண்டு மந்துவில் சந்தியில் உள்ள சந்தைக் கட்டடத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அரச வான் படையின் குண்டு வீச்சில் 26 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 85 பேர் படுகாயமடைந்தனர். (வ-ய-8-26)

## நல்லூரில் இன்று கந்தபுராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.15

கந்தபுராண தொடர் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம் கதிர் கலையகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

சிவஸ்ரீ சபா பாஸ்கரக் குருக்கள் நிகழ்வுக்கு தலைமை தாங்குவார்.

நிகழ்வில் நல்லூர் பஜனைக் குழுவினர் பஜனை வழங்குவர். சொல்வேந்தர் பொன். சுகந்தன் வழங்கும் கந்தபுராண தொடர் சொற்பொழிவும் நிகழ்வும் இடம்பெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக தேவஞானன் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 15



கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக ஞானானந்தராஜா தேவஞானன் (இலங்கை கணக்காய்வு சேவை 1) பதவி உயர்வு பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவர், கணக்காய்வு சேவையில் 36 வருடங்கள் கணக்காய்வு அத்தியட்சகர், உதவிக் கணக்காய்வு தலைமை அதிபதி போன்ற முக்கிய பதவிகளை வகித்திருந்தார்.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் கணக்காய்வு முகாமைத்துவப் பொறுப்புகளுக்கு பொது சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண பொது கணக்குக் குழு மற்றும் நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு, பொது முயற்சி கணக்குக் குழு (கோப்) ஆகியவற்றில் பங்கு கொண்டு அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்களில் காணப்பட்ட நிதி நிர்வாகச் செயற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகளை சிறந்த முறையில் விசாரணை செய்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதிலும் ஞானானந்தராஜா தேவஞானன் பெரும் பங்காற்றியிருந்தார்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தில் 15 ஆண்டுகளின் பின்னர் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியைப் பெறும் தமிழராக ஞானானந்தராஜா தேவஞானன் விளங்குகின்றார். (வ)

## அளவெட்டியில் கட்டடத் திறப்புவிழா

அளவெட்டி, செப்.15

அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திறப்பு விழாவும் மலர்வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பி.ப.2மணிக்கு அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நிகழ்வு நடைபெறும். கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் வை. சின்னப்பு நிகழ்வுக்குத் தலைமை தாங்குவார்.

முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவும், மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவனும், இ.அங்கஜனும், பொ.ஐங்கரநேசனும், வலி.வடக்குப் பிரதேச செயலாளர் ச.சிவசிறியும், வலி. வடக்குப் பிரதேசசபைச் செயலாளர் இ.பகீரதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ய)

## யாழ். இந்துவில் நாளை ஆங்கில விவாத அரங்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்குமிடையிலான நான்காவது ஆங்கில விவாத அரங்கு நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது

இந்த விவாத அரங்கு காலை 9.30 மணிக்கு இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இடம்பெறும் என பழையமாணவர் சங்கத்தினர் அறிவித்தனர். (ய)

### இந்தியாவால்...

கொண்டார். அகிம்சையைப் போதித்த காந்திய தேசம் என்று சொல்லப்பட்ட இந்தியா, தியாக தீபம் திலீபனின் அகிம்சைப் போராட்டத்தின் முன் தோற்றுப் போனது. திலீபனின் சாவைவேடிக்கைபார்த்தது இந்தியா. இதுவே பின்னாளில் விடுதலைப் புலிகள் இந்தியாவை ஈழமண்ணிலிருந்து அடித்து விரட்டி துரத்தும் அளவுக்கு மாற்றம் கண்டது.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழீழம் மலரட்டும்!!' என்று முழக்கமிட்டு தாயக மண்ணை முத்தமிட்டு வீரகாவியம் படைத்த தியாக தீபம் திலீபனின் நினைவுநாள், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைப் பிரதேசங்களில் மிக உணர்வெழுச்சியுடன் கடந்த காலங்களில் நினைவுகூரப்பட்டது. சிவப்பு மஞ்சள் கொடிகளால் தமிழர் தாயக மண் அலங்கரிக்கப்பட்டு, முக்கிய சந்திகளில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

தாயக தேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்ட பின்னர், பகிரங்கமாக பொதுவெளியில் நினைவுநாள் நினைவுகூரப்படவில்லை. புலம் பெயர் தேசங்களில் மாத்திரம் பேரெழுச்சியுடன் நினைவுகூரப்பட்டு வந்தது.

2016ஆம் ஆண்டு, நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் 10ஆண்டுகளின் பின்னர் பகிரங்கமாக நினைவுநாள் நிகழ்வுகள் நடத்தப்பட்டிருந்தன. (வ-5)

### 11 மாதக்...

குழந்தைக்கு நேற்றுமுன்தினம் அதிகாலை காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. பெற்றோர் குழந்தைக்கு ஒத்தடம் வழங்கியதுடன் பனடோல் 'சிரப்' பும்பருக்கியுள்ளனர். அதனைத்தொடர்ந்து குழந்தைக்கு காய்ச்சல் குறைந்துள்ளது. எனினும் அன்றையதினம் பிற்பகலே மீண்டும் கடுமையாக காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

அச்சமடைந்த பெற்றோர், குழந்தையை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு ஒரு மணி நேரத்திலேயே குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இந்த இறப்பு தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். குழந்தையின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-8-ரி1)

### அல் ஹுசைன்...

அதற்கு இலங்கை பதிலளிக்காது என்பதை அறிந்துதான் மனித உரிமை ஆணையாளர் இவ்வாறு அழுத்தம் கொடுக்கின்றார். ஐ.நா. பாதுகாப்புச்சபை செய்யவேண்டியதையே இன்று ஹுசைன் செய்து கொண்டிருக்கின்றார் என்றார். (வ-5)

### வாகன...

தேவராசா (வயது -70) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவர் உயிரிழந்தார். அவரது உடலை ஆழியவளைக்குக் கொண்டுசென்று சேர்ப்பித்துதிரும்பியபோதே விபத்து நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. வாகனத்தின் சாரதியே உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-8,ரி1,106)

### பொலிஸார்...

பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்ட னர்.

"5 சந்தேகநபர்கள் ஒவ்வொருவரும் 50 ஆயிரம் ரூபா காசுப் பிணை, 2 இலட்சம் ரூபா பெறுமதியிலான 2 ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் கையொப்பமிட வேண்டும். சந்தேகநபர்களின் கடவுச் சீட்டு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர்கள் 5 பேரும் வெளிநாடு செல்வதற்குத் தடைவிதிக்குமாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடப்படுகிறது" என்று பிணை விண்ணப்பங்கள் மீதான கட்டளையில் நிபந்தனை களை விதித்தார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் குளப்பிட்டி சந்தியை அண்மித்து கடந்த ஒக்ரோபர் 19ஆம் திகதி நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த நடராசா கஜன், யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் ஆகியோரே கொல்லப்பட்டனர். இவர்கள் யாழ். பல்கலைக்கழக 2 ஆம் 3 ஆம் வருட மாணவர்கள்.

மாணவர்கள் கொலை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் 5 பேரையும் பிணையில் விடுவிக்கக் கோரி அவர்களது உறவினர்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விண்ணப்பம் தனித் தனியே செய்தனர். அவை மீதான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இடம்பெற்று வந்தன.

5 சந்தேகநபர்களும் கடந்த 11 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை பிணையில் விடுவிக்க வேண்டும் என்று பிணை மனு தாரர்களின் சட்டத்தரணி மு.றெமிடியஸ் மன்றில் கோரினார்.

நிபந்தனைகளுடனான பிணையில் சந்தேகநபர்களை விடுவிக்க ஆட்சேபணை இல்லை என அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஷாந் மன்றிடம் தெரிவித்தார்.

இந்த நிலையிலேயே 5 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் நிபந்தனையுடனான பிணை அனுமதியை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கட்டளையிட்டது. (வ-8)

### டில்லிக்கு...

அழைத்து, அவருடன் பேச்சு நடத்தி கொழும்பு அரசுக்கு எச்சரிக்கை விடுப்பதற்குரிய திட்டத்தை இந்தியாவே ஆரம்பத்தில் வகுத்திருந்தது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெறும் பௌத்த நிகழ்வில் பங்கேற்பதற்காக வரும் மகிந்தவை டில்லி அரசின் உயர்மட்ட அதிகாரிகள் சந்திக்கவிருந்தனர். மகிந்தவை நேரடியாக உத்தியோகபூர்வமாக அழைத்தால் அது நெருக்கடியாக அமையுமென்பதாலேயே பிராந்திய அரசு ஊடாக மகிந்தவை அந்த நாடு அழைத்திருந்தது.

டில்லி செல்வதற்கு முன்னர் மகிந்தவை தாம் அழைத்துப் பேசினால் அது இந்தியாவுக்கும், இலங்கைக்கும் விடுக்கப்படும் மறைமுக எச்சரிக்கையாக அமையுமென்றே பீஜிங் கருதுகின்றது. சீனாவின் கொண்டாம் மாநிலத்தில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சிக்கு தலைமை அதிதியாக மகிந்தவை அழைக்குமாறு மாநில அரசுக்கு சீனாவின் நடுவண் அரசின் அயலுறவுத்துறைப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 21ஆம் திகதி மகிந்த ராஜபக்ச பீஜிங் செல்லவுள்ளதுடன், 24ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்து அரசியல் ரீதியில் முக்கிய சந்திப்புகளை அவர் நடத்தவுள்ளார்.

பீஜிங்கின் இந்தத் திடீர் இராஜதந்திர நடவடிக்கை டில்லியை சீற்றமடையச் செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. (வ-5)

### சைட்டம்...

நாடுகளிலுள்ள சில மருத்துவக்கல்லூரிகளும் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றில் 10ஆவது இடம் சையிட்டம் நிறுவனத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

பிரிட்டன் மருத்துவ சபையால் நடத்தப்படும் பீ.எல்.ஏ.பி பரீட்சைகளுக்கு, குறித்த கல்லூரிகளில் இருந்து வரும் மருத்துவ பட்டதாரிகள் தோற்ற முடியாது என்பதோடு, மருத்துவ சபையால் மருத்துவர்களாக இவர்களை பதிவு செய்யவும் முடியாது எனத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (வ-5)

### யாழ்...

அவர் கோரிக்கை முன்வைத்திருந்தார். அந்தக் கோரிக்கை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குப் பாரப்படுத்தப்பட்டு, மாவட்டச் செயலகத்தின் ஊடாகப் பரிசீலிக்கப்பட்டிருந்தது. முன்னுரிமை அடிப்படையில் அந்த வீதி மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று மாவட்டச் செயலகத்தாலும் அமைச்சுக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 66 வீதிகளை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க, 2 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் 200 மில்லியன் அமெரிக்க டொலரில் மறுசீரமைக்க அமைச்சரவைப் பத்திரம் சமர்பித்திருந்தார்.

அந்தப் பத்திரத்திலேயே, மேற்படி வீதி மறுசீரமைப்புக் கோரிக்கையும் உள்வாங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மானிப்பாய் காரைநகர் வீதி விரைவில் மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளது. போரின் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கிய வீதிகள் காப்பெட் இடப்பட்டு அகலிக்கப்பட்டு மறுசீரமைப்புச் செய்யப்பட்டிருந்தபோதும், யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி மிக நீண்டகாலமாக மறுசீரமைக்கப்படாமல் இருந்து வந்தது. இந்த நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் எடுத்த முயற்சிக்கு அமைவாக, வீதி மறுசீரமைப்பில் அந்த வீதியும் உள்வாங்கப்பட்டுள்ளது. (வ-5)

### தமிழரசுவின்...

அது பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட இந்தக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-5,101)

### நல்லூரிலுள்ள...

நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியில் நினைவு நாள் நிகழ்வு உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இன்று காலை 10 மணிக்கு, திலீபனின் நினைவுத் தூபியில் நினைவு நாள் நிகழ்வு இடம்பெறும். மாலை 4 மணிக்கு அவர்களது அலுவலகத்தில் நினைவேந்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-5,32)

# இன்றைய மோதல்கள்

**சரஸ்வதி ச.ச.நி. கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகஅணியைஎதிர்த்துவேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எல்லாளன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது.

**திக்கம் மத்தியின் கால்பந்துத் தொடர்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில்செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நசரேத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்**

மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிரேட் போய்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



யாழ். இந்துக் கல்லூரி அணி

# யாழ். இந்து - ஆனந்தா ஒருநாள் ஆட்டம் இன்று

யாழ்ப்பாணம், செப். 15

யாழ்ப்பாணம் இந்து கல்லூரி அணிக்கும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணிக்கும் இடையிலான சிவகுருநாதர் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான ஒருநாள் ஆட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மைதானத்தில் இன்று காலை இடம்பெறவுள்ளது. 2012ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகி நடைபெற்று வரும் இந்தத் தொடரில் 4 முறை கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2013ஆம் ஆண்டு சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்திருந்தது. இதனால் சொந்த மண்ணில் வைத்து இந்த முறை பதிலடி கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இந்துக் கல்லூரி அணிக்கு ஏற்பட்டுள்ளது. இந்த முனைப்பிலேயே அந்த அணியும் களமிறங்குகிறது.

(ம-422)

# சிவானந்தா அணி போராடி வென்றது

யாழ்ப்பாணம், செப். 15

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கே.கே.எஸ். சிவாணந்தா அணி வெற்றிபெற்றது.

சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சிவானந்தா அணியை எதிர்த்து புத்தூர் கிழக்கு சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் சிவானந்தா அணி வெற்றி பெற்றது. (ம-23)

# கொக்குவில் இந்து முன்னேற்றம் கண்டது

யாழ்ப்பாணம், செப். 15

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 15 வயதுக்கு உட்பட்ட மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 33 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டிலக்சன் 15 ஓட்டங்களையும், பிருந்தாவன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மேம்சன் 5 இலக்குகளையும், ஜெயரூபன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 31 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களை பெற்று 2 இலக்குகளால் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. அதிகபட்சமாக ஜெயரூபன் 25 ஓட்டங்களையும், கௌதமன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரெக்சன் 3 இலக்குகளையும், கஜதீபன், கபிலதாசன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

(ம-422)



கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி

## தேசியமட்ட கூடைப்பந்தாட்டத்தில் வடக்கு மாகாணம் வென்றது வெள்ளி

யாழ்ப்பாணம், செப். 15

43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் வடக்கு மாகாண பெண்கள் அணி வெள்ளிப் பதக்கம் வென்றது.

அம்பலாங்கொடை குலரத்தினக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மேல் மாகாண அணி மோதியது. மேல்மாகாண அணி 77:47 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றதை அடுத்து வடக்கு மாகாண அணி இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

(ம-23)

## மேரிஸ் – போக்குவரத்துச்சபை நாளை எதிர்த்துப் பலப்பரீட்சை



யாழ்ப்பாணம், செப். 15

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று நாளை நடைபெறவுள்ளது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து இலங்கை போக்குவரத்துச் சபை அணி மோதவுள்ளது. அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)



# றோயல் அபாரம்

யாழ்ப்பாணம், செப். 15

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றோயல் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரண்டு அணிகளும் கோலெதனையும் பதிவுசெய்யாத நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 15ஆவது நிமிடத்தில் ஊரெழு றோயல் அணியின் எடிசன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்தார். ஆட்டநேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஊரெழு றோயல் அணி.

(ம-23)




# இலங்கை கிரிக்கெட் தொடர்பில் ஆராய கொழும்பில் நாளை கலந்துரையாடல்

இலங்கை கிரிக்கெட்டின் தற்போதைய போக்கு குறித்து ஆராய்வதற்கான சிறப்புக் கலந்துரையாடலொன்று, கொழும்பில் நாளை நடைபெறவுள்ளது என்றும், இதன்போது மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளர்களில் ஒருவருமான தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு, அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன்போதே அவர் இந்த முடிவுகளை அறிவித்தார்.

"கொழும்பில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலுக்கு முன்னாள் தலைவர்கள், முன்னாள் தெரிவுக்குழுத் தலைவர்கள், அணியின் வீரர்கள், மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், விளையாட்டுத் துறைசார்ந்த செய்தியாளர்கள் என முக்கியமானவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் அணி எதிர்கொண்டுள்ள சவாலிலிருந்து மீட்பது.



வெற்றிக்குரிய வழிவகைகளை ஏற்படுத்துவது என்பன தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்படுவதுடன், அனைவரினதும் கருத்துகளையும் உள்வாங்கிக்கொள்ளவுள்ளோம்.

அன்றைய தினம் காலை முதல் மாலை வரை நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்களைத் தொகுத்து, இலங்கை கிரிக்கெட் சபையிடம் கையளிக்கவுள்ளோம். அதில் அடங்கியுள்ள கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு, கிரிக்கெட் சபைத் தலைவரிடம் நான் கோரவுள்ளேன். அதன்பின்னர் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து தீர்மானிக்கலாம்" - என தயாசிறி தெரிவித்தார்.

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் செல்வது இலங்கை ரசிகர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக செய்தியாளர் ஒருவர் "பாகிஸ்தானுடனான தொடரில் இலங்கை விளையாடவுள்ளது. பாகிஸ்தானுக்குச் செல்வதில் இலங்கை அணிக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன?" என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதில் வழங்கிய தயாசிறி.

"இலங்கை அணிக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் பட்சத்திலேயே, எமது வீரர்களை பாகிஸ்தானுக்கு அனுப்ப முடியும். இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு, தீர்மானங்களை அறிவிப்போம். பாகிஸ்தானுடன் எமக்கு நெருங்கிய உறவு இருக்கிறது. எமக்கு கஷ்டமான நேரங்களில் உதவிகள் புரிந்திருக்கிறார்கள். அண்மையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த போது, பெரிய அளவில் நிவாரணப் பொருள்களை பாகிஸ்தான் வழங்கியிருந்த து. இவை அனைத்தையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்" என தயாசிறி மேலும் தெரிவித்தார். (ம)

## 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடர் பாரிஸ் நகரில்

2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை பாரிஸ் நகரில் நடத்த முடிவாகியுள்ளது.

ஒலிம்பிக் தொடர் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகிறது. இந்தத் தொடரை நடத்துவதற்கு உலக நாடுகளுக்கு இடையே கடும் போட்டி நிலவும். கடந்த வருடம் ஒலிம்பிக் தொடர் பிரேசிலின் வர்த்தக நகரான ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்றது. அடுத்த ஒலிம்பிக் தொடர் 2020ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறுகிறது. இந்த நிலையில் 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை நடத்தும் உரிமத்தை பாரிஸ் தட்டிச் சென்றது.

பாரிஸில் ஒலிம்பிக் தொடர் நடைபெற இருப்பது இது மூன்றாவது முறையாகும். இதற்கு முன்பு 1900ஆம் ஆண்டு, 1924ஆம் ஆண்டுகளில் ஒலிம்பிக் நடைபெற்றது. தற்போது 100 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் நடைபெற உள்ளது.

2028ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் தொடரை அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

## திசர பெரேரா சிறப்பான ஆட்டம் பதிலடி கொடுத்தது உலக அணி




பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் திசர பெரேராவின் சிறந்த ஆட்டத்தின் மூலம் வெற்றிபெற்றது உலகப் பதினொருவர் அணி.

பாகிஸ்தான் - உலகப் பதினொருவர் அணி ஆகியவற்றுக்கு இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. முன்னதாக முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. எனவே தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் உலகப் பதினொருவர் அணிக்கு இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. அசாம் 45 ஓட்டங்களையும், செசாட் 43 ஓட்டங்களையும், மலிக் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் திசர பேரேரா, பத்ரி இருவரும் தலா இரண்டு இலக்குகளையும், கட்டிங், தாகிர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய உலகப் பதினொருவர் அணி ஆரம்பத்தில் பின்னடைவைச் சந்தித்த போதிலும் திசர ரொரேராவின் சிறந்த அதிரடியாட்டத்தால் ஒரு பந்து மீதமிருக்க இலக்கை அடைந்து வெற்றி பெற்றது. அம்லா 55 பந்துகளை எதிர்கொண்டு 72 ஓட்டங்களைக் குவித்தார். பெரேரா வெறும் 19 பந்துகளில் 47 ஓட்டங்களைக் குவித்தார். ஆட்டநாயகனாகப் பெரேரா தெரிவானார். (ம)

## 2019ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ணத் தொடரில் விளையாட வேண்டும் டோனி

### *ரவிசாஸ்திரி விருப்பம்*

"இங்கிலாந்தில் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரில், டோனி விளையாட வேண்டியது கட்டாயம். அதற்குத் தகுதியானவராகவே அவர் உள்ளார். இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் தலைமைப் "பயிற்சியாளர் ரவிசாஸ்திரி.

"டோனி தற்போது சிறந்த சிறந்த உடல் தகுதியிலும், திறனி லும் (போர்ம்) உள்ளார். இதனால் அவர் அணிக்குத் தேவைப்படுகிறார். 2019ஆம் ஆண்டு உலகக்கிண் ணத் தொடர்வரை டோனி அணிக்குத் தேவைப் படுகிறார். அவர் சிறப்பாக செயல்படும் போது மாற்று வீரர் குறித்து சிந்திக்க வேண்டிய அவசியமில்லை.

உலக அளவில் டோனி சிறந்த இலக்குக் காப்பாளராகத் திகழ்கிறார். ஒருநாள் தொடரில் அவர், தான் மிகச் சிறந்த வீரராக இருக்கிறார். இதனால் அவருக்கு மாற்று என்று எந்த கேள்வியும் எழுப்பத் தேவையில்லை. கவாஸ்கர், சச்சின் ஆகியோர் 36 வயதில் விளையாடும்போது மாற்று வீரர் குறித்து நாம் சிந்திக்கவில்லை. அவர்கள் அந்த அளவுக்கு சிறப்பாக ஆடினர். அதேபோல்தான் டோனியின் செயல்பாட்டிலும் நம்பிக்கை இருக்கிறது. ரெய்னா, யுவராஜ்சிங் அணியில் இடம்பெறுவார்களா? என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் வீரர்களுக்கான கதவு மூடப்படவில்லை. அவர்கள் உடல் தகுதியுடன் இருந்தால் மட்டுமே இடம்பெற முடியும்' என ரவிசாஸ்திரி மேலும் தெரிவித்தார். (ம)





## றொனால்டோ அதிரடி ரியல் மட்ரிட் அபாரம்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகம் அபார வெற்றிபெற்றது.

ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்தை எதிர்த்து இங்கிலாந்தின் கால்பந்தாட்டக் கழகமான அப்பொல் மோதியது. ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் றொனால்டோ ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவு செய்தார். வேறெந்த கோல்களும் முதல் பாதியில் பதிவாகவில்லை. 1:0 என்று ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி மற்றுமொரு கோலைப் பதிவு செய்தார் றொனால்டோ. அணித்தலைவர் ராமோஸ் 61ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட் அணி. (ம)

## "இந்தியா வெற்றிபெறும்"

"ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்தியா கைப்பற்றும் என்று நம்பிக்கை தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரும், மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரும் நடைபெறவுள்ளன. முதலாவது ஒருநாள் ஆட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணி தொடர்பில் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார் கங்குலி. (ம)

# வடக்குக்கு வெண்கலப்பதக்கம்

43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

அம்பலங்கொடை குலரெத்தினா க்கல்லூரி மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதியது. இதில் வடக்கு மாகாண அணி 53:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

**Wanted** English Lecturer
(Male /Female) Full time/Part time
CV Should be Sent at
admin@elasjaffna.com
on or before - 17.09.2017
ELAS Jaffna /Chunnakam
021 221 2410/076 697 3040

**பணிப்பெண்தேவை**
யாழ்ப்பாணத்தில் 2 பேர்கொண்ட குடும்பத்திற்கு தங்கிநின்று சமையல் வேலை மட்டும் செய்யக்கூடிய 45 வயதிற்கு உட்பட்டவர் தேவை.
071 110 0066


**தச்சுவேலை பட்டடை தேவை**
பாவித்த நிலையில் உள்ள 12" தச்சுவேலை இயந்திரம் விலைக்கு தேவையாக உள்ளது.
071 110 0066

நீங்கள்! AFtech
* O/L, A/L, பட்டம், பட்டயம், உயர் பட்டம் பெற்று வீட்டில் வேலையற்று எதிர் காலம் என்ன ஆகும் என்ற கவலையுடன் முகட்டை பார்த்து ஏங்கிக் கொண்டு இருக்கிறீர்களா?
* உங்களுக்குள் உள்ள வேகம், விவேகம், திறமையை வெளிக் கொண்டு வர விரும்புவரா?
* கணினித் துறையில் குறைந்த பட்ச தகைமைகள் உள்ளவரா?
* எப்படி வேலை தேடுவது! எங்கு தேடுவது! என்று ஏங்குகிறீர்களா?
உங்களுக்கு!
உலகக் கணினி முன்னணி நிறுவனாங்களுடன் இணைப்பை ஏற்படுத்தியுள்ள AFtech உங்களுக்கு யாழில் உடனடி வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது.
▲ Client Relation Associate (CRA) or Receptionists
▲ Marketing Manager and Associates
▲ Consultants
▲ DTP / Web page development and designing.
Just Mail us:aftechjaffna@gmail.com or Walk in our interviews.
16.09.2017 @1.30 pm 17.09.2017 @ 10.00 am
124 1/1, Palaly Road, ILuppaiyadi Junction, (Near Suharni Hospital)
Ph: 0764673221

யாழ். நகரின் வர்த்தகப் பிரிவிற்கான தனித்துவமான நிறுவனம்
NEC
1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2 மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.
A/L DAY CLASS
ஆரம்பம்: 16.09.2017 சனி 8.00 மணி
– பொருளியல் : NB. கஜீதரன்
– வணிகக்கல்வி : S.K. பாலசுபேஷ்
– கணக்கீடு : Mr. பாலகஜன்
Note: பாடம் மாறி படிப்பவர்களுக்கு ஆரம்ப தேர்ச்சியில் இருந்து கற்பிக்கப்படும்.
A/L 2018, 2019
கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
T.P. 077 469 6695

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
நடைபெறவுள்ள வடமாகாண
ஆசிரியர் தெரிவு பரீட்சைக்கு
சனி, ஞாயிறு காலை 10.00 2.00
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி 10.00 2.00
வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஞாயிறு 10.00 2.00
SLAS Ltd
ஞாயிறு 9.00 4.00
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

# கடந்த 25 ஆண்டுகளில்
# டோனிபோல் எவருமில்லை புகழ்கின்றார் அத்தப்பத்து





"பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் கடந்த 25 ஆண்டுகளில் டோனிபோல் எந்தவொரு வீரரும் இல்லை" என்று புகழாரம் சூட்டியுள்ளார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அத்தப்பத்து.

இலங்கை இந்திய அணிகளுக்கு இடையில் அண்மையில் முடிவடைந்த ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றுவதில் டோனியின் பங்களிப்பு மிகவும் சிறந்த வகையில் அமைந்தது. இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்தத் தொடரிலும் டோனியின் மீது எதிர்பார்ப்புக்கள் அதிகமாகியுள்ள நிலையில், கடந்த 25 ஆண்டுகளில் டோனிபோல் எந்தவொரு வீரரும் ஆட்டத்தை சிறந்த முறையில் முடித்து வைக்கக்கூடியவர்களாக இருக்கவில்லை என்று தெரிவித்தார் அத்தப்பத்து.

"டோனியைப்போல் வெற்றியுடன் ஆட்டத்தை முடித்து வைக்கக்கூடியவரை கடந்த 25 ஆண்டுகளில் நான் காணவில்லை. ஆட்டத்தின் போக்கைக் கணித்து அதற்கேற்ப விளையாடுவதில் அவருக்கு நிகர் அவரே" என அத்தப்பத்து மேலும் தெரிவித்தார். (ம)

குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் கௌரவமான தொழில்வாய்ப்பொன்றை பெற்றுக்கொள்வதற்கான நேரடி வாய்ப்பு
Diploma in
Mobile Phone Repairing
[கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி]
பாடநெறிக்காலம் 4 நாள்கள்
நேரம் காலை 9.00 - மாலை 4.00
பதிவுக் கட்டணம் 2,500/=
பாடநெறிக் கட்டணம் 11,500/=
நீங்கள் நிரந்தர முழுநேர தொழில் புரிபவரா? நீங்களும் இப்பாடநெறியை கற்பதன் மூலம் பகுதிநேரமாக உங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான ஒரு பொன்னான வாய்ப்பு
உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ
100% தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான முழுநேர Theory மற்றும் Practical களை உள்ளடக்கிய குறுங்கால தொழில் கற்கைநெறி
(Professional Course)
இலவசம்
Course hand book
Software DVD
பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழை பெற்றிடுங்கள்
மேலதிக தகவல்களுக்கு....
076 737 4444
விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள விரையுங்கள்
BRC BRITISH ROYAL COLLEGE
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 221 4191 M-076 584 22 22
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

**ஆசிரியர் தேவை**
யாழ். நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்துக்கு தரம் 6, 7, 8, 9 வகுப்புக் களுக்கு சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் உடன் தேவை.
தொடர்பு - 077 459 8440

SLAS (OPEN) இறுதிக் கருத்தரங்கு
காலம்: 16.09.2017 சனி 9.00-2.00 pm
இடம்: True Citradel Academy
மணிங் பிளேஸ், வெள்ளவத்தை
(வெள்ளவத்தை சந்தை கட்டடத்திற்கு அருகில்)
விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர் P. கமல்தாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்
T.P. 077 2016163

புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification : G.C.E.O/L 6 Passes with 5 Credits including Maths.
ஆரம்பம் - 23.09.2017
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Executive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification : G.C.E. A/L 3 Passes
Note:- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.
ஆரம்பம் - 23.09.2017
Students A waiting (A/L) Results Enrich your Proficiency in English
Certificate Course in English
15 Batches have successfully completed the course
Register your names before 23.09.2017
Further Details
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149




ரியல்மட்ரிட் அணிக்காக விளையாடிவரும் பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் மார்செலோ எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரை ரியல் மட்ரிட் கழகத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். நேற்று இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. (ம)

**வீடு வாடகைக்கு உண்டு**
கிளிநொச்சி (A9) இரணைமடு சந்திக்கு அருகில்
Rooms -3, Hall-2, Attach Bathrooms, Kitcin சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(வாகனம் நிறுத்தக்கூடிய வசதிகளுடன்)
077 245 3893

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.